
# கயிலை வாசம்



## உயர்திரு. அருணாசலம் கயிலாயபிள்ளை

அவர்களின்

# மணிவிழாச் சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயிலை வாசம்

உயர்திரு அருணாசலம் கயிலாயபிள்ளை
அவர்களது

## மணிவிழாச் சிறப்பு மலர்

வெளியீடு
மணிவிழாக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகவை அறுபதிலே அகமகிழ்ந்தே வாழ்த்துகின்றோம்
அவனியிலே புகழோங்கி ஆனந்தமாய் வாழ்ந்திடுவீர்
அருமை மைந்தர்களும் அன்பு நிறை உறவுகளும்
பெருமை சிறந்தோங்க பெருவாழ்வு வாழ்ந்திடுவீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமன்

பதவிநிலை பல கண்டு பணிகள் செய்தோன்
பண்பிலே மகுடமென உயர்ந்த செம்மல்
அறுபதிலும் தளராத உடற்கட்டும் உளநலமும்
உறுதியான செயற்பாடும்
உன்னதமாய்க் கொண்டோன்
பழுதிலாத பணி செய்து உயர்ந்தே இன்று
முழுமதியாய் நிறைவுடனே பொலிந்து நின்றான்
அகவை அறுபதிலே பணி நயந்தே நாம் இன்று
அகத்திருக்கும் சிந்தனைகள் சிறப்பாய்ப் பதித்து
“கயிலை வாசம்” என்ற மணியான மலர்தன்னை
உங்கள் கரங்களிலே சமர்ப்பிக்கின்றோம்.

-மலர்க் குழு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் உள்ளே...

**ஆசிச் செய்திகள்**

- சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள்
- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர்
- கலாநிதி ஆறு திருமுருகன்

**வாழ்த்துச் செய்திகள்**

- மாண்புமிகு முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் அவர்களின் வாழ்த்துரை
- மணிவிழா நாயகன் மாண்பு பகிர்வதில் மகிழ்ச்சி.
- ஆளுமை மிக்க அதிபர்.
- மணிவிழா நாயகனை நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.
- பணி தொடர வாழ்த்துகிறேன்.
- நல்லவர் வல்லவர்.
- உண்மையாக வாழ்ந்து காட்டியவர்.
- அர்ப்பணிப்புமிக்க கல்விச் சேவையாளர்.
- கல்விப் பணியைக் கடவுட்பணியாகக் கொண்ட நல்ல அதிபர்.
- கல்விப் பணி வரலாற்றில் தடம்பதித்தவர்.
- சாதனைகளின் முன்னோடி.
- நலமே நாடி நலமுடனே நீ வாழி.
- ஆற்றலும் அனுபவமும் நிறைந்த நிர்வாகி.
- சிறந்த முகாமையாளர்.
- தன்னம்பிக்கையும் நேர்மனப்பாங்கும் கொண்ட அதிபர்.
- நிறைவான பணியால் நிறைந்தாய் மனங்களில்.
- அறிவுத் திறனும் சிந்தனை ஆற்றலும் நிறைந்த அதிபர்.
- அரிய சாதனையாளர்.
- சிறந்த தலைமைத்துவமும் ஆளுமையும் உள்ள அதிபர்.
- செயற்றிறன் மிக்க அதிபர்
- ஒரு தசாப்த காலம் ஒப்புயர்வற்ற சேவையாற்றி ஓய்வு பெறும் இந்து அன்னையின் புதல்வன்.
- சமூகப் பாங்குள்ள நிர்வாகி.
- மனிதநேயம் மிக்க பணியாளன்.
- Our Principal - A. Versatile Personality
- சமயியாய் வாழ்ந்த சமூகப் பணியாளன்
- விழாநாயகன் திரு.அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களின்
- வாழ்வியல் தடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுரைகள்**

- விஞ்ஞான - தொழில் நுட்பக் கல்வியின் இன்றியமையாமை.
  பேராசிரியர் க.கந்தசாமி
- இலங்கையில் தமிழரின் வாழ்வியலில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் - குடிப் புள்ளியியல் பார்வை.
  பேராசிரியர் கா.குகபாலன்
- தென்மராட்சியின் வரலாற்றுத் தொன்மையை அடையாளப்படுத்தும் “மட்டுவில் ஆயத்தடி”.
  பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்.
- பாடசாலைகளின் வெற்றிகளில் ஆசிரியர்களின் வகிபாகம் - சில பரீசிலனைகள்.
  பேராசிரியர் மா.சின்னத்தம்பி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ந. பாலச்சந்திரன் |
| செயலாளர் | : | யோ. ஜெயக்குமார் |
| பொருளாளர் | : | திரு. பு. குகானந்தன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | |

திரு. த. பாலசண்முகநாதன்
பேராசிரியர் க. கந்தசாமி
திரு. இ. கயிலைநாதன்
திரு. க. ஜெயவீரசிங்கம்
திரு. இ. நித்தியானந்தன்
திரு. ஆ. தங்கவேலு
திருமதி. செ. செல்வராசா
திருமதி. வி. சந்திரசேகரம்
திரு. க. முத்துலிங்கம்
திருமதி. வி. மகேந்திரன்
திருமதி. க. நளாயினி
திரு. ஆ. வைகுந்தன்
திரு. க. சிவஞானசுந்தரம்
திரு. செ. செந்தூரன்
திரு.ச. நவரத்தினம்
திரு. தி. முருகதாஸ்
திரு. சி. கமலரூபன்
திரு. அ. வாசுதேவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகனின்

## சேவை நயப்பும் வாழ்த்துரைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் அவர்களின் ஆசியுரை

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நீண்ட காலமாக அதிபராகக் கடமையாற்றிய திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் சேவையை நயந்து வெளியிட இருக்கும் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழச்சியடைகின்றேன். திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் ஆளுமை மிக்க அதிபர் எல்லோருடனும் இனிமையாகப் பழகுவார். தெய்வபக்தியிலும் சிறந்தவர். இவர் மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வசிப்பவர். அக்கோவிலில் யான் குருத்துவப் பணியாற்றிய காலத்தில் விழாக்காலங்களில் அடிக்கடி ஆலயத்துக்கு வருவார். இதனால் அவருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்துக் கல்லூரிக்குப் பொருத்தமான அதிபர் என்றால் மிகையாகாது.

அன்னாருக்கு 03.02.2015 இல்அகவை 60 நிறைவு பெறுகின்றது. இந்நிறைவு விழாவை மணிவிழா என்றும் ஷஷ்டியப்த பூர்த்தி என்றும் அழைப்பார்கள். அதாவது 60 வருடம் நிறைவு பெற்ற விழா என்பதாகும். இதனை பெரிய விழாவாகப் பலர் செய்கின்றனர்.

மனிதனுடைய வாழ்விலே குழந்தைப் பருவம், பால்யம், கௌமாரம், விருத்தம், என்ற பருவங்கள் வருகின்றன. எல்லாப் பருவங்களும் மகிழ்ச்சியாகக் கழியும். விருத்தப்பருவத்தில் முதுமைகாரணமாக எவ்வளவோ துன்பங்களை அனுபவிக்க வேண்டிவரும். இந்தத் துன்பங்களைக் குறைத்தல் பொருட்டு முதுமையின் ஆரம்பமாகிய 60 வயது நிரம்பியதும் ஷஷ்டியப்த பூர்த்தி என்று சொல்லப்படுகின்ற சாந்தி விழா என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த விழாவிலே கும்பங்கள் வைத்து அந்தந்தத் தேவர்களைப் பூசித்து ஹோமம் செய்து அபிஷேகம் இரண்டாவது மாங்கல்ய தாரணம் நிகழ்கின்றது. அவருடைய பிள்ளைகள் தாய் தந்தையரின் மணக் கோலத்தைப் பார்த்திருக்க முடியாது. அவர்களுக்கு பெற்றோருடைய மணக்கோலத்தைத் தரிசித்து அவர்களைப் பார்வதி பரமேஸ்வரனாக நினைத்து வணங்கி ஆசிபெறும் வாய்ப்பும் கிடைக்கிறது.

இந்திய வானசாஸ்திரிகள் நமது வெள்ளிவிழா, பொன்விழா, பவளவிழா போன்றவற்றுக்கு மதிப்பளிக்காமல் 60 ஆண்டு பூர்த்தியாகிய ஷஷ்டியப்த பூர்த்தி விழாவுக்கே கூடிய மதிப்பளித்து கிரகங்களின் சுற்றோட்டத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒருவர் பிறந்த போது இருந்த கிரகநிலை 60 வருடங்களின் பின் மீண்டும் அதே இடங்களில் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இதனால் இந்த விழாவுக்கு மிகுந்த மதிப்பு உண்டு.

அதிபர் அவர்கள் இளைப்பாறிய காலத்திலும் இயன்ற கல்வித் தொண்டாற்றி மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளுடன் நோய் நொடியின்றி மகிழ்ச்சியாக சகல யோகம் மிக்க நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல மாவடிப்பிள்ளையாரின் திருவடிகளை வழுத்தி எனது ஆசியையும் தெரிவித்து அமைகின்றேன்.

வாழ்க வளமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

## அருளாசிச் செய்தி



காலத்தினாலும் வெள்ளத்தினாலும் தீயினாலும் வேறு எவற்றாலுமே அழிக்க முடியாதது கல்விச் செல்வம். அத்தகைய அருமை வாய்ந்ததான கல்விச் செல்வத்தை நல்ல முறையில் வழங்குவதற்கு அளப்பரிய சேவை செய்த அதிபர் திருவாளர் அ.கயிலாயபிள்ளை அவர்களது சேவை நயப்பு மணிவிழா மலருக்கு அருளாசிச் செய்தி வழங்குவதையிட்டுப் பேருவகை அடைகின்றோம்.

எமது நாட்டின் எதிர்காலம் மாணவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. மாணவ சக்தி மாபெரும் சக்தியாகும். அந்தவகையில் தம்மாலியன்ற சேவையாற்றி நன்மாணாக்கர்களை உருவாக்கிய அதிபர் அவர்களைப் பாராட்டுவது நன்மையே.

சாவகச்சேரி இந்துக்க ல்லூரியில் நீண்ட காலமாகப் பணி செய்து ஓய்வு பெறும் கயிலாயபிள்ளை அவர்கள் ஓர் உத்தம பண்பாளர். அவருடைய தன்னலமற்ற சேவையால் கல்லூரி தலை நிமிர்ந்து நிற்கின்றதெனில் மிகையாகாது. அவர்தம் பணி சிறந்து ஓங்கி வளர்ந்து நிற்பதால் மாணவ சமூகம் மகத்தானதாக மலர்ந்து விளங்குவது மறுக்க முடியாத உண்மை. ஆகவே அவரது ஓய்வு காலம் நல்ல முறையில் அமைந்து சுகவாழ்வில் திளைக்க வேண்டுமென்று ஆசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



தென்மராட்சியின் கலங்கரை விளக்கமாக விளங்குவது சாவகச்சேரி இந்துக் கல்லூரி. இக்கல்லூரியின் அரியாசனத்தை அலங்கரித்த சிறந்த கல்விமான் உயர்திரு. அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். மிகவுயர்ந்த பக்தியும், அர்ப்பணிப்பும் ஆளுமையும் மிக்க இவரது எதிர்காலம் மேலும் சிறக்கப் பிரார்த்திக்கின்றேன்.


நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல்கட்டும்
பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்
தரும் சிவந்த தாமரையாற் தான்

என்ற நல்வழி கூறும் கருத்துக்கு அமைய வஞ்சனையறியாதவர்க்குக் கிடைக்கும் ஒப்பரிய நலன்கள் யாவும் இவருக்குக் கிடைத்தமையை யாவரும் அறிவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று பல நிலைகளில் பதவி உயர்வு பெற்று இந்துக் கல்லூரியின் வெற்றிக்காக உழைத்தவர். எல்லா நிறைவோடும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்தி அமைகிறேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



புகழ்பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றி தமது அகவை அறுபதில் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடந்த பத்து ஆண்டுகள் சேவையாற்றி தமது அறுபது வயதில் ஓய்வு பெறுகின்றார்.

2000 ஆம் ஆண்டில் தென்மராட்சியில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின் பின் மேற்படி கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத் தேவை இவருக்கு இருந்தது. பல அதிபர்கள் ஆசிரியர்களால் கட்டிக் காக்கப்பட்ட இந்தக் கல்லூரியை கடந்த பத்து ஆண்டுகளாகச் சீரான நேரிய பாதையில் வழிகாட்டிச் சென்று அதன் வளர்ச்சியை மேலும் ஒருபடி மேலோங்கச் செய்தமை அனைவரும் அறிந்ததே.

ஏற்கனவே கல்விச் சேவையில் தான் பெற்ற அனுபவத்தினூடாகவும் இயல்பாகவே இவருக்கிருந்த பலதரப்பட்ட திறன்கள் வாயிலாகவும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விப்புல உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் எனப் பலதரப்பட்டவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்று இக்கல்லூரியை வளர்த்தெடுத்த பெருமை இவரைச் சாரும்.

கடந்த பத்து ஆண்டு காலத்தில் கல்லூரியின் பெறுபேறுகள், மாணவர்களின் அடைவு மட்டங்கள், பிற செயற்பாடுகள் என்பவற்றில் முன்னேற்றம் காணப்படுவதைப் பலதரப்பட்ட பாடசாலைப் புள்ளி விபரங்களும் எடுத்துக் காட்டுகின்றன. இவருடைய காலத்தில் இப்பாடசாலைக்கான ஒரு கேட்போர் கூடம் அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் பழைய மாணவர்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இது பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும்.

திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் சிறந்த அதிபருக்கான பரிசினையும் பெற்றுக் கொண்டமை இவருக்கும் இக் கல்லூரிக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

இவரது நற்பணிகள் இத்தருணத்தில் நினைவு கூரப்படுவதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் பயனுள்ளதாகவும் அமைவதுடன் இன்னும் பல ஆண்டுகள் சிறந்த ஆரோக்கியத்துடன் மனைவி பிள்ளைகளுடன் மகிழ்ந்திருக்க இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகன் மாண்பு பகிர்வதில் மகிழ்ச்சி



கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் பிறந்து நமது கல்விப்பாரம்பரியத்தில் எமது மாணவ சமுதாயத்தின் மத்தியில் நிமிர்ந்த பண்பாட்டுடனான நெடும் சேவையை ஆற்றி ஆசிரியர்கள் அதிபர் சமுதாயத்திற்கு பெருமை சேர்த்து மணிவிழாக் கண்டு ஓய்வுபெற்றுச் செல்லும் மதிப்பிற்குரிய அதிபர் திரு.அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களை வாழ்த்துவதிலும், அவர் சேவையை நயப்பதிலும் எனக்கும் ஒரு இடம் கிடைத்ததையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். அதிபர் அ.கயிலாயபிள்ளை அவர்களின் தடங்களை திரும்பிப் பார்க்கின்ற போது அது மனதுள் ஒரு சிலிர்ப்பையும் பெருமையையும் தருகின்றது. 1979 இல் களனிப் பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டதாரியாக வெளியேறியதிலிருந்து பெரும்பாலான காலங்கள் அவர் கிராமத்துப் பள்ளிகளிலும் கிராமத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் இரண்டறக் கலந்துள்ளார்.


நாட்டில் அன்று தொடங்கிய நெருக்கடியான இருள் சூழ்ந்த நேரங்களில் வன்னியில் பெரும் காடுகள் ஊடாகவே கிராமங்களைச் சென்றடைய வேண்டிய நிலையில் ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தை சிரமேற் கொண்டு கிளிநொச்சியின் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், பூநகரி அரசினர் தமிழ்கலவன் பள்ளி போன்றவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அதன் பின்பும் போர் உக்கிரமாகச் சூழ்ந்த காலத்தில் கிளி/ கிளாலி. றோ.த.க. பள்ளி முரசுமோட்டை மகா வித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். **1992 - 1994** வரை கிளிநொச்சி முழங்காவில் கொத்தணியின் அதிபராக இருந்து அந்த நிர்வாகத்திற்குட்பட்ட பள்ளிகளின் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த ஆளுமையை அவர் வழங்கினார் என்பது இன்றுவரை கிளிநொச்சியின் பூநகரியின் கண்டாவளையின் மக்களால் நினைவுகூரப்படுகின்ற விடயம். கிளிநொச்சி கல்வி வலயத்தில் கண்டாவளை பூநகரி பளை என்பவற்றில் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்து கிளிநொச்சி மாவட்டம் நன்கறிந்த அதிபராக, ஆசானாக, முன்னோடியாக விளங்குகின்றார்.

அதிபர் திரு.அ.கயிலயாபிள்ளை அவர்கள் கல்வி நிர்வாகத்தின் ஓயாத சேவையாளனாக இருந்தது ஒரு புறத்திலும், இன்னொரு புறத்தில் கல்விச் சேவையில் மாணவர்களை, ஆசிரியர்களை, பள்ளிச் சமூகத்தை திறம்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடத்துவதற்கு தேவையான உயர் கற்கைளையும் மேற்கொண்டு அதில் சித்திபெற்றவராகவும், ஆசிரியத்துவத்தில் அர்ப்பணிப்புக் காரணமாக விருதுகளையும் பாராட்டுக்களையும் அவர் பெற்றுள்ளது பெருமைக்குரியது முன்னுதாரணமானது. மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் நெருக்கடியான காலங்களில் அதிபர் கயிலாயபிள்ளையின் கற்பித்தல் காலத்தில் பக்கத்துணையாக இருக்கும் அவர் துணைவியார் திகவதி போற்றுதற்குரியவர். தம் தந்தைக்கு, சிறந்த உயர் கல்வி பெற்று நிமிர்வைத் தரும் பிள்ளைகள் போற்றுதற்குரியவர்கள். எனவே மதிப்பிற்குரிய அதிபர் அ.கயிலாயபிள்ளை அவர்கள் இந்தச் சமூகத்தின், எமது பண்பாட்டின் வழி முழுமை பெற்ற ஒரு ஆசானாகத் திகழ்கின்றார் என நான் பூரிப்படைகின்றேன். மணிவிழாக் கண்டு புகழும் அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரிய சேவையில் இருந்து யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தன் சேவைக்கு மகுடம் பெற்று ஓய்வு பெறும் திரு.அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியத்துடன் நீடுழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஞானம் சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமை மிக்க அதிபர்

அதிபர் திரு.கயிலாயபிள்ளை அவர்களுடைய கல்விச் சேவை அவரது அகவை அறுபதில் நிறைவுக்கு வருவதையிட்டு வெளியிடப்படும் மணிவிழா மலரில் அவருக்கு வாழ்த்துக்களைக் கூறுவதில் மகிழ்வடைகிறேன்.



சாவகச்சேரி இந்துவின் வரலாற்றுப் பதிவில் தனது அதிபர் சேவையூடாக தடம் பதித்து மக்கள் மனதிலும், மாணவர்கள் மனதிலும் நீங்காத நினைவைப் பதித்து விலகிச் செல்கிறார். ஆசிரியராக இருக்கும் போதே இவரது சேவை மற்றவர்களது கண்களிலும், மனதிலும் ஆழப்பதிந்ததொன்றாக இருந்தது. இதனால் இவர் குறுகிய காலத்திலேயே அதிபர் பதிவியேற்று மிக இக்கட்டான காலத்தில் கிளி/முழங்காவில் மகா வித்தியாலய அதிபராக தனது ஆளுமையைப் பதித்துள்ளார்.

ஆளுமை மிக்க அதிபர்களுடைய முக்கிய பண்பு மற்றவர்களை மதிக்கும் பண்பு இப்பண்பு இவரிடத்திலே மேலோங்கி வளர்ந்துள்ளது. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற தத்துவம் இவரது மனதிலே ஆழப்பதிந்ததொன்று. இதனால் தன்னிடம் வருகின்ற மாணவர்களை அவ்வாறான கண்ணோட்டத்திலே நோக்கி அவர்களுக்கு கல்விச் சேவையைப் புரிந்துள்ளார்.

இதனால் மணாவர்களும் இவரது சொற்கேட்டு அவரைத் தம் குருவாக ஏற்று சாவகச்சேரி இந்துவிற்கு சிறப்பைச் சேர்த்துள்ளனர். சாவகச்சேரி இந்துவின் அதிபர் வரிசையிலே இவரும் பிரபல்யம் பெற்ற ஒருவராக தனது சேவையை ஆற்றியுள்ளார்.

சமகாலத்திலே குடாநாட்டிலுள்ள அதிபர்கள் யாவரும் யாழ்குடாக் கல்வியின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளனர். அவர்களில் எமது அதிபரும் ஒருவராக பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளார்.

பலரும் வடபுலத்துக் கல்வி நிலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சாவகச்சேரி இந்துவை நிமிர்ந்து நேர்ப் பார்வையில் நடத்திச் சென்று மக்களின் மனம் கவர்ந்து விலகிச் செல்லும் ஆசானை என்றென்றும் நிறைவுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

த.குருகுலராசா,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனை நீடுழிவாழ வாழ்த்துகின்றேன்



சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் உயர்திரு அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்கள் 02.02.2015 இல் அறுபதாவது அகவையில் தனது அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு எனது பாராட்டுதலையும் ஆசிகளையும் அவருக்கும் அவரது குடும்பத்தவருக்கும் வழங்குவதையிட்டு அகமகிழ்வெய்துகிறேன்.

கல்வி அறிவிலும், அதனால் எற்பட்ட தன்னடக்கத்தாலும் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் யாவராலும் மதிக்கப்படும் ஒருவராய் வாழ்ந்து தனது பணியை மனநிறைவுடனும் மக்கள் அபிமானத்துடனும் கல்வி கற்பித்த மாணவர்கள் மனங்களில் என்றும் நிலைபெற்ற ஒருவராய் விளங்கி 02.02.2015 தனது பணியை நிறைவு செய்கிறார்.

திரு. அ. கயிலாயபிள்ளை அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக 1986 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற போது நான் இயக்கச்சி அ.த.க. பாடசாலையின் அதிபராக பதவி வகித்த காலம் தொடக்கம் சிறந்த நண்பர்களாக இணைந்து கொண்டோம். அதன் பின்னர் அவர் முழங்காவில் கொத்தணியின் அதிபராக 1992 ஆம் ஆண்டில் பதவி வகித்த போது, யான் பூநகரிக் கோட்டத்தின் கல்வி அதிகாரியாக விளங்கியபோது மேலும் எமது உறவு ஒருபடி உயர்ந்து விளங்கியது. பளைக் கோட்ட கல்வி அதிகாரியாக 1998 ஆம் ஆண்டு நியமனம் பெற்று சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் பதவி வெற்றிடமானபோது யான் கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளராய் இருந்த நிலையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் அவரை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து விடுவித்தேன். 15.07.2004 ஆம் ஆண்டு திரு. அ. கயிலாயபிள்ளை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராக நியமனம் பெற்றார். அன்று தொடக்கம் நானும் அவரும் சிறந்த நண்பர்களாகவும் சிறந்த குடும்ப நண்பர்களாகவும் விளங்கி வருகின்றோம்.

திரு. அ. கயிலாயபிள்ளையுடன் ஏறத்தாழ 30 வருடங்களாக நண்பராகவும், எனது ஆசிரியர் எனது அதிபர், எனது கோட்டக் கல்வி அதிகாரி எனும் பதவி உறவுடனும் பழகியவன் எனும் ரீதியில் அவரது சிறப்பியல்புகள் சிலவற்றை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அவர் ஆசிரியராக இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் அவரது கற்பித்தல் திறன், மாணவர்களுடனான அணுகுமுறை யாவராலும் பாராட்டப்பட்டது. வகுப்பறையில் நுழையுமுன் அவரது பாட ஆயத்தம் பலராலும் புகழப்பட்ட ஒன்று. அவ்வாறே அவர் சேவைக்கால கல்வி ஆலோசகராக இருந்த போது ஆசிரியர்களை வழி நடத்திய முறை பலராலும் உதாரணமாகக் கொள்ளப்பட்டது. அப்போதைய கல்விப் பணிப்பாளர் உயர்திரு.சி.கமலநாதன் அவர்களால் இவ்விடயம் பல இடங்களில் உதாரணமாக கூறப்பட்டது. முழங்காவில் மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் விளங்கிய போது அம்மகா வித்தியாலயத்தில் செய்யப்பட்ட உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை, மிளகாய் செய்கைக்காக அரசாங்க அதிபரால் பாராட்டும், பரிசில்களும் வழங்கப்பட்டமை பசுமரத்தாணியாய் நினைவில் நிற்கின்றது. சிறந்த ஒரு நிருவாகியாகவும் பாடசாலைகளின் வளர்ச்சியில் இரவு, பகல் பாராது உழைப்பாளியாகவும் விளங்கிய ஒருவர். முழங்காவில் கொத்தணிப் போட்டிகள், கோட்ட மட்டப் போட்டிகளில் காணப்பட்ட தனித்துவத்தை இன்றுகூட எங்கும் காண முடியாத நிலையை பலரும் உதாரணமாக கூறுவர். அவரோடு சேர்ந்து இயங்கிய பல ஆசிரியர்கள் இன்று தென்மராட்சி வலயத்தில் புகழ் பூத்த அதிபர்களாய் விளங்குவது கண்கூடு. கிளிநொச்சி மாவட்டத்தில் திரு.அ.கயிலாயபிள்ளை பெற்ற அனுபவங்கள் இன்று தென்மராட்சி வலயத்தில் அதிக மாணவரையுடைய தேசியப் பாடசாலை ஒன்றை 10 வருடங்களுக்கு மேலாக தளம்பலின்றி நடத்த உதவி உள்ளது.

கல்விப் புலத்தில் இருந்து அறிவு, சிறந்த ஆளுமை, தன்னடக்கம், திட்டமிடுதலின் நிபுணத்துவம், பொறுமை இவையாவும் அதிபரின் அணிகலன்களாய் விளங்குகின்றன. இதனால் நற்பெயருடன் பல சாதனைகளைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் அதிபர் மேலும் பல ஆண்டுகள் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை வேண்டுகிறேன். அதிபர் சேவையில் 'பிரதீபா பிரபா' விருதுக்குரியவராக விளங்கியவர். சமூக சேவையில் மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினராகவும் அன்னதான சபைப் பொறுப்பாளராயும் அவர் ஆற்றும் ஆன்மீகப் பணி பாராட்டப்படத்தக்கது.

தலைமைத்துவம் என்பது யாவருக்கும் கிடைப்பதில்லை. கிடைக்கும் சந்தர்ப்பங்களை பலர் பயன்படுத்துவதும் இல்லை. இந்நிலையில் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் சிறந்த தலைமைத்துவ பண்புகளை உடையவராய் மிளிர்ந்தார். தன்னைச் சார்ந்த ஆசிரியர்கள், மாணவர்களையும் சிறந்த தலைமைத்துவப் பண்புடையவர்களாக மாற்றிய பெருமைக்குரியவர்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றிற்கு உதாரணமானவர். காட்சிக்கு எளியனாய், கடுஞ்சொல் அற்றவனாய் விளங்கிய பெருமையுடன் தனது பணியில் ஓய்வு பெறும் திரு.அ.கயிலாயபிள்ளை உடல் நலம் குன்றா உத்தமனாய் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

ப.அரியரத்தினம்
ஓய்வு நிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்
மாகாண சபை உறுப்பினர்
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிதொடர வாழ்த்துகிறேன்



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் பணி நயப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்புடனும் சேவை மனப்பாங்குடனும் பணியாற்றி இக்கல்லூரியின் உயர்வுக்கு வழிசமைத்தமை பாராட்டத்தக்கதாகும். தென்மராட்சிப் பிரதேசத்தில் மிகவும் முக்கியமான கல்வி நிலையமாக விளங்கும் இக்கல்லூரி கடந்த காலங்களில் பல்வேறு கல்விச் சாதனைகளையும் இணைபாடவிதான செயற்பாடுகளில் பல வெற்றிகளையும் பெற்று பிரதேசத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமையினைத் தேடித் தந்துள்ளது. திரு.அ.கயிலாயபிள்ளை சிறந்த முகாமையாளராக சிறந்த சமூக தொடர்பாளனாக பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள் அனைவரையும் ஒன்றுசேர்த்து கல்லூரியினை வெற்றிப் பாதையில் வழிநடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு பாடசாலையின் அதிபர் அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியின் அச்சாணியாக விளங்குகின்றார். பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்திய அதிபர்களை சமூகம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவ்வரிசையிலே திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் அளப்பரிய சேவை தென்மராட்சிப் பிரதேசத்திற்கு கிடைத்த பெரும் பாக்கியம் என்றே நான் கருதுகின்றேன்.

இப்பாடசாலையில் நடைபெற்ற பல வைபவங்களில் நான் கலந்துகொண்டிருக்கின்றேன். இவ்வைபவங்களை சிறந்த முறையில் திட்டமிட்டு எல்லோரினதும் பங்களிப்பினைப் பெற்று சிறப்பாக ஒழுங்குபடுத்தியமை பாராட்டத்தக்கதாகும். இவரின் வழிகாட்டலிலும் தலைமைத்துவத்திலும் 'தாமோதரன்' மலர் வெளியீடு ஒவ்வொரு ஆண்டும் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் ஆக்கங்களையும், கல்விச் சாதனைகள், அடைவு மட்டங்களையும் கொண்ட வரலாற்றுப் பதிவாக வெளிவந்து கொண்டிருப்பது பெருமைக்குரியதாகும்.


இவர் தனது அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் கல்விப் புலத்திலும் அதிபர் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியிலும் ஒரு வளவாளராக இருந்து தனது அனுபவத்தினை எமது கல்விச் சமூகத்திற்கு வழங்க வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கோரி நிற்கின்றேன். இவரின் ஓய்வுக் காலம் மிகவும் மனமகிழ்ச்சியுடையதாகவும் தனது குடும்பத்தினருடன் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமூக சமய வேலைத்திட்டங்களை எமது சமூகத்திற்காக ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

சி.சத்தியசீலன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
வடமாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லவர் வல்லவர்

தென்மராட்சிப் பிரதேசம் அழகிய கிராமங்களைக் கொண்டது. கிராமத்திற்கே உரித்தான பண்புகளைக் கொண்டது. கடின உழைப்பு மிகுந்த மக்கள் பலர் இங்கே உள்ளனர். அதுமட்டுமல்ல இப்பிரதேசத்திற்கு கல்வி வளஞ்சேர்த்த அறிஞர் பெருமக்களும் இங்கே நிறைந்துள்ளனர். இவ்வகையில் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் பணியும் காலத்தாற் போற்றத்தகுந்தது.



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூற்றாண்டு காலப் பழைமை மிக்கது. இக்கல்லூரியின் நின்று நிலைத்த புகழுக்கு இக்கல்லூரியின் அதிபர்களும் ஆசிரியர்களும் காரணகர்த்தாக்களாக விளங்கினர். ஒவ்வொரு அதிபர் காலத்திற்கென தனியான வரலாறுகளும் உண்டு. அவ்வகையில் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலம் இப்பாடசாலையின் அதிபர் பதவியை அலங்கரித்துள்ளார். அக் காலத்திற்கான வரலாற்றுப் புகழுக்கும் உரியவராகின்றார்.

தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் ஆரம்பக்கல்வியை தமது பிரதேசப் பாடசாலைகளில் பெற்று, இடைநிலைக் கல்விக்கு யாழ் நகரப் பாடசாலைகளை நாடிய வரலாறு ஒன்று இருந்தது. ஆனால் இன்று அந்நிலை அருகி வருகின்றது. அவர்களது முதலாவது தெரிவு சாவகச்சேரி இந்துக் கல்லூரியாகவே இருக்கிறது. இவ்வாறானதொரு நிலை எய்துவதற்கு முன்னின்று உழைத்தவர்கள் வரிசையில் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களும் இடம்பெறுகின்றார்.

அதிபர் அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட அதிபர் சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்த காலப்பகுதியில் அதிபர்களின் நலன் சார்ந்து எடுக்கப்பட்ட நல்ல முடிவுகளுக்குத் துணைநின்றவர். அதேவேளை பாடசாலைகளின் மாணவர்களின் நலன்களையும் கருத்திற் கொண்டிருந்தார். தனக்கு நியாயம் என்று கருதும் விடயங்களை எவ்விடத்திலும் தயங்காது முன்வைத்தார்.

அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் வல்லவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததொன்றே. ஆனால் அவர் நல்லவர் என்பதை அவருடன் நெருங்கிப் பழகுபவர்களே தெரிந்து கொள்வர். அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்துள்ளன. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி நின்ற நிலைத்த நீடித்த புகழ்மிக்க கல்லூரி. இக்கல்லூரியின் வரலாற்றில் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் பெயரும் பொறிக்கப்படும் எனத் திடமாக நம்பலாம்.

அதிபர் அவர்களுக்குப் பாடசாலைச் சமூகம் ஒன்றிணைந்து எடுக்கும் இம்மணிவிழாவானது அவர் மீது கொண்ட பேரன்பை வெளிப்படுத்துகின்றது. அதிபர் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தான் வளர்த்தெடுத்த யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு தன்னாலியன்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என விரும்புகின்றேன். அதிபர் அவர்களும் அவரது குடும்ப உறவுகளும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*ஆ.ராஜேந்திரன்*
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*வடமாகாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையாக வாழ்ந்து காட்டியவர்

ஆளுமைத்திறன் + தலைமைப்பண்புகள் + மனிதநேயம் = அதிபர் அ.கயிலாயபிள்ளை



"நாம் உண்மையாக வாழ்வது என்றால் கடமையைச் செய்வது என்றுதான் பொருள். புகழையும் பழியையும் எல்லாம் வல்ல ஆண்டவனின் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டு என்பாதையில் யான் நடந்து செல்கின்றேன்

- மகாத்மா காந்தி

யா/சாவகச்சேரி இந்துக் கலலூரி அதிபர் திருவாளர் அ.கயிலாயபிள்ளை அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வரையும் வாய்ப்பு எனக்கும் கிடைத்ததையிட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

ஏறக்குறைய 4000 நாடகள் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு பல்வேறு அர்ப்பணிப்புக்கள், தியாகங்களைச் செய்த இக்கல்லூரித்தாயின் புகழை உயர்த்திட உழைத்த ஒரு மாண்புடை மனிதனின் மணிவிழா என்பது வரலாற்றுப் பதிவுதான்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபராக திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் பொறுப்பேற்ற அந்தக் காலம் மிகமிக சவால் மிகுந்ததாகும். குழப்பம், ஆபத்து என்பன நிறைந்ததாகும். வீதித்தடைகளும் ஆங்காங்கே வெடி ஓசையும் கேட்டுக் கொண்டிருந்த காலமாகும். ஆசிரிய வளம் உட்பட ஒரு தேசிய பாடசாலைக்குத் தேவையான அனைத்து வளங்களுமே பற்றாக்குறையுடையதாக இருந்த அதேவேளை நிறைந்த மாணவர் தொகையினைக் கொண்டதாகவும் இருந்த காலம் அது.

பல்வேறு புற அழுத்தங்கள் சூழ்ந்திருந்த அன்றைய கால கட்டத்தில் ஒரு பாடசாலையின் அதிபர் பொறுப்பினை ஒருவர் ஏற்பது என்பது பெற்றோல் குதங்கள் நிறைந்த ஒரு இடத்திற்குள்ளால் நெருப்பு பந்தத்தை கொண்டு போகும் செயலுக்கு ஒப்பானது. அதிலும் தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர் பொறுப்பினை ஒருவர் ஏற்பது என்பது சாதாரண அதிபர் ஒருவரினால் நினைத்துப் பார்க்கவே முடியாத ஒரு செயல். ஆயினும் திருவாளர் அ.கயிலாயபிள்ளை அவர்கள் இக்கல்லூரியின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்கள். நல்லதுவக்கம் பாதி வெற்றி என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்குக பணியை! அடங்கும் உலகம்
இடும் நமது ஆணை, ஏற்றுநடக்கும்
தடங்கல் சுவரும் சாய்ந்து தூளாகும்
தொடங்குக!

என்ற பாரதிதாசனின் கவிதை வரிகளை உறுதி செய்யுமாப்போல் திருவாளர் அ.கயிலாயபிள்ளை அவர்கள் அன்று தொடங்கிய பணியினை காலத்தின் அருமையுணர்ந்து தடைகளைத் தகர்த்து சவால்களை வெற்றி கொண்டு தன்னால் முடிந்த அளவுக்கு பல வெற்றிக்கனிகளை இக்கல்லூரித் தாய்க்கு அர்ப்பணித்திருக்கின்றார். இக்கல்லூரித் தாயின் புகழினை பல்வேறு பரிமாணங்களில் நாற்புறமும் பரவ விட்டு சற்று ஆறுதல் மூச்சுடன் அகவை அறுபதை அடைந்தும் ஆளுமை மிடுக்கோடு நிமிர்ந்தே நிற்கின்றார் எனது மதிப்பிற்குரிய அதிபர்களுள் ஒருவரான திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள்.

இக்கல்லூரியை இவர் பொறுப்பேற்ற போது மாணவர் தொகை 1925 ஆசிரியர் தொகை 66 கல்லூரியில் இயங்கிய மாணவர் கழகங்கள் மற்றும் அமைப்புக்கள் 7 வெளிவந்து கொண்டிருந்த கல்லூரிச் சஞ்சிகை 01, வகுப்பறைகளின் தேவைப்பாடு 15 ஆங்கில பாட ஆசிரியர் இல்லாமை, செயற்பாட்டறைகள் இல்லாமை, நூலக ஆளணி வளம் இல்லாமை என்ற ஒரு இயங்கு நிலையிலேயே இவர் இக்கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதாக அறிய முடிகிறது.

ஆயினும் இன்று மாணவர் தொகை 2035 ஆசிரியர் எண்ணிக்கை 102 கல்லூரியில் இயங்கும் மாணவர் கழகங்கள் மற்றும் அமைப்புக்கள் 16 இக்கல்லூரியில் இருந்து இன்று வெளிவரும் வெளியீடுகள் 6. க.பொ.த சாதாரண சித்தி வீதம் 92.5 என பல்பரிமாணங்களில் இக்கல்லூரியின் வளர்ச்சிப் போக்கினை வியாபிக்கச் செய்திருக்கின்றார் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள்.

"நோக்கம் இல்லாமல் ஊக்கம் இல்லை. ஊக்கம் இல்லாமல் உழைப்புமில்லை, பயனுமில்லை" என்பது எம் முன்னோர் கூற்று எண்ணங்களே மனதிற்கு வலிமையூட்டுவனவாகும். சிந்திக்கும் திறன்படைத்தவனே வாழ்க்கையில் நம்பிக்கை பெற்று வெற்றி காண முடியும் என்பது இன்றைய உளவியலாளர்களது முடிவு.

"ஆரோக்கியமான எண்ணங்கள் ஊற்றெடுக்கும் மனதில் இருந்துதான் நல்ல நோக்கங்களும் உருவாகும். அந்நோக்கங்கள் ஊக்கத்தைத் தர உழைப்பு நல்ல பயன்மிகுந்த வெற்றிகளைத் தரும்" என்பதனை தனது செயலால் நிரூபித்து நிற்கின்றார் எமது மதிப்பிற்குரிய அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள்.

"தன் கடமையைச் சரியாகச்செய்வதுதான் இவ்வுலகில் உண்மையாக வாழ்வது என்பதன் பொருள்" என்ற அண்ணல் காந்தி அடிகளது கூற்றிற்கு உதாரணமாக தென்மராட்சி கல்வி வலயத்தில் திகழ்ந்த எனது மதிப்பிற்குரிய அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களது ஓய்வுக்காலம் அவரது ஆளுமையின் இன்னுமொரு பரிமாணத்தை எமது தேசத்துக்கு அடையாளம் காட்டும் காலமாகவும் மகிழ்ச்சி நிறைந்த காலமாகவும் அமைய வெள்ளைமாவடி விநாயகரது பாதம் பணிந்து வேண்டி நிற்கின்றேன்.

சு.கிருஸ்ணகுமார்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணிப்புமிக்க கல்விச் சேவையாளன்



இயற்கை எழில் நிறை தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரேயொரு தேசிய பாடசாலையாக மிளிர்ந்து கொண்டிருக்கும் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தன் நிறைவான சேவையைப் பூரணமாக்கி அதன் வளர்ச்சிக்கு வித்திட்டு சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஒரு நல் அதிபரின் சேவையை நயந்து வாழ்த்துச்செய்தி வழங்குவதில்பெருமகிழ்வெய்துகின்றேன்.

அதிபர் திரு.அகயிலாயபிள்ளை அவர்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையான கால கட்டங்களில் பல இன்னல்களைத் தாண்டி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் தன் பணியைச் செவ்வனே புரிந்துள்ளார். 1980 ஆம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராக தன் பணியை ஆரம்பித்த இவர் ஆசிரியர், அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி, எனப் பல பதவி உயர்வுகளினூடாக முன்னேறி இன்று தலைசிறந்த தேசிய பாடசாலையின் தன்னிகரில்லா ஓர் அதிபர் என்றபெருமைக்குரியவராகின்றார். அது மட்டுமல்லாது இத்தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவைச் சிறப்புறக் கொண்டாடிய பெருமையும் இவரையே சாரும்.

மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணிப் பட்டங்களை பெற்று இலங்கை அதிபர் சேவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 111 இல் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஓர் அதிபர் ஆவார். கடந்த 10 வருடங்களாக இந்துக் கல்லூரியின் வெற்றிக்கும், உயர்ச்சிக்கும் அச்சாணியாக இருந்து சிறப்பான சேவையாற்றி வரும் இவர் "பிரதீபா பிரபா" விருதினைக் கடந்த 03 வருடங்களாகத் தொடர்ந்து பெற்றிருக்கின்றார்.

மேலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளை மாணவர் பெற வித்திட்டதுடன் பல மாணவர்கள் உயர்தரப் பிரிவில் நற் பெறுபேறுகளைப் பெற்று மருத்துவராக, பொறியியலாளராக, கணக்காளராக இன்னும் பல பிரிவுகளுக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவடைவதற்கு வழிகோலியுள்ளார். தனது அதிபர் சேவையின் தன்னிகரற்ற பணிகளோடு மட்டும் நின்று விடாது சமாதான நீதவானாகத் திகழும் அதிபர் அவர்கள் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சபைத் தலைவராக, விளங்குவதோடு பல்வேறு வழிகளில் சமூக சேவையாற்றுவதில் ஆர்வம் உள்ளவராக ஓர் சமூக சேவையாளனாகத் திகழ்ந்து வருகின்றார்.

கல்விச் சேவைக்காக தன்னை அர்ப்பணித்து தனது நிறைந்த சேவையிலிருந்து ஆறுதல் பெறும் ஆளுமைமிக்க அதிபர் அவர்களது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்தி அவரது சமூகப் பணி தொடர வேண்டி எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி அ.சாந்தசீலன்
பிரதேச செயலர்,
தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணியைக் கடவுட் பணியாகக் கொண்ட நல்ல அதிபர்



சைவத்தமிழ் பாரம்பரியம் நிறைந்த, வந்தோரை வரவேற்கும் சிறப்பை தனக்கே உரித்தாகக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தின் மூலதனம் கல்வியாகும். கல்வி - மக்கள் வாழ்வதற்குத் தேவைப்படுகின்ற ஆற்றல்களையும் மனோபாவங்களையும் உத்தமமான சமூக விழுமியங்களையும் தன்னம்பிக்கையையும் எல்லா மக்களிடமும் தொடர்ந்து விருத்தி செய்யும் ஆற்றல் நிறைந்தது.

தென்மராட்சியின் கல்விச் சிறப்பிற்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆல விருட்சமாக அமைந்துள்ளது. இவ் விருட்சத்தை கால காலமாக அருளாட்சி செய்த நல்ல அதிபர்களின் வரிசையில் பெருமைக்குரியவர்களில் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளையும் ஒருவராவார். அதிபரின் சேவை நயப்பிற்கும் மணிவிழா மலருக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அளவிலா ஆனந்தம் அடைவதோடு, விழாக் குழுவினருக்கு எனது நன்றியையும் கூறி மகிழ்கிறேன்.

கனவிலும் நனவிலும் கல்லூரியைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து நிறைவாய் பணி செய்த நிம்மதியில் அதிபர் திருப்தியாக ஓய்வு பெறுகின்றார். நல்ல அதிபர் நல்ல ஆசிரியராக இருக்க வேண்டும் என்ற அடிப்படை உண்மைக்கு அதிபர் கயிலாயபிள்ளை பொருத்தமானவர். நல்ல ஆசிரியராக நல்ல கல்வி நிர்வாகியாக, நல்ல கல்லூரி அதிபராக, மேலாக நிறைந்த கடவுள் பக்தியும் ஆன்மீக விசாரமும் நிரம்பியவராக கல்விப் பணியை கடவுட் பணியாக மேற்கொண்டு சிறப்புப் பெற்றவர்.

அதிபர் கயிலாயபிள்ளை அவர்கள் மாணவர் கல்வியில் அதீத அக்கறை உடையவர். அதோடு ஒழுங்காட்சியைப் பெணுவதிலும் மிகவும் கறாராக இருந்தவர். ஆசிரியர் குழாத்தை அனுசரித்தார். பாடசாலையை மக்கள் மயப்படுத்தினார். பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் யாபேரையும் ஒன்றாக இணைத்துக் கல்லூரியின் புகழை உலகறியச் செய்ததோடு கல்லூரிக்கு வேண்டிய அனைத்து வளங்களையும் நிறைவு கண்டதோடு கல்விப் புலத்தினர் நல்ல அதிபருக்கு, நல்ல கல்லூரிக்கு உதாரணம் சொல்லக் கூடியதாக கல்லூரிக்கும் தனக்கும் பெருமை சேர்த்தவர்.

என்ன வளம் இல்லை இந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் என்று கல்வியியலாளர்கள் கூறக் கூடியதாக கல்லூரிக்கு சகல வளங்களையும் பெற்றுக் கொடுத்தவர். கல்லூரியின் வரலாற்றுக் காலம் முழுவதும் அதிபர் கயிலாயபிள்ளை அவர்களின் பெயரும் உச்சரிக்கப்படும். அவரது காலத்தில் நாமும் கல்விக் கடமை செய்ததில் பெருமையடைகின்றோம். மீசாலை மாவடிப் பிள்ளையார் கடாட்சம் நிறையப் பெற்ற அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவரது துணைவியார், மக்கள், மருகர் பேரர்களோடு பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி.
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப் பணி வரலாற்றில் தடம் பதித்தவர்



தான் கல்வி கற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக அதிபராக ஒளிவிளக்காக திகழ்ந்து இங்கு தனக்கென ஒரு தனித்தடம் பதித்து மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் பெருமதிப்பைப் பெற்ற பெருந்தகை மணிவிழா நாயகன் எனது நண்பன் அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன்.

திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் கல்வித் துறையில் முதலில் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராக நுழைந்து பின்னர் சிறந்த ஓர் ஆசிரியனாக, முதன்மை ஆசிரியனாக, கொத்தணி அதிபராக. அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, சிறந்த சேவையாற்றி மீண்டும் மாணவர்களது கல்விக்கு நேரடியாக உதவ வேண்டுமென்ற உயரிய சிந்தனையுடன் தான் கல்வி கற்ற தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்று வந்து பல தேசிய மட்டசாதனைகளை மாணவர்கள் பெற வைத்து நற்சேவையாற்றி **03.02.2015** ஓய்வு பெறுகின்றார்.

இவை மட்டுமன்றி கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக நல்ல அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி அவர்களது "பிரதீபா பிரபா" விருதினையும் பெற்றுள்ளார். அத்துடன் தென்மராட்சி அதிபர் சங்கத்தலைவராகவும், தென்மராட்சி கல்வி வலய பரீட்சைச் சபையின் நீண்ட கால உறுப்பினராகவும் ஏனைய அமைப்புக்களின் உறுப்பினராகவும் செயற்பட்டதுடன் ஆத்மீகத்துறையிலும் ஆலய வழிபடுவோர் சபைத்தலைவராகவும் சமூக சேவையாளராகவும், சமாதான நீதவானாகவும் கௌரவத்தினைப் பெற்றுள்ளார்.

இவர் தனது சேவைக்காலத்தில் பல பட்டங்களைப் பெற்று சிறப்படைந்ததுடன் திறமை, சேவை மூப்பு, போட்டிப்பரீட்சை அடிப்படையில் கல்விச் சேவையின் உயர் நிலையான இலங்கை கல்வி நிர்வாக சேவைத்தரத்தினையும் பெற்று சிறப்பாக ஆற்றிய சேவையை நினைவுகூர்ந்து பாராட்டி இவரது ஓய்வுக்காலம் சிறப்படைய வாழ்த்தி, தொடர்ந்தும் கல்விச் சேவையையும் சமூக சேவையையும் தொடர இறைவனை வேண்டுகின்றேன்.

கு.சிவானந்தம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனையின் முன்னோடி



யாழ் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் உயர்திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் மணிவிழாக் காண்கின்ற இவ் வேளையில் ஆளுநரின் செயலாளர் என்ற ரீதியில் வாழ்த்துச் செய்தி வழங்குவது மட்டுமல்லாது சுகதேகியாகப் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கடந்த பல வருடங்களாக கல்விச்சேவையில் பணிபுரிந்து ஆசிரியராகவும், ஆளுமை மிக்க அதிபராகவும், மாணவர்களின் கல்வித்தேடலுக்கு உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும், சாதனைகள் பலவற்றை அடைவதற்கு முன்னோடியாகவும் செயற்பட்டு 60 அகவையில் மணிவிழாக் காண உள்ள அதிபர் அவர்களின் பணி சிறப்பாக அமைந்திருந் ததனை நான் நன்கறிவேன். இவருடைய திறமையாலும், ஆற்றலாலும் புலம்பெயர் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும், கலை நிகழ்வுகளிலும் இப்பாடசாலை முன்னணியாகத் திகழ்கின்றது என்றால் அதிபர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் கூட்டு ஒத்துழைப்பே இதற்குக் காரணம். அதிபர் இளைப்பாறிச் சென்றாலும் ஓய்வுக் காலத்தில் சமய சமூக கல்விப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு சமூகத்திற்கு தனது அனுபவத்தினைத் தந்து மகிழச்சியான வாழ்வு வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

இ.இளங்கோவன்,
ஆளுநரின் செயலாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலமே நாடி நலமுடனே நீ வாழி!

களனிக் கழகத்திற் கல்வி யேற்று
கல்விப் புலத்திலே ஆசானாய்க் காலிட்டு
பூகோளவியலைப் புதுமையுடன் புகட்டி
பல் பதவிப் படிகண்டீர் பல்லாண்டு வாழி

பத்தாண்டு ஆசானாய்ப் பள்ளிகளிற் பணி செய்து
எத்திசையும் புகழ்பரப்பும் ஏந்தல் களையீந்து
அதிபராய்ப் பல பள்ளிக் கதிரை யலங்கரித்து
ஆறுபத்து காணும் காவலனே நீ வாழி



தென்மராட்சியுறை தேசியப் பள்ளிதனில்
முதல்வனாய் முத்தான பத்தாண்டுப் பணி செய்து
அன்னைக்கு மகுடமிட்ட மன்னவனே
நலமே நாடி, நலமுடனே நீ வாழி!

*1982* ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்திலுள்ள சென்ஜோசப் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசானாகத் தடம் பதித்துப் பல படிகளிலேறி மணிமகுடம் சூடும் அதிபர் கயிலாயபிள்ளையை வாழ்த்திடுவதிற் பெருமிதமடைகின்றேன்.

*1998* ஆம் ஆண்டு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக நான் கடமையேற்ற போது அவரைக்கோட்டக் கல்வி அலுவலராகச் சந்தித்தேன். அக்காலப் பகுதியில் பளைக் கோட்டம் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து துண்டிக்கப் பட்டிருந்தது. இதனால் தென்மராட்சி வலயத்துடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தது. பளைக் கோட்டப் பாடசாலைகளின் கல்விசார் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் திரு.அ.கயிலாயபிள்ளை அக்காலத்தில் முனைப்புடன் செயற்பட்டதை நான் கண்டேன். இப்பாடசாலைகள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த போதெல்லாம் அதிபர்கள், ஆசிரியர்களை வழிப்படுத்தி வலுவான கல்விச் செயற்பாட்டை வழங்க அயராது பாடுபட்டவர் திரு.கயிலாயபிள்ளை தென்மராட்சி இடப்பெயர்வின் போது பாடசாலைகளை மீள இயக்குவதில் எனது வலதுகரமாகச் செயற்பட்டவர் திரு.கயிலாயபிள்ளை.

தென்மராட்சியின் தேசியப் பள்ளியான இந்துக் கல்லூரி அதிபர் ஓய்வு பெற்ற போது பலரது வேண்டுகோளையேற்று அப்பள்ளியின் அதிபர் பதவியை அவர் பொறுப்பேற்றார். சவால்களுக்கு முகங்கொடுத்து அப்பாடசாலையில் பத்தாண்டு சேவையை அவர் வழங்கினார். அப்பள்ளிக்கூடத்தை அழகு செய்தார். பல்துறை கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வழிகாட்டினார். நல்லாசானாய், நல்லிதயம் படைத்த நண்பராய், நல்லதிபராய் இம்மண்ணிலே பிறந்தவர் திரு.கயிலாயபிள்ளை. அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து உறவைத் தொடர வாழ்த்துகின்றேன்.

வ.செல்வராசா
ஓய்வு நிலை மாகாணக்
கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றலும் அனுபவமும் நிறைந்த நிர்வாகி



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபரான திரு.அருணாசலம் கயிலாயபிள்ளையவர்களின் மணிவிழா மலருக்கு எனது செய்தியை வழங்குவதற்கு சந்தர்ப்பம் தந்த மணிவிழாக் குழுவிற்கு எனது நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளை திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என்பதனை எண்ணும் போது மனம் வருந்த வேண்டியுள்ளது.

களனிபல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரியான திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணப் பலக்லைக்கழக உதவி விரிவுரையாளராக 1980 களில் கடமை ஆற்றியுள்ளார். இதன் பின்னராக நுவரேலியா புனித ஜோசப் தமிழ் மகா வித்தியாலயத்தில் 4 வருடங்களும் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் 3 வருடங்களும் பணியாற்றி பின் பூநகரி G.T.M.S பாடசாலையில் 1 வருடமும் கிளாலி R.C.T.M.S இல் 1 வருடமும் முரசுமோட்டை மகா வித்தியாலயத்தில் 6 மாதகாலமும் ஆசிரியராகப் பணியாற்றினார். இதே வேளை இவர் தனது தகைமையினை உயர்த்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது உயர் பட்டசான்றிதழைப் பெற்றார். முழங்காவில் மகாவித்தியாலயம் மற்றும் பலாலி கல்வித்திணைக்கள அலுவலகத்தில் பணியாற்றிய அனுபவத்துடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 2004 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகின்றார். இவருடைய மனிதநேயமும் பாடசாலை ஆசிரியர்களுடன் பழகும் தன்மையும் மாணவர்களைக் கையாளும் முறையும் எமது பாடசாலையை இன்று தொடர்ந்து ஒரு புகழ்பூத்த பாடசாலையாக நிலைநிறுத்தி வைத்துள்ளது. மேலும் மாணவர்களின் ஆற்றலை வளம்படுத்தி மேம்படுத்த உதவியுள்ளது. இவரது அனுபவமும் ஆற்றலும் சாவகச்சேரி மாணவர்களினது திறமைகளை தென்மராட்சியிலும் வடமாகாணத்திலும் மிளிரச் செய்துள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும். இத்தகைய நல்ல முறையில் பாடசாலையை வழி நடத்திய திருகைலாசபிள்ளைக்கு தென்மராட்சி மக்கள் மிகவும் கடமைப்பட்டவர் ஆவர். அவரின் செயற்பாடு இந்தப் பாடசாலை தனது தரத்தைத் தக்க வைப்பதற்கு ஒரு கப்பலின் மாலுமி போன்று செயற்பட்ட திரு.கயிலயாபிள்ளை அவர்களிற்கு அதன் பாடசாலை பழைய மாணவி என்றவகையில் நன்றி கூறி பழைய மாணவர்கள் சார்பில் அவர் நீண்ட காலம் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவர் ஒய்வு பெற்றாலும் எமது பாடசாலைக்குத் தொடர்ந்தும் தமது பங்களிப்பைச் செய்வார் மற்றும் செய்ய வேண்டும் என வேண்டுகின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த முகாமையாளன்



செல்வத்துள் பெரும் செல்வம் கல்விச் செல்வம். இது காலத்தால் அழியாதது. இச் செல்வத்தை பெற்றவர்கள் வருங்காலச் சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்கும் பணியில் விருப்புடன் ஈடுபடுவோர் ஆசிரியர்கள். ஒரு சமூகத்திற்கான அறிவு, திறன், மனப்பாங்கு, நல்லொழுக்கம் ஆகிய நற்குணங்களை பகிர்ந்து கொள்ளும் நிறுவனமாக பாடசாலைகள் விளங்குகின்றன. இப்பாடசாலையை முகாமைத்துவம் செய்யும் தலைவரே அதிபராவார்.

இச்சமூக நற்பணியை ஒரு நூற்றாண்டிற்கும் மேல் மேற்கொண்டு வரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபரான அ.கயிலாயபிள்ளை மிகச் சிறப்புடன் தன் கடமையை ஆற்றிய மனநிறைவுடன் ஓய்வு பெறுகின்றார். அவருடைய எல்லையற்ற சேவையைப் பாராட்டி மணிவிழா எடுப்பதுடன் மலர் ஒன்றையும் கல்லூரிச் சமூகம் வெளியிடுவதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

நண்பர் அ.கயிலாயபிள்ளை அவர்கள் என்னுடன் 1972 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பில் சகபாடியாக இருந்தவர். அந்நேரத்தில் ஆசிரியர்களை மதித்து, கல்வியில் மிக கவனமாக இருந்தவர். இதனால் ஆசிரிய சமூகம் இவரை மாணவ தலைவராகத் தெரிவு செய்தது. இதனால் என்னுடன் மிகவும் கூடுதலாகப் பழகும் சந்தர்ப்பம் இருந்தது. நான் அவருடைய தலைமைத்துவப் பண்பு கண்டு வியந்ததுண்டு. இவர் ஒரு நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய ஆளுமையை அன்றே வளர்த்துக் கொண்டவர்.

ஆசிரியராக தன்னுடைய கல்விச் சேவையை ஆரம்பித்த இவர் தனது விடா முயற்சியினால் படிப்படியாக உயர்ந்து அதிபர் தரத்தை அடைந்தார். அதனால் தான் படித்த கல்லூரியிலேயே அதிபராக கடமையாற்றக்கூடிய பேறு பெற்றார்.

பழம் பெருமை வாய்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி இற்றை வரை பல அதிபர்களைக் கண்டது. பல ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றார்கள். பல்வேறு தொழில்துறைகளில் சேர்ந்து கொண்டு சேவை செய்கிறார்கள். எனினும் நண்பர் அ.கயிலாயபிள்ளையின் காலத்திலேயே அதிகளவான மாணவர்களையும், அதிகளவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்களையும் அதிக ஆசிரியர்களையும், ஏனைய ஊழியர்களையும் வளங்களையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக என்றுமில்லாத வளர்ச்சியைக் கண்டுள்ளது.

பாடசாலை கவின்தகு வனப்புடன் காணப்படுவது மட்டுமல்ல எல்லோரையும் கவரக் கூடிய கற்றல் சூழ்நிலையைக் கொண்டதாகவும் மாற்றியமைத்துள்ளார். இன்று பாடசாலைகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. கற்றல் கற்பித்தல் முறையில் மாற்றம் நவீன உபகரணங்களை கற்பித்தலில் பயன்படுத்தல், செயல்முறை ரீதியான கற்பித்தல் ஆங்கிலத்தில் கற்பித்தல் கணினிக் கல்வி இவ்வாறு மிக விரைவான மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் தனது ஆசிரிய குழாத்தைத் தயார் செய்து மாணவர்களுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுத்துள்ளார். கல்வி மட்டுமல்ல இவரது காலத்தில் விளையாட்டுத் துறை இணைபாடவிதான செயற்பாடுகள் ஏனைய போட்டிகள் போன்றவற்றில் மாணவர்களைச் சிறந்த முறையில் தயார்ப்படுத்தி வெற்றி பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்துள்ளார்.

இவர் தனது ஊழியர்களிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் மிகவும் அன்பாகவும் சிநேகிதமாகவும் கண்டிப்புடனும் நடந்து கொள்பவர். இது கல்லூரியின் வளர்ச்சியில் சாதனைகளைச் செய்யக் கூடியதாக இருக்கின்றது.

"தக்கார் தகவிலர்என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

எனும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்பவும் "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற முதுமொழிக்கேற்ப இவரது பிள்ளைகள் நன்மக்களாக சமூகத்தில் உள்ளனர் இவரது எதிர்காலம் சிறப்புடன் அமைய வாழ்த்துகிறேன்.

S.K.யோகநாதன்,
ஒய்வு நிலைப் பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னம்பிக்கையும், நேர்மனப்பாங்கும் கொண்ட அதிபர்



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் தலையாய பாடசாலையின் அதிபராக ஒரு தசாப்த காலமாகப் பணியாற்றி கல்லூரியின் புகழ் சற்றும் குறையாமல் தனது நிருவாக முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்தி கல்லூரியை வழிநடாத்தியவர். மாணவர்களையும் ஆசிரியர்களையும் சூழ்நிலைக்கேற்ப கையாளுவதில் திரு.கயிலாயபிள்ளை சிறப்புப் பெற்றவர். ஒரு தேசிய பாடசாலையை வழிநடாத்துவதற்கு வேண்டிய ஆளுமையையும், புலமையையும் கொண்டிருந்தவர். கல்வி அமைச்சு கல்வித் திணைக்களம், பல்லாயிரம் மாணவர்கள், பெற்றோர்கள் என அனைத்து தொடர்புகளையும் கையாண்டு கல்லூரியை வழிநடாத்துவதென்ற பலமான சவாலை தன்னம்பிக்கையுடனும் நேர்மனப்பாங்குடனும் செயற்படுத்தியவர்.


அனைவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகும் ஓர் ஆளுமைமிக்க அதிபர் நண்பர் கயிலாயபிள்ளையின் ஓய்வு கல்விப் புலத்தில் ஓர் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது. எனினும் அவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ச.சிவநேஸ்வரன்,
தலைவர்,
வடமாகாண அதிபர்கள் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவான பணியால் நிறைந்தாய் மனங்களில்



அகவை அறுபதில் நம் கயிலையின் மணிவிழா
அவன் பணியை நயப்பதில் என் மனதில் திருவிழா
ஒரு காலத்தில் அவன் என் பள்ளித் தோழன்
இன்றுவரை அவன் என் பணியில் தோழன்
பள்ளிப் பருவமன்று பயனுடன் இனிமை
பணியில் பகிர்வு இன்று பலத்துடன் பெருமை

இந்துவால் உயர்ந்தோரில் அவனும் ஒருவன்
இந்துவை உயர்த்திய சிலருள் அவனும் ஒருவன்
கல்வியும் முயற்சியும் கலந்து உயர்ந்தவன்
பள்ளியும் பணியும் இணைந்து வாழ்ந்தவன்
தென்மராட்சிக் கல்விக்கு எம் மிந்து இதயம்
இந்துவின் இயக்கத்தில் இவனே இதயம்
வடக்கில் குழைக்காட்டை உயர்த்தியவள் இந்து
இந்துவின் இசையை பரப்பியவன் கயிலை

பள்ளி முதல்வர்க்கு நல்லதோர் வழிகாட்டி
பள்ளிப் பிள்ளைகளை கரையேற்றும் படகோட்டி
நினைப்பதை நலமாய் நினைக்கும் ஒருவன்
நினைத்ததைச் சிறப்பாய் முடிக்கும் முதல்வன்
போட்டி யென்றால் தன்பள்ளிக்கே தருவான் முதலிடம்
போட்டி முடிந்ததும் தன் நட்புக்குத் தருவான் தனியிடம்

பூக்கிற மரங்களை தேனீக்கள் நாடும்
காய்க்கிற மரம்தான் கல்லெறிபடும்
நாம் பார்க்கிற பணியில் இவையிரண்டும் வரும்
குறைவில்லா மனிதர்கள் எவருண்டு?
குறைகூறா மனிதர்கள் எங்குண்டு?
குறைகள் குறைவானவனே நல்லவன்
குறைவான நல்லவருள் இவனும் ஒருவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையொருவனுக்குத் தரும் கல்வி கோடிபுண்ணியம்
ஆயிரம் ஏழைக்கு கல்விதந்த இவனுக்குப் பல்கோடி புண்ணியம்!

பணியில் நிறைவுண்டேல் ஒய்விலும் நிறைவுண்டு
நிறைவு என்பது எம்மனங்களைப் பொறுத்ததே
மனம் நிறைந்து மனைநிறைந்து
இனம் மகிழ இனிதாய் இவன் வாழ
வாழ்த்துகிறேன் பள்ளி முதல்வர்கள் சார்பில்.

க.அருந்தவபாலன்,
தலைவர்,
தென்மராட்சி அதிபர்கள் சங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுத்திறனும் சிந்தனை ஆற்றலும் நிறைந்த அதிபர்



ஆசிரியராக. அதிபராக, கோட்டக்கல்விப் பணிப் பாளராக கடமையாற்றி, இறுதியாக கடந்த 10 ஆண்டுகளாக யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி 2014.02.03 அன்று தனது மணிவிழாவைக் கொண்டாடவுள்ள எனது அன்புக்குரிய அதிபர் திரு.அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் கல்வி அறிவும், தொழில்சார் அறிவும், கல்விப் புலத்தில் நிறைவான அனுபவமும் கொண்ட ஒருவராவார். இதன் காரணமாகத் தனது முழுமையான சக்தியையும், நேரத்தையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர். நேரம் காலம் பாராது பாடசாலையில் கடமையாற்றியவர். மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஏனைய சமூக உறுப்பினர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள் எனப் பலரின் ஒத்துழைப்பையும் பெற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றவர்.

அதிபர் அவர்களின் இந்தச் செயற்பாட்டினால் சாவகச்சேரி இந்துவின் முன்னேற்றம் பல வழிகளிலும் பரிணமித்து அவருக்கும் பல பராட்டுகளும் விருதுகளும் கிடைக்கப் பெற்றமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற விடயமாகும்.

இவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் செழிப் பானதாகவும் மேலும் பல நன்மைகளைத் தனது குடும்பத்தினருக்கும் சமூகத்தினருக்கும் சேர்ப்பதாகவும், ஆரோக்கியம் மிகுந்தவராகவும் இருக்க வேண்டும் என அவர் வணங்கும் மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையாரை வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

இ.கயிலைநாதன்,
ஓய்வு நிலை அதிபர்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த தலைமைத்துவமும், ஆளுமையும் உள்ள அதிபர்



சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 15.07.2004 ஆம் திகதியில் இருந்து ஏறத்தாழ ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாக அதிபராகக் கடமையாற்றி கல்விப் பணியில் 30 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகப் பணிபுரிந்து மணிவிழாக் கண்டு 03.02.2015 இல் ஓய்வு பெறும் உயர்திரு அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களின் ஓய்வு நிலை குறித்த மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை உயர்ந்த பேறாகக் கருதுகின்றேன்.

உயர்திரு கயிலாயபிள்ளை அவர்கள் 1980 - 1981 நவம்பர் வரை யாழ் பல்கலைக்கழகத்திலே உதவி விரிவுரையாளராக தனது கல்விப் பணியை ஆரம்பித்து 17.02.1986 - 23.08.1992 வரையான காலப்பகுதியில் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகராகப் பதவிகளை வகித்து 24.08.1992 - 06.01.1994 வரை முழங்காவில் மகா வித்தியாலயத்தில் கொத்தணி அதிபராகக் கடமையாற்றி பின்னர் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அதிபராகவும், பளை மத்திய கல்லூரியின் அதிபராகவும் கடமை புரிந்து 01.07.1998 இல் பளை கோட்டக்கல்வி அலுவலகத்தில் கோட்டக்கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டு 14.07.2004 வரை அப்பிரதேச கல்விக்கு அரும்பணியாற்றி 15.07.2004 இல் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்று ஓய்வு பெறும் திகதி வரை கடமைப் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றி கல்லூரியின் கல்விசார் பௌதிகவள விருத்தியிலும் ஏற்படுத்தப்பட்ட புதிய பரிமாணங்கள் அவரின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளின் கருவூலமாகும்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இல் விளங்கிய திருவாளர், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இல் 2009 இல் சித்தி பெற்று பதவி உயர்வு பெற்றார். மாணவர் மத்தியிலே அறிவு, திறன், மனப்பாங்குகளை மேம்படுத்தும் வகையில் கற்றற் செயற்பாடுகள், விளையாட்டுத்துறை, கலைத்துறைச் செயற்பாடுகள் இவரது சேவைக்காலத்தில் சிறப்புற வளர்ச்சி பெற்று இந்துவின் வரலாற்றில் இவரது சேவைக்காலம் என்றும் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்திறமை, துடிப்புமிக்க செயற்பாடுகள், கண்டிப்புடன் கூடிய அனுபவமிக்க அணுகுமுறை சவால்களை துணிவுடன் எதிர்கொள்ளும் ஆற்றல் என்பன இவரை ஒரு சிறந்த தலைமைத்துவம், ஆளுமை மிக்க அதிபராக எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவரது சிறந்த சேவையை கௌரவிக்கும் முகமாக 2012, 2013, 2014 ஆகிய மூன்று வருடங்களிலும் சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். கல்லூரியின் புகழை மேலும் நற்றிசையிலும் மிளிரச் செய்ததுடன் குடும்ப வாழ்க்கையிலும் மனைவிக்கு நல்ல கணவனாகவும், பிள்ளைகளுக்கு சிறந்த வழிகாட்டி தந்தையும் ஆவார். இவரது மகன்களும் தந்தையின் வழிகாட்டலுடன் பொறியியலாளராகவும், கல்வி ஒழுக்கத்தில் சிறந்த மாணவர்களாகவும் உருவாகியுள்ளனர்.

கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்லாமல் சமூக மற்றும் ஆலயப் பணிகளிலும் ஈடுபாடு கொண்ட புகழ்பூத்த அதிபர் அவர்கள் அகவை அறுபதிலே ஓய்வு பெற்றாலும் நல்ல ஆரோக்கியத்தோடு நீண்ட காலம் அவனியில் அனைத்தும் பெற்று மனைவி பிள்ளைகளுடன் இன்புற்று நீடுழிவாழ இறைபணிந்து வாழ்த்துகின்றேன்.

இ. தேவசகாயம்பிள்ளை
தவிசாளர், நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிய சாதனையாளர்



அன்பிற்குரிய அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் எனது மாணவன் என்ற முறையிலும் நான் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளராக நீண்ட காலம் சேவையாற்றிய முறையிலும் கொத்தணி அதிபராக நான் கடமையாற்றிய போது அவர் ஆசிரியராக அப் பிரதேசத்தில் கடமையாற்றிய முறையிலும் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரில் எந்தக் காலத்திலும் பணிவு, பண்பு, அன்பு, அடக்கம், அமைதி, விடாமுயற்சி, துணிவு போன்ற குணங்கள் பிரகாசித்துக் காணப்பட்டன. திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் மற்றவர்களோடு பழகுகின்ற விதம் அருமையிலும் அருமை. திருமதி கயிலாயபிள்ளை அவர்களும் எனது மாணவி தான். மிகுந்த இனிமையான சுபாவமும், அடக்கமான குணமும் கொண்ட இவர் திரு.கயிலாயபிள்ளையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் தன் திறமையினாலும் உயர் பண்பினாலும் பெரும் பங்காற்றியிருக்கின்றார் என்றால் அது மிகையில்லை.

கல்விப் புலத்தில் பல்வேறு கோணங்களிலும் சிறப்பாகச் சேவை செய்துள்ள அதிபர் அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம். கல்லூரியின் நலனில் தளராத விசுவாசம் கொண்டு பணியாற்றுவதற்கு தலைசிறந்த எடுத்துக் காட்டாக அவர் வாழ்க்கை அமைந்திருந்தது. எத்தனையோ பேர்கள் அவருக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கின்றனர்.

அதிபர் அவர்கள் ஆழந்த சமய உணர்வும் திக்கற்றவருக்குத் துணையான பரம்பொருளிடம் அளவற்ற பக்தியும் கொண்டவர். இவ்வகையில் இக்கல்லூரியில் தொன்றுதொட்டு ஓங்கி வந்துள்ள ஆத்மீக வளர்ச்சியின் சின்னமாக விளங்குபவர் உண்மையான உயர்வு ஆத்ம உறுதியில் அடங்கியது. அதுவே அதிபர் அவர்களின் மேன்மையின் இரகசியம். அதிபர் அவர்கள் மனிதத் தன்மையுடனும், கண்ணியத்துடனும் கடமையாற்றுவது கடின சோதனை என்றாலும் அது அரிய சாதனையாகும்.

சிக்கலான பல பிரச்சினைகள் திகைக்க வைக்கின்ற வேளையிலும் தனது அருங்குணத்தாலும் அரிய சாமர்த்தியத் தினாலும் சாவகச்சேரி இந்து கல்லூரியின் கல்வித்தரத்தை மிகவும் உயர்வாகக் காத்து வைத்த பெருமை என்றும் போற்றற்பாலது. நமக்குப் பெருமையும் பூரிப்பும் அளிக்கக் கூடிய அம்சமாகிறது. இக்கல்லூரியின் சைவ பாரம்பரியப் பண்பாட்டினைப் போற்றிப் பாதுகாத்து பலப்படுத்திய அதிபர் அவர்கள் கடமையாற்றிய காலம் அவர் வாழ்வில் பொற்காலம் என்பது மட்டுமல்ல அக்காலம் கல்லூரியின் வரலாற்றிலேயே சிறந்த கட்டம் என்று மாணவர்கள் எண்ணுவது இயல்பே.

இத்தகைய சிறந்த சேவையாற்றிய அதிபரும் குடும்பத் தினரும் சகல செல்வங்களும் இனிதே பெற்று நீண்ட காலம் இளமைப் பொலிவோடும், தளராத சுகத்தோடும் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சி.துரைராசா,
பிரதேசசபைத் தவிசாளர்,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்றிறன்மிக்க அதிபர்



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் கப்டன் அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

தென்மராட்சிப் பாடசாலைகளில் மிக உயர்ந்த நிலையில் உள்ள பாடசாலையாக யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி காணப்படுகின்றது. இதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றிய அதிபர் வரிசையில் கப்டன் அ.கயிலாயபிள்ளை அவர்களின் பங்களிப்பினை நான் நன்கு அறிவேன். எவ்வேளையிலும் நேர்மனப்பாங்குடனும் (Postive thoughts) சிரித்த முகத்துடனும் கூடிய செயலாற்றலைக் காணும் இவ் அதிபரின் செயற்றிறன் ஏனையவர்களுக்கு ஓர் முன்னுதாரணமாகும்.

கப்டன் அ.கயிலாயபிள்ளை அவர்களின் முயற்சியால் முதன் முறையாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தேசிய மாணவர் படையணியானது (Natioanl Cadet Corps) **2013** ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியான வளர்ச்சியாக **2014** ஆம் ஆண்டு முதன் முறையாக தேசிய மாணவர் படைப்பிரிவின் ரன்தம்பை (Rantambe) பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த கணிப்பீட்டு பாசறையில் புதிய அணியின் பங்குபற்றலும் குறிப்பிடத்தக்கது.

கல்வி வளர்ச்சி மட்டுமன்றி தான் சார்ந்த பாடசாலை, சமூகம் தமது வளர்ச்சியிலும் இடையறாத முயற்சி கொண்டிருந்த திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS - Grade - 3) அதிபர்களுக்கான, கல்வியமைச்சும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனும் தேசிய மாணவர் படையணி தலைமைச் செயலகத்தால் முதன் முறையாக வழங்கப்பட்ட அதிபர்களுக்கான அதிகாரி நிலைப் பயிற்சியை ரன்தம்பை பயிற்சிக் கல்லூரியில் **2013** ஆம் ஆண்டில் நிறைவு செய்து கப்டன் (captain) தர நிலையில் உயர்வு பெற்றது மட்டுமன்றி அதனை மாணவர்களிடத்தும் கொண்டு சென்ற முதன்மையான அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவரது சேவைகள் எமது நாட்டிற்கும் சமூகத்திற்கும் வழங்கப்படல் வேண்டும் என்பது எனது பெரு விருப்பமாகும்.

"எப்போதும் தயாரின்றி இராதே"

"Never be unprepared"

Lt.Col.G.R.Gamagedra,
Commanding Officer,
20th Battallion
National Cadet corps.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தசாப்த காலம் ஒப்புயர்வற்ற சேவையாற்றி ஓய்வு பெறும் இந்து அன்னையின் புதல்வர்



ஒரு தசாப்த காலம் இந்து அன்னையின் கல்வி வளர்ச்சி, பௌதிக விருத்தி, மனிதவள விருத்தியில் திரு. அ.கயிலாயபிள்ளை அவர்களது சேவை அளப்பரியது. எமது கல்லூரி யாழ்குடா நாட்டில் உள்ள கல்லூரிகளோடு சமமாக தலை நிமிர்ந்து நிற்பதற்கு வழி சமைத்தவர். எமது அதிபர் என்றால் அது மிகையாகாது. 1992 ஆம் ஆண்டு தொடக்கம் இவருடன் இணைந்து சேவையாற்றும் காலத்தில் இவர் அதிபராகவும் யான் ஆசிரியரகாவும் ஒரே பள்ளியில் சேவை செய்தோம். அன்று ஏற்பட்ட தொடர்பில் எனது குருவாக தந்தையாக நல்ல நண்பனாக நல்லதொரு வழிகாட்டியாக நான் அவருடன் பழகினேன். அன்றைய தொடர்பு விரிவடைந்து அவரது ஓய்வுபெறும் காலத்தில் நான் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளராக அவருடன் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தவகையில் அவரது மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரது சேவைக்காலத்தில் கல்லூரியின் பௌதிக வளவிருத்தியில் RAAN கட்டிடத் தொகுதியின் மேல்தளம் கட்டி முடிக்கப்பட்டு பாவனைக்காகத் திறக்கப்பட்டது. முச்சக்கரவண்டி ஒன்று பெறப்பட்டது. பேருந்து வண்டி ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. மகிந்தோதய ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. மகிந்தோதய தொழில்நுட்ப பீடம் அமைக்கப்பட்டு வருகின்றது. 2015 இரண்டாம் தவணையில் 'H' Block உடன் இணைந்த 50' x 25' அளவுள்ள ஒரு அடுக்கு மாடிக்கட்டிடம் அமையவிருக்கிறது.

கல்லூரிக்கான கேட்போர் கூடத்திற்குரிய அத்திபாரம் இடப்பட்டு தொடர்ந்து வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவரது காலப்பகுதியில் அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். க.பொ.த உயர்தரப்பிரிவில் தொழில் நுட்பபாடத்துறை அறிமுகப்படுத் தப்பட்டு அதிகளவான மாணவர்கள் அத்துறைக்குள் உள்வாங்கப்பட்டு பயிற்சி வழங்கப்படுகின்றது. இவ்வாண்டு முதல் தொகுதி மாணவர்கள் 106 பேர் பரீட்சைக்கு தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிக்கு பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களை ஆரம்பித்த பெருமை இவரையே சாரும் பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கிய தென்மராட்சிப் பிரதேசத்தின் ஒரே ஒரு தேசியப் பாடசாலையாக விளங்கும் இக்கல்லூரியில் அதிகளவான ஏழைப்பிள்ளைகளை இணைத்து அவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து அவர்களைக் கல்வியில் முன்னிலைக்கு கொண்டு வந்த பெருமைக்குரியவர். இவரது காலப்பகுதியில் கல்லூரியின் மாணவர் தொகையினை 2000 இற்கும் குறையாமல் வைத்திருந்த நிலையும் 100 இற்கும் அதிகமான ஆசிரியர்களையும் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தியிருந்தார். இவ்வாறு கல்லூரியானது ஒரு ஆலவிருட்சம் போல் மிளிர்வதற்கு இவரே காரணமாவார்.

ஆசிரியத்துவத்தின் பார்வை இரு பக்கங்களில் நோக்கப்படுகின்றது. அதாவது ஒரு ஆசிரியரானவர் தனது சேவையில் சிறப்புப் பெற வேண்டுமெனில் ஒருபக்கம் சேவையும் மறுபக்கம் தொழிலும் என்ற கருத்தை தனது செயற்றிறனில் நிரூபித்துக் காட்டியவர். அதாவது கல்லூரியின் வளர்ச்சிப் பணியில் 24 மணிநேரமும் தன்னை ஈடுபடுத்தியதை நாம் காணக்கூடியதாக இருந்தது. இவரது சொல், சிந்தனை, செயல் எல்லாமே கல்லூரியின் வளர்ச்சியோடு ஒன்றித்திருந்தது.

ஆசிரிய சேவை, பல்கலைக்கழகத்தில் பணியாற்றியமை, நாட்டின் தென்பகுதியில் ஆசிரியப்பணி, கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியப்பணி, அதிபர்பணி, கொத்தணி அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி ஆகிய பதவிகளை அலங்கரித்தமையால் வடக்கு மாகாணத்தின் பல்வேறு பதவிநிலை அணியினரை நன்கு தெரிந்தவராகையால் கல்லூரியின் நிர்வாகப் பணிக்கு இவை மேலும் வலுச்சேர்த்தன என்றால் அது மிகையாகாது. வன்னி மண்ணில் பிறந்த எமது அதிபர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி கற்றதும், இப்பகுதியில் வசிப்பதும் இவரை கல்லூரியின் பால் அதிக ஈடுபாடு கொள்ள வைத்தது. 2004 ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கு வரும்போது கோட்டக்கல்வி அதிகாரி பணியிலிருந்து விடுபட்டே கல்லூரியில் அதிபராகப் பதவியேற்றார். கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றிய இவரின் காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

“நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே”

ஆ.தங்கவேலு
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப் பாங்குள்ள நிர்வாகி



எமது பேரன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் உயர்திரு.அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்கள் 02.02.2015 திகதியுடன் தமது ஏழு தசாப்தகாலத்திற்கு மேற்பட்ட சேவையை எமது பாடசாலையில் நிறைவு செய்து ஓய்வு பெறப் போகின்றார் என்ற விடயம் எம்போன்ற பழைய மாணவர்களுக்கெல்லாம் கடினமானதொன்றாகும். கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக 2000 மாணவர்களுக்கு மேல் கல்வி பயிலும் ஒரு ஆண், பெண் கலப்புப் பாடசாலையை மிகவும் செவ்வையான முறையில் வழிநடாத்திய சாதனையுடனும் பெருமையுடனும் ஓய்வு பெறுகின்றார். எமது பிரதேசத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையில் கடுமையான நெருக்கடிகள் நிறைந்த காலத்தில் பல பாரிய பிரச்சினைகளையெல்லாம் நெஞ்சுறுதியுடன் எதிர்கொண்டு வெற்றி கண்ட அதிபர் ஓய்வு பெறுகின்றார். ஒரு விளையாட்டு வீரன் தனது திறமையும், பெயரும், புகழும் உச்ச நிலையில் இருக்கும் போது தனது ஓய்வு பற்றி அறிவிப்பான், அதுபோல எமது அதிபரும் தனது சேவையில் புகழின் உச்சியில் இருக்கும் போது தனது ஓய்வு பெறும் வயதை எட்டுவது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

திரு.கயிலாயபிள்ளை அவர்கள் தனது அதிபர் சேவையுடன் மட்டும் தன்னை வரையறுக்காது சமூக, சமய சேவைகளில் எல்லாம் மிகவும் ஆர்வத்துடனும், துடிப்புடனும் முன்னின்று செயற்படும் ஒரு அற்புதமான பெரியவர். தனது வேலைப்பழுவின் இடையேயும், மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாகத்தில் ஒரு முக்கியமான தொண்டனாகவும், அநேக சமூக அமைப்புக்களில் முக்கியமான பதவிகள் ஊடாக தென்மராட்சியில் ஏழை, எளியவர்களுக்கு உதவி வருவது அநேகரும் அறிந்ததே.

இப்பேற்பட்ட சமூகத்துடன் ஒத்திசைந்து தனது பாரிய பொறுப்பான ஒரு தேசிய பாடசாலை அதிபர் பதவியையும் சிறப்புடன் வகித்ததோடு சமூகப்பாங்குள்ள நிர்வாகிக்கு தென்மராட்சி மக்கள் ஒரு மணிவிழாவை எடுப்பது மிகவும் பொருத்தமானதொரு கைங்கரியமாகும். மதிப்புக்குரிய அதிபரின் எதிர்காலம் சிறப்புற வாழ்த்தும் வேளையில் இம்மணிவிழா சிறப்புறவும் எனது நல்வாழ்த்துக்கள்.


யோகேஸ்வரன் ஜெயக்குமார்,
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதநேயம்மிக்க பணியாளன்

மணிவிழாக் காணும் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.



"நிறுவன இலக்கினை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு தன்னைத் தானே நெறிப்படுத்தி தனக்குக் கீழ் உள்ளவர்களையும் வழிப்படுத்தி நடத்தையின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் தலைமைத்துவம்" என வரையறுக்கப்படுகின்றது. கல்லூரியின் தலைவர் என்ற நிலையில் தென்மராட்சியின் தலைமைத்துவ தேசியக் கல்லூரியான சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இலக்குகளை அடைவதற்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு தடம்பதித்தவர் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக எத்தகைய நடவடிக்கைளை மேற்கொள்ளல் பொருத்தமானது என்பதை அவதானித்தறிந்து திட்டமிடக் கூடிய ஆற்றல் அவரிடம் காணப்படுகின்றது. மனிதாபிமானச் சிந்தனை கொண்டவர். வறிய மாணவர்களுக்கும் கல்வி வசதி குறைந்த பிரதேசங்களின் மாணவர்களுக்கும் கல்விக்கான வாய்ப்பளித்துப் தம்மால் இயன்ற ஆக்க பூர்வமான உதவிகளைச் செய்து கொடுப்பதில் ஆர்வம் கொண்டவர்.

கல்லூரியின் சூழலை கவின்நிலையுள்ளதாக அனைவரது விருப்பத்திற்குரிய இடமாகமாற்றி அமைத்ததுடன் அச்சூழலில் வளரும் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை வளர்த்தெடுத்து சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரசைகளாக சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்பதற்காக தனது நேரத்தை கல்லூரியில் அர்ப்பணித்து செயற்பட்டவராவார்.

அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களை பாடசாலை செல்லும் எவ்வேளையிலும் சந்திக்கக் கூடியதாக இருக்கும். கல்லூரிக்கான வளங்களை உயர்த்துவதிலும், கல்வி வளர்ச்சி கருதியும் சகல சமூகத்தவர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் வாய்ப்புக்களை மாணவ சமூகத்தின் கல்வி மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டவர் என்பதை நாம் அறிவோம்.


பழகுவதற்கு இனியவரான, மனித நேயம் மிக்கவரான அதிபர்அவர்கள் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக தனது குடும்பத்தினருடன் வாழ்ந்து கல்விப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் சேவையாற்றிட விநாயகப் பெருமானின் அருள் வேண்டி கனிவோடு வாழ்த்துகின்றேன்.

க.பத்மகாந்தன்,
செயலாளர்,
சாவ.இந்துக் கல்லூரி,
பழையமாணவர் சங்கம் கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our principal – A Versatile Personality



I have great pleasure to contribute this message to the souvenir that is to be published on the occasion of felicitating the service of our principal Captain A.Kailayapilai who is retired from service on the attainment of his sixty years of age on 3rd February,2015.

In his lifetime he played many vital roles that contributed towards the betterment of his fellowmen. He played the role of a teacher, a lecturer, the principal, the Divisional Education Officer and finally the principal of a leading national school,J Chavakachcheri Hindu College. in the Jaffna peninsula. He is well-versed and very versatile. He held the SLEAS Class III. His versatility made him move round as a hero among the managerial staff of his caliber.

He underwent National Cadet Corps Training held in Randampe and he was adorned with the title "Captain". He was one among the four Tamil Education Administration servicemen. This brought fame and recognition to him but also to the school community.

The well-equipped modern Auditorium and the Teachers'and Students' Welfare Centre under construction are the everlasting fruits of his great efforts.
I wish him a long , peaceful and happy retired life. Let the almighty shower his blessings on his family.

K.Jeyaveerasingam
President,
Teacher Fellowship



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயியாய் வாழ்ந்த சமூகப் பணியாளன்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை அவர்களின் சேவையை நயந்து நடைபெறும் விழாவில் மணிவிழா மலர் ஒன்று வெளிவருவதையிட்டு திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் சமூகத்தினர் ஆகிய நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றார். மாணவர் பருவத்தில் இருந்து நித்திய வழிபாட்டுக்காரனாகவும், தொண்டனாகவும், வழிபடுவோர் சபை செயலாளராகவும், தற்பொழுது தலைவராகவும் செயலாற்றி வரும் இவர் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற திருப்பணிகளிலும் கும்பாபிஷேகத்திலும் பங்குபற்றி மண்டலாபிஷேக மலரில் எமது மாவட்டத்தில் இந்து சமயத்தின் பரம்பல் பற்றி ஓர் அரிய கட்டுரை எழுதியிருந்தார். அதற்குப் பிறகு 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் திருப்பணிச் சபை செயலாளராகவும், கும்பாபிஷேக மலரின் ஆசிரியராகவும் செயற்பட்டார். அண்மையில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது வழிபடுவோர் சபையின் தலைவராகவும் இருந்து அப்போது வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரில் 'மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வளர்ச்சியும் செயற்பாடுகளும்' எனும் அரிய கட்டுரையை வழங்கியுள்ளார்.

அவர்அரச சேவையில் இருந்து இளைப்பாறினாலும் தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட எல்லாம் வல்ல மாவடிப் பிள்ளையார் அருளால் இவருக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையும், நோய் இல்லாத நீண்ட வாழ்வும் கிடைக்க மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

*சி.இராமலிங்கம்,*
*முகாமையாளர்,*
*திருநீலகண்டவெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில்,*
*மீசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாநாயகன் திரு அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களின் வாழ்வியல் தடங்கள்

திரு அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் வன்னேரிக்குளம் என்ற இயற்கை எழில் நிறைந்த கிராமத்திலே பொன்னாவெளியைச் சேர்ந்த உயர்திரு அருணாசலம் அவர்களுக்கும் குஞ்சுக் குளத்தை சொந்த இடமாகக் கொண்ட இலட்சுமி அவர்களுக்கும் முதல் மகனாக 03.02.1955 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திலும் பின்னர் இடைநிலைக் கல்வி, உயர்கல்வியை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். கல்வி கற்கும் காலத்தில் சிறந்த துடிப்புள்ள திறமையான மாணவனாய் விளங்கியதோடு கலைத்துறையில் கல்வி கற்று சிறப்பாகத் தேர்ச்சி பெற்று களனி பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியை மேற்கொண்டார். 1979 ஆம் ஆண்டு புவியியல் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார்.

27.01.1985 இல் மீசாலையைச் சேர்ந்த திலகவதியை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு வாழ்ந்த இனிதான இல்லறத்தின் பேறாக முத்தான மூன்று ஆண்பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்து

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க புதல்வர்கள் கல்வி, ஒழுக்கங்களில் சிறந்து விளங்குதல் கண்டு மகிழ்வெய்தி மேலும் அவர்கள் வாழ்வுக்கும் வழிகாட்டி சிறந்த தந்தையாக விளங்குகின்றார்.

1980 தொடக்கம் 1981 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பலக்லைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இணைந்து சிறப்பாகப் பணியாற்றினார். 1982 இல் நு/ சென்ஜோசப் தமிழ் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று பின்னர் கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திலும் பணியாற்றினார். கிளி/பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்திலும், கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை, கிளி/ முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றியதோடு ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். 1991 இல் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சை தரம் I இல் சித்தியடைந்து கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தில் 1992 இல் அதிபரானார். 1992 ஆம் ஆண்டு கொத்தணி அதிபராகப் பணியாற்றி 1994 இல் கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் அதிபராகப் பணியைப் பொறுப்பேற்று சிறந்த முறையில் பணியாற்றினார். அக்காலப்பகுதி கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் வரலாற்றில் மிக முக்கியமான வளர்ச்சிக் கட்டமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. 1996 இல் இடமாற்றம் பெற்று கிளி/பளை மத்திய கல்லூரியில் அதிபரானார். அக்கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய காலத்திலும் மிகச் சிறப்புறச் செயற்பட்டவர். தன்னலங்கருதாது கல்விப் பணிக்காய் தன்னை அர்பணித்து முழு நேர சேவையாளனாய் அதிபர் பணிக்கோர் அணிகலனாய் விளங்கினார். தன்னுடைய பணியின் சிறப்பினால் 1998 ஆம் ஆண்டு பளை கோட்டக் கல்வி அதிகாரியாக உயர்வு பெற்றார். இக்காலப் பகுதியில் அதிபர் அவர்கள் செய்த கல்விப் பணி சமூகப்பணி என்பவை எண்ணிறைந்தவையாகும். பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக இயங்காது போன எத்தனையோ பாடசாலைகளை தன் பெரும் முயற்சியால் மீண்டும் இயங்கச் செய்த பெருமை அதிபர் அவர்களையே சாரும். அப்பிரதேச மக்களின் உள்ளத்தில் நீங்காத சிறந்த கல்விப் பணியாளனாய் இடம்பிடித்தார்.

2004 ஆம் ஆண்டு யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபராய் இருந்த திரு.இ.கயிலைநாதன் அவர்கள் ஓய்வு பெற்ற போது கல்லூரியின் அதிபராய் பொறுப்பேற்றார். இங்கு வர முன்னரே 2002 - 2004 வரையான காலப்பகுதியில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினராய் செயற்பட்டார்.

**அதிபர் அவர்களது சேவை விபரம் வருமாறு,**

| | |
|---|---|
| யாழ் பல்கலைக்கழகம் உதவி விரிவுரையாளர் | 1980 - 1981 |
| நு/சென்ஜோசப் ம.வி - ஆசிரியர் | 17.02.1982 - 26.05.1986 |
| கிளி/வன்னேரிக்குளம் ம.வி - ஆசிரியர் | 27.05.1986 - 28.02.1989 |
| கிளி/பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | |
| ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் | 01.03.1989 - 31.12.1990 |
| கிளி/கிளாலி றோ.க.த.க.பாடசாலை | |
| ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் | 01.01.1991 - 31.01.1992 |
| கிளி/முரசுமோட்டை முருகானந்தா ம.வி | |
| ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் | 01.02.1992 - 23.08.1992 |
| கிளி/முழங்காவில் ம.வி - கொத்தணி அதிபர் | 24.08.1992 - 06.01.1994 |
| கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி - அதிபர் | 07.01.1994 - 17.03.1996 |
| கிளி/பளை மத்திய கல்லூரி - அதிபர் | 18.03.1996 - 31.06.1998 |
| கோட்டக்கல்வி அலுவலகம் பளை | |
| கோட்டக்கல்வி அதிகாரி | 01.07.1998 - 14.07.2004 |
| யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி - அதிபர் | 15.07.2004 - 02.02.2015 |

அதிபர் அவர்களது வாண்மை விருத்திச் செயற்பாடுகளை நோக்கும் போது யாழ் பல்கலைக்கழகத்தில் 1989 - 1991 கல்வியாண்டுப் பகுதியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வியைப் பயின்று பட்டம் பெற்றார். 2002 ஆம் ஆண்டு முதுகல்வி மாணிப் பட்டத்தையும் பெற்றார். 2004 ஆம் ஆண்டு முதல் ஒரு தசாப்த காலமாக எமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் அதிபராக சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் திரு. அ. கயிலயாபிள்ளை அவர்கள் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தலைசிறந்த பழைய மாணவர்களில் ஒருவராக விளங்கியவர். 2009 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இல் உள்ளீர்க்கப்பட்டு உயர்வு பெற்றார்.

2013 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான இராணுவ அதிகாரிகள் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெற்று கப்டன் தரத்தில் பதவி உயர்வு பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார். 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் இலங்கை அரசினால் வழங்கப்படும் பிரதீபா பிரபா விருதினைப் பெற்றார். சமாதான நீதவானாக, மீசாலை திருநீலண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சபைத் தலைவராக அதிபர் அவர்களுடைய சமூகப் பணி மிக நீண்டதாகும்.

இந்துக் கல்லூரியின் வரலாற்றில் அதிபர் அவர்களின் சேவைக்காலமாகிய ஒரு தசாப்த காலம் (2004 - 2015) சகல நிலைகளிலும் கல்லூரி வளர்ச்சி பெற்றது. பௌதிக வள விருத்தியில் அதிக கவனம் செலுத்திய அதிபர் அவர்கள் கல்லூரியின் பௌதிக வளத்தை சிறப்புற விருத்தி பெறச் செய்தார். கட்டட வசதிகள், நூலகம், மகிந்தோதய ஆய்வுகூடம், கல்லூரியின் பிரதான வீதிப் புறமுள்ள மதில் அமைப்பு, அலங்கார வாயில் அமைப்பு, பிரதான மண்டபத் திருத்தம், வகுப்பறைகளின் கவின்நிலை எனப் பலவகையிலும் கல்லூரி புதுப்பொலிவும் அழகும் நிறைந்ததாய் மிளிர்கின்றது. மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருப்பதும், கேட்போர் கூடத்திற்கான அடிக்கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதும், மாணவர் நலன்புரி நிலையம், ஆசிரியர் ஓய்வறை ஆகியவற்றிற்கான கட்டிட வேலைகள் ஆரம்பமாகவுள்ளதும் அதிபர் அவர்களின் பெரும் முயற்சியின் வெளிப்பாடே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கல்லூரிச் சூழலை இயற்கை அழகுபெற அமைப்பதிலும், மாணவரின் விருப்புக் குரிய இடமாய் ஆக்குவதிலும் முன்னின்று ஆலோசனை கூறி வழிப்படுத்திச் செயற்பட்ட வர். கல்லூரியின் கல்விப் பெறுபேறுகள் இணைபாடவிதானச் செயற்பாடுகள் என அனைத்து விடயங்களிலும் கல்லூரி வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்ல வழிகாட்டியவர்.

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கென வாகனங்கள் பெற்றுக் கொண்டமை இவரது தனித்திறமைக்கு எடுத்துக்காட்டாகும். பத்திரிகையில் வந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு முகமே அறியாத எமது ஸ்தாபகர் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு ரூபா 4 மில்லியன் பெறுமதியுடைய பேருந்தை எமது கல்லூரிக்குப் பெற்றுத் தந்தார். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சி.சிறிதரன் அவர்களிடமிருந்து முச்சக்கரவண்டியும் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர். ஆசிரியர்களின் திறனறிந்து தக்கார்க்கு தக்க பணி வழங்கி கல்லூரி நிர்வாகத்தில் சிறந்த ஆளுமைத்திறன் உள்ளவராக விளங்கியவர். பல்வேறு சூழலிலும் பல பதவி நிலைகளிலும் பணியாற்றிய அனுபவங்கள் இக்கல்லூரியில் சிறப்பாகப் பணியாற்ற வலுச் சேர்ப்பவையாக அமைந்திருந்தன.

கல்லூரியில் புதிய பல மாற்றங்ளை ஏற்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் சிறந்த நல்லுறவைப் பேணும் வகையில் பணியாற்றியவர். சிறந்த நிர்வாகியாக வும் சிறந்த சேவையாளனாகவும் கல்லூரிக்காகவே தனது பெரும் பொழுதையும் அர்ப்பணித்து இந்துக் கல்லூரி வரலாற்றில் தனக்கென தனியானதோர் தடம் பதித்தவர். இளகிய உள்ளமும், பரோபகார சிந்தனையும் எந்தச் செயலையும் துணிவுடன் மேற்கொள் ளும் செயற்றிறனும் கண்ணியமான நடத்தையும் பாடசாலை சமூகத்துடன் நல்லுறவைப் பேணும் உயர் பண்பும் ஒருங்கே அமையப் பெற்றவராகிய அதிபர் அவர்களின் ஓய்வு காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய வேண்டும் என மாவடி விநாயகனின் பாதங்களைப் பணிகின்றேன்.

**த. பாலசண்முகநாதன்**
**பிரதி அதிபர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறப்புக் கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞான-தொழினுட்பக் கல்வியின் இன்றியமையாமை.



பேராசிரியர் க.கந்தசாமி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலக நாடுகளில் ஐக்கிய அமெரிக்கா சீனா, ஜேர்மனி, யப்பான் போன்ற நாடுகள் பொருளாதார வல்லரசுகளாக மிளிர்வதற்கு தொழில் நுட்பத்தில் அவற்றின் அபரிமித வளர்ச்சியே காரணமெனலாம். நாடொன்றின் அரசியல் பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் இரு கண்கள் போன்றவை என்பர் அறிவுடையோர், இரு வலிமையுள்ள நாணயங்கள் போன்றவை என்பர் அரசியல் விஞ்ஞானிகள். இரண்டாம் உலகப் போரின் பின்னர் பொருளாதார ரீதியிலும் அரசியல் செயற்பாட்டிலும் உயர்ந்த நிலையில் உள்ள அமெரிக்காவின் உலகளாவிய அரசியல் பொருளாதார வளர்ச்சி நாடொன்றின் வளர்ச்சியில் விஞ்ஞானத்தினதும் தொழில் நுட்பத்தினதும் தாக்கத்தை நிதர்சனமாக்குகிறது. இக் கட்டுரை இவ்விரண்டிற்கும் இடையே உள்ள தொடர்புகளை எடுத்துக் கூறுவதும் அதனூடாக எமது பாடசாலைக் கல்வியில் இவ்விரண்டினது முக்கியத்தை எடுத்துக்காட்டுவதுமான இரு நோக்கங்ளை கொண்டது.

விஞ்ஞானம் என்றால் என்ன? எம்மைச் சூழவுள்ள பௌதீக, உயிரியல் உலகங்களைப் பற்றிய முறையானதும் முழுமையானதுமான அறிவே விஞ்ஞானம் எனலாம். இவ்வறிவை உண்டாக்குபவர்களையும் விளங்கிக்கொள்பவர்களையும் விஞ்ஞானிகள் என்போம். தொழில்நுட்பம் என்றால் என்ன? மனிதகுல மேம்பாட்டுக் காக விஞ்ஞான அறிவை உபயோகிக்கும் செயற்திட்டமே தொழில்நுட்பம். இச் செயற்திட்டங்களை உருவாக்கக்கூடியவர் ஆரம்ப காலத்தில் அதாவது 1860ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு இல்லாமலேயே இருந்தன. இக்காலகட்டத்தில் தொழில்நுட்பம் குடிசை செயல்திட்டமாகவே இருந்துள்ளதுடன் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி பல முறை பரீட்சித்து அதன் மூலம் வழுக்களை நீக்கும் செயற்பாட்டு முறையிலேயே (trial and errormethod) அமைந்திருந்தது. மேலும் இவற்றுக்கு இடையே தொடர்பு இல்லாது இருந்தமை இங்கிலாந்தில் 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியின் போது விஞ்ஞானத்தில் எவ்வித பாரிய வளர்ச்சியும் ஏற்படாமையில் இருந்தும் தெளிவாகிறது. ஆண்டு 1860 இற்குப் பின்னரே தொழில் நுட்பத்தில் விஞ்ஞான அறிவு அதிகளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகப்படுத்தப்பட தொடங்கியது எனலாம். இது இரசாயன தொழிற்சாலைகளில் சாய (dyc) உற்பத்தியில் அனிலைன் (aniline) உபயோகத்துடன் ஆரம்பமானது எனலாம்.

இப்போது சமுதாய வளர்ச்சிக்கு உதவிய சில தொழில் நுட்பங்களையும் அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த விஞ்ஞான அறிவுகளையும் பார்ப்போம் 1880 ஆண்டுகளில் தொழில்நுட்பவியலாளர்கள் மின்வலுப் பிறப்பாக்கிகளின் உற்பத்தியை ஆரம்பித்தனர். இவற்றின் உற்பத்தி பரடேயினது (Faraday) மின்காந்தத்தூண்டல் கொள்கையின் உபயோகத்திலேயே தங்கியுள்ளது. மேலும் இக்காலகட்டத்தில் (1880-1890) பெரும் சமூகமாற்றத்தை உண்டாக்கிய மோட்டார் இயந்திரத் தொழில் நுட்பம், தொலைபேசித் தொழில்நுட்பம் போன்றவை பௌதீக, இரசாயன, பொறியியல் விஞ்ஞான அறிவின்றி சாத்தியமாகி இருக்காது. 1920 இல் சமுதாயத்தின் அன்றாட வாழ்வில் மிகப்பாரிய மாற்றத்தை உண்டாக்கிய இன்னோர் தொழில்நுட்பமான தூரதேச ஒலிபரப்பு ஆரம்பித்தது. ஆரம்பத்தில் அயன் மண்டலத்தில் ஒலியலைகளின் தெறிப்பின் மூலம் தேசங்களுக்கிடையில் ஒலியலைகள் செலுத்தப்பட்டன. 1960 ஆம் ஆண்டின் பின்னர் உபகோள்களில் இருந்து அஞ்சல் செய்வதன் மூலம் ஒலியலைகள் தேசங்களுக்கிடையில் பரிமாறப்பெற்று துல்லியமாக அரசியல் அறிவியல் கலாசார நிகழ்வுகளையும் அன்றாட செய்திகளையும் எடுத்துச் செல்லும் தொழில்நுட்பமாக வளர்ந்துள்ளது. இவ்வற்றுக்கெல்லாம் 1873 இல் மின் காந்த அலைகளின் இயல்புகளைப் பற்றியதும் இவ்வலைகளால் ஊடகங்களில் சக்தியின் செலுக்கைக்குமான மாக்ச்வெல்லின் (Maxwell) கொள்கையும் 1888 இல் காட்சின் (Hertz) மின்காந்த சக்தியின் செலுத்துகைக்கான பரிசோதனை விளக்கமுமே அடிப்படையாக அமைந்தன. இவற்றின் அடிப்படையிலேயே 1898 இல் மாக்கோனி (Marconi) முதலாவது வானொலியை உற்பத்தி செய்த பின்னர் ஊடகங்களின் இடைமுகங்களில் அலைமுறிவுக்கான கொள்கையும், கோள்கள் பூமியைச் சுற்றிவட்டப் பாதைகளில் இயங்க வைப்பதற்கு தேவையான நிபந்தனைகளைப் பற்றிய, அதாவது சுற்று வேகத்தைப்பற்றிய நியூட்டன் (Newton) கெப்பிளர் (Kepler) போன்றவர்களின் புவியீர்ப்புப் பற்றிய விஞ்ஞான விளக்கங்களுமே ஒலிபரப்புத் தொழிலில்நுட்பத்தின் அனுகூலங்கள் மனித சமுதாயத்தின் ஒவ்வோர் அங்கத்தவனையும் அதாவது தொட்டி தோறும் வாழும் மனிதர்களையும் சென்றடையக் கூடியதாக்கியதெனலாம்.

மேலும் இவற்றுக்கு சிகரம் வைத்தாற்போல் திண்மங்களின் பௌதிக இயல்பு பற்றிய அறிவும் திண்மமொன்றில் குறிப்பாக குறைக்கடத்திகளில் உள்ள இலத்திரன்களின் அசைவுகளை எமது தேவைக்கெற்ப செயற்படுத்தக்கூடிய விஞ்ஞான அறிவுமே திரான்சிஸ்தரின் (Transistor) உருவாக்கத்துக்கு வித்திட்டது. திரான்சிஸ்தரின் தொழிற்பாட்டைப்பற்றிய விஞ்ஞான அறிவே. திரான்சிஸ்ரரை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பம் வானொலிப் பெட்டியின் உற்பத்தியில் மட்டும் இன்றி இன்று மனிதகுல மேம்பாட்டுக்காகப் பிரயோகப்படுத்தப்படும் எல்லா வகையான உபகரணங்களின் உற்பத்தியிலும் உபயோகப்படுத்தப்படுவதுடன் இவ்வுபகரணங்களின் உற்பத்தியை எளிதாகவும் நம்பகத்தன்மை உள்ளதாகவும் செலவு குறைந்ததாகவும் செய்துள்ளது. மேலும் அதிகரிக்கக் கூடிய முறையில் சிக்கலான கணிப்புகளை விரைவாக செய்யக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினிகளின் உற்பத்தியையும் சாத்தியமாக்கியது. இத்தகைய தொழில்நுட்பப் புரட்சியை செய்த திரான்சிஸ்ரரின் கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்தது. திண்மங்களைப் பற்றிய பௌதிக விஞ்ஞான அறிவே. 1874 ஆம் ஆண்டு இருவித்தியாசமான இயல்புகளை உடைய குறைகடத்திகளின் சந்தியொன்றின் (அதாவது P-வகை N-வகை சந்தியொன்றின் சீராக்கும் (rectification) தொழிற்பாடு Braun என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 1948 ஆம் ஆண்டில் தான் முதன்முதலாக இவ்வகையான இரு சந்திகளின் சேர்மானமான திரான்சிஸ்ரரின் தொழிற்பாடு Bardeen ஆல் விளக்கிக் காட்டப்பட்டது. இதன் பின்னர் திரான்சிஸ்ரரை அலகாகக் கொண்ட பெருக்கிகள், அலையங்கள் போன்ற பலவிதமான திண்மனிலை இலத்திரனியல் கருவிகள் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது. மேலும் இக் கருவிகளின் இயல்புகளையும் தொழிற்பாடுகளையும் உபயோகங்களையும் பற்றிய அறிவே பௌதிகவியல் குழந்தையாகப் பிரமிக்கத்தக்கவகையில் வளர்ந்து இன்று இலத்திரன் பொறியியல் என்ற பொறியியல் பிரிவாக மிளிர்கிறது.

அடுத்ததாக இன்னோர் முக்கியமான லேசர் (LASER) கதிரை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பமே இருபதாம் நூற்றாண்டில் பல துறைகளில் மனிதகுல மேம்பாட்டுக்கு உதவியது எனலாம். லேசர் என்ற சொல் light amplification by stimulated emission of radiation என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கமே அதாவது இதை தமிழில் கதிர் வீசலின் ஊக்கியகாலால் ஒளிப்பெருக்கம் என்போம். லேசர் கதிர்களின் ஒரு நிற இயல்பும், உயர் செறிவும் மெல்லிய கதிர் வடிவமுமே பல தொழில்நுட்பங்களில் இதன் உபயோகத்திற்கு அடிப்படையாக அமைந்தனவெனலாம். 1960 ஆம் ஆண்டு இரத்தினக் கல்லாலான முதலாவது லேசர் முதல் Maiman ஆல் உற்பத்தியாக்கப்பட்டது. ஆனாலும் இதற்கு பல வருடங்களுக்கு முன்னரே ஊக்கிய காலால் மூலம் மின்காந்த அலைகளின் உற்பத்தியின் சாத்தியத்தை விஞ்ஞான அறிவு உணர்த்தி நின்றது. லேசர் கதிரின் உயர் செறிவாலும் குவிக்கப்படக்கூடிய தன்மையாலும் வலுக்கூடிய லேசர் முதல்கள் உலோகத் தொழிற்சாலைகளில் வலிமையான திண்மங்களை வெட்டவும் திண்மங்களில் திருத்தமாக துளை போடவும் உபயோகிக்கப்படுகின்றன. இதேவேளை வலுக்குறைந்த லேசர் முதல்கள், ஆடைத் தொழிற்சாலைகளில் துணிகளை வெட்ட உபயோகிக்கப்படுகின்றன. மேலும் நுண் இலத்திரனியல் தொழிற்சாலைகளில் வலுக்குறைந்த லேசர் முதல்கள் குறைகடத்திக் கருவிகளை செறிவாகவும், அவை மிகை வெப்பமாக்கப்படுவதால் தாக்கப்படாமலும் ஒட்டி மின்சுற்றுகளை உண்டாக்க உபயோகிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளில் வெட்டும் கருவியாகவும் ஒட்டும் கருவியாகவும் உபயோகிக்கப்பட்ட லேசர் முதல்கள் மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சை உபகரணமாகவும் உபயோகிக்கப்படுகின்றன. புற்றுநோய் கலங்களையும், சிதைந்த பல்லின் பகுதிகளையும் அழிக்கும் சிகிச்சையிலும் இரத்த நாளங்களில் இரத்த ஓட்டத்திற்கு ஏற்படும் தடுப்புக்களால் நோயுற்ற இருதய நோயாளரிற்கு பக்கவழி நாளங்களை பொருத்தும் சத்திரச் சிகிச்சையிலும், கண்விழிப் படலத்தில் பிரிதல் ஏற்பட்டு பார்வை அற்றுப் போனவர்களுக்கு விழிப்படலப் பிரிவுகளை சேர்த்து ஒட்டும் சிகிச்சையிலும் லேசர் கதிர்கள் உபயோகிக்கப்படுகின்றன. மேலும் ஊடகங்களின் இடைமுகங்களில் ஒளிக்கதிரின் முழு உட்தெறிப்பு பற்றிய விஞ்ஞான அறிவை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியாக்கப்பட்ட ஒளிநார் மருத்துவத்தில் லேசரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகத்தை மேலும் அதிகரித்தது. காது, மூக்கு, போன்ற உறுப்புக்களின் அணுகமுடியாத பகுதிகளுக்கும் ஒளிநார்களின் உதவியுடன் லேசர் கதிர்கள் செலுத்தப்பட்டு சத்திரச்சிகிச்சை செய்யப்படுகிறது. சத்திர சிகிச்சையில் லேசர் கதிரை உபயோகிப்பதால் நோயாளிக்கு சிகிச்சையின் போது நோவோ இரத்தப் பெருக்கமோ இராது, அத்துடன் மருத்துவர்களும் அறுவைச் சிகிச்சையை துல்லியமாக குறிதவறாது செய்ய உதவும். லேசர் கதிர் தொழில்நுட்பத்தின் ஏனைய பிரமிக்கத்தக்க, தொழில்நுட்பங்கள் Holography எனப்படும் முப்பரிமாண பிரதிவிம்பம் பெறும்முறையும், நகர அலுவலகங்களுக்கிடையில் ஒளிநார்களின் உதவியுடன் தொடர்புச்சாதனமாக பயன்படலுமாகும். மேற்கூறிய வழிகளில் மனிதகுல சுபீட்சத்துக்கு உபயோகிக்கப்பட்ட லேசர் கதிர் தொழில்நுட்பம் இராணுவத்துறையில் எதிரிகளின் ஏவுகணைகளையும் இராணுவ நிலைகளையும் அழிக்கவும் உபயோகிக்கப்படுகின்றது. வருங்காலத்தில் தொடர்புச்சாதனங்களிலும், கருச்சேர்க்கையால் சக்தி உற்பத்தி செய்வதற்கும் செயல்திறன் மிக்க உயர்வேக கணினிகளின் உற்பத்தியிலும் லேசர் கதிர் தொழில்நுட்பம் தாக்கத்தை உண்டாக்கும் சாத்தியக் கூறுகளை விஞ்ஞான அறிவு உணர்த்தி நிற்கிறது.

மனித சமுதாயம் மிகவும் கவனத்தில் கொள்ளும் இன்னோர் தொழில்நுட்பம் சக்தி உற்பத்தியாகும். நாடொன்றின் பொருளாதார முன்னேற்றம் அந்நாட்டின் சக்தி உபயோகத்தில் தொடர்புற்று உள்ளது. ஆரம்பகாலத்தில் மனிதன் தனது தேவைக்கேற்ப குடிசைத் தொழில் முறையில் கரியை எரித்து சக்தியை பெற்றான். பின்னர் விஞ்ஞான அறிவு கரியில் இருந்து சக்தியைப் பெறும் முறைகளில் திருத்தங்களை புகுத்தியது. இம்முறை சுற்றாடலை மாசுபடுத்தக்கூடியது என்ற படியாலும் நாகரீக உலகின் நாளாந்த உபயோகத்துக்கு உயர் வலுவுள்ள சக்தியின் தேவையாலும் விஞ்ஞான அறிவு வளர்ச்சி கரியில் இருந்து பெறும் முறைகளுக்கு பதிலாக பெற்றோல், டீசல் போன்ற திரவ எரிபொருள்களை உபயோகித்து சக்தியைப் பெறும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியது. இதனால் ஏனைய தொழில் நுட்பங்களிலும், மனிதனின் அன்றாட வாழ்விலும் ஏற்பட்ட தாக்கங்கள் அனேகம். தற்சமயம் அணு உலைகளில் இருந்தும், சூரிய ஒளியில் இருந்தும் சக்திகளைப் பெற்று மனிததேவைக்கு ஏற்ப உபயோகப்படுத்தும் அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. இவற்றுக்கு அணுக்கருவைப் பற்றி அறிவை உண்டாக்கிய இரத போட்டின் விஞ்ஞானக் கண்டுபிடிப்பும், கருவின் உள்ள கருத்துணிகளின் பிணைப்பைப்பற்றிய அறிவும் **1934** இல் Halin, Stressman என்பவர்களின் கருப்பிளவுப் பரிசோதனைகளும் **1938** இல் கருப்பிளவைப் பற்றிய Meitner, Frisch என்பவர்களின் விஞ்ஞான விளக்கமும் **1942** இல் பேமியின் (Fermi) தாமாகவே தொடர்ந்து கருப்பிளவு ஏற்படுத்தும் யூரேனியம் கருவின் சங்கிலிக்கருப்பிளவு தாக்கப் பரிசோதனையுமே அணு உலைகளில் இருந்து சக்தியைப் பெறும் தொழில் நுட்பத்தை சாத்தியமாக்கியது. தற்போது நாடுகளின் குறிப்பாக வளர்முக நாடுகளின் சக்தி தேவையின் பெரும்பகுதி திரவ எரிபொருள்களில் இருந்தே பெறப்படுகிறது. பூமியில் கிடைக்கக் கூடிய திரவ எரிபொருள்கள் இன்னும் இருபது அல்லது இருபத்தைந்து வருடங்களில் முற்றாக உபயோகப்படுத்தி முடிந்துவிடும். இதனால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை தீர்க்கக் கூடிய பல மாற்று வழிகள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றே, சூரியனில் இருந்து பெறப்படும் சூரிய சக்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் இலங்கை போன்ற நாடுகளுக்கு மிகவும் பொருத்தமான ஓர் முறை போன்று தோன்றினாலும் இதற்கான தொழில் நுட்ப முன்னேற்றம் போதாத நிலையிலேயே இந்நாடுகள் இருக்கின்றன. சூரிய ஒளியை மின்னோட்டமாக்கும் தொழில்நுட்பம் குறைகடத்திச் சக்தியொன்றின் Photo voltaic effect தொழிற்பாட்டைப் பற்றிய விஞ்ஞான அறிவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. *1876* ம் ஆண்டு இவ்விளைவு Adams,Day என்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விஞ்ஞான அறிவு ஆரம்பகாலத்தில் தெரிந்து இருந்தாலும் வானவெளிப் பிரயாணதொழில் நுட்பத்தின் ஆரம்பத்துடனேயே இவ்விளைவைஅடிப்படையாகக் கொண்டதொழில் நுட்பம் உபயோகத்துக்குவந்தது. முதலாவது சூரியகலம் *1958* இல் Vanguard-1 என்ற உபகோளில் உபயோகப்படுத்தப் பட்டது ஆனால் எரிபொருள் தட்டுப்பாட்டுப் பிரச்சனை *1973* இல் ஆரம்பித்ததன் பின்னரேசமுதாயத்திற்கு வேண்டிய சக்தியைப் பெறுவதற்கு Photo Voltaic விளைவின் பரந்த உபயோகிப்பதற்கானஆராய்ச்சிகள் முடுக்கிவிடப்பட்டன. தற்போதுபலவிதமான சூரியகலங்கள் சந்தைப்படுத்தப்பட்டு உள்ளன என்றாலும் இன்றையநிலையில் சாதாரணமக்களுக்கு எட்டாதஓர் தொழில் நுட்பமாகவே இது நிகழ்கிறது.

கடந்தகாலத்தில் பாரியவளர்ச்சிகண்டதொழில் நுட்பங்கள் பௌதீக விஞ்ஞான அறிவை அடிப்படையாகக் கொண்டவையே. ஆனால் தற்போதுசமுதாயமுன்னேற்றத்தில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணக்கூடிய வருங்காலத்தில் பாரிய வளர்ச்சியை அடையக் கூடியசிறப்பாக *21*ம் நூற்றாண்டின் தொழில்நுட்பம் என கூறப்படுவது உயிர்த்தொழில் நுட்பமாகும் (Bio-Technology).இது உயிரியல் விஞ்ஞான அறிவைஅடிப்படையாகக் கொண்டது. இதைப்பற்றி சில குறிப்புகளை இப்போதுபார்ப்போம். முன்னைய காலங்களில் மதுசார உற்பத்தியில் நொதிக்க வைத்தல் போன்ற உயிர்த் தொழில் நுட்பங்கள் சிறியஅளவில் கவர்ச்சியற்ற நிலையில் இருந்தன. ஆனால் *1973* இல் Herrber,Boyer,Stanley Cohen என்பவர்கள் செயற்கையாக புதிய நுண்ணங்கிகளை (Micro-organisms) உண்டாக் குவதற்கான DNA மூலக்கூறுகளின் மீள்சேர்க்கைத் தொழில் நுட்பத்தை உருவாக்கினார்கள் (Genetic Engineering). இதன் பின்னரே உயிர்த் தொழில் நுட்பம் கவர்ச்சியுள்ளவோர் துறையாக மாறியதெனலாம். இதனால் விவசாயத் துறையிலும் மருத்துவத்துறையிலும் பாரிய விளைவுகளை உண்டாக்கக் கூடிய கண்டுபிடிப்புக்கள் நிகழத்தொடங்கியுள்ளன.

விவசாயத் துறையில் அதிக உற்பத்தியைத் தரக் கூடிய வித்துகளை உற்பத்தி செய்வதிலும் நாடொன்றின் தட்பவெப்ப சூழலுக்குஒத்துப் போகக்கூடிய பயிர்வகைகளை உற்பத்தி செய்வதிலும் மனித சமுதாயம் அன்றாடம் உணவாக அருந்தும் தானியவகைகளில் புரதசக்தியை கூட்டுவதிலும் உயிர்த் தொழில் நுட்பம் நல்லமுன்னேற்றம் அடைந்துள்ளது. மருத்துவத்துறையில் நீரிழிவுநோய்க்குமருந்தானமனித Insulin உற்பத்தியிலும் எரிகாயங்கள் எலும்பு முறிவுகளைகுணப்படுத்தக் கூடிய மனிதஉடல் வளர்ச்சிசுரப்பிகளை உற்பத்தி செய்வதிலும் (Human growth homon) குறிப்பாக Interferon எனப்படும். இயற்கையான தொற்றுநோய் நீக்கியின் உற்பத்தியிலும் உயிர்த் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது. சிறப்பாகக் கூறில் சாதாரணபுண்களில் இருந்துபுற்றுநோய் வரையும் தடிமனில் இருந்து இரத்தம் கட்டியாதல் வரையுமான நோய்களுக்கு சிகிச்சை செய்யக்கூடிய அளவிற்கு இத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம் வளர்கிறது எனலாம். இளைய பொறியியல் (Tissue Engineering) இன்னோர் வளரும் உயிர் தொழில் நுட்பப் பகுதியாகும். இவை போன்ற பல உயிரியல் தொழில்நுட்பங்கள் அறிமுகமாகக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன என்று கூறலாம். இவைகளுக்கு எல்லாம் அடிப்படையாக அமைந்தவை உயிரியல் மூலக்கூறுகளின் அமைப்பையும் அவற்றின் தொழிற்பாடுகளைப்பற்றியவிஞ்ஞான அறிவுகளுமே அதாவது மூலக்கூற்று உயிரியல், கலஉயிரியல், பரம்பரை உயிரியல் போன்ற விஞ்ஞான அறிவுகளே. ஆண்டு 1953 இல் James WatsonFrancis Crick என்ற விஞ்ஞானிகளின் D.N.A. மூலக்கூறுகளின் அமைப்புமாதிரியை Xகதிர் பரிசோதனைமுடிவுகளின் அடிப்படையில் முன்மொழிந்தனர். ஆண்டு 1960 இல் Khoranoஆல் முதலாவதுசெயற்கை Gene உண்டாக்கப்பட்டது. அதன் பின்னர் மரபுப் பண்புகளின் தொழிற்பாடுகளைப் பற்றியகண்டுபிடிப்புகள் வெளிவந்தன இது புதிய அடிப்படைப் பரம்பரை இயல்புகளை உடைய புதிய Genes களை உற்பத்தியாக்க உதவியது. இது விஞ்ஞானத்தில் ஏற்பட்டவோர் புரட்சிஎனலாம்.

மேலே கூறியவற்றில் இருந்து மனிதகுல மேம்பாட்டிற்கு தொழில் நுட்பம் எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவுதொழில் நுட்பத்தின் வளர்ச்சிக்கு விஞ்ஞான அறிவும் இன்றியமையாதது என்பதும் தெளிவாகிறது. மேலும் தொழில் நுட்பவியலாளன் மனிதகுலத்தின் நன்மைக்குபெரிதும் உகந்ததொழில் நுட்பங்களின் உற்பத்தியிலும் வளர்ச்சியிலும் தனது முழுக்கவனத்தையுதம் செலுத்த வேண்டிய கடமை உடையவனாக உள்ளான். இவற்றுக்குஅடித்தளம் அமைப்பதுஅறிவியலாளரின் கடமையாகும். அதாவது நாடொன்றின் முன்னேற்றதுக்கு உதவக்கூடிய விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது அவனது கடமையாகும். ஆனாலும் விஞ்ஞானியொருவன் தனதுஆராய்ச்சிகளைச் சிலகுறிப்பிட்டவரையறைக்குள் கட்டுபடுத்திக் கொள்ளல் மிகக்கடினமானதும் தேவையற்றதும் ஆகும். சிலசமயங்களில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் தொழில் நுட்பமுக்கியத்துவம் கண்டுபிடித்தவுடனேயே உணரப்படுவதில்லை ஆனால் பிற்காலத்தில் சமுக முன்னேற்றத்துக்கு தேவையான தொழில் நுட்பத்தில் அவற்றின் முக்கியத்துவம் உணரப்படுவதும் உண்டு. உதாரணமாகபரடே தனது மின் காந்தத்தூண்டல் விளைவுகளைப் பற்றிய கண்டுபிடிப்புக்களை விஞ்ஞானிகள் மத்தியில் எடுத்துக்கூறியபோதுஅவர்களில் ஒருவர் இவைகள் எல்லாவற்றாலும் மானிடத்துக்கு என்னநன்மைஉண்டாகும் என்ற கேள்வியை எழுப்பினார். அப்போதுபரடே பிறந்த குழந்தையைப் பார்த்து இதன் உபயோகம் என்னவென்று கேட்பதுபோல் இக் கேள்வி உள்ளதுஎன்று கூறிநகைத்தார். இன்று அக் கேள்விக்குரிய பதிலாகஅவரது கண்டுபிடிப்பின் பயன் மின் சக்திஎன்றவடிவில் மனிதகுலம் அனுபவிக்கமுடிகிறது. இப்படியான பல உதாரணங்களை கூறலாம். மேலும் சிலசமயங்களில் அடிப்படைஆராய்ச்சியொன்றின் போதுஎதிர்பாராதவிதமாகஏற்படும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் தொழில் நுட்ப உபயோகங்கள் வியப்புட்டுவதாக இருந்துள்ளன. உதாரணமாகக் கதோட்டுக் கதிர்களின் இயல்புகளைப் பற்றியஆராய்ச்சியின் போது X- கதிர் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது. இன்று மருத்துவத்துறையிலும் தொழிற்சார் துறைகளிலும், விஞ்ஞான அடிப்படை ஆராய்ச்சிகளிலும் X- கதிர் தொழில்நுட்பத்தின் உபயோகம் அளப்பரியது. இவ்வுதாரணங்கள் விஞ்ஞான ஆராய்ச்சிகள் சமுதாய வளர்ச்சிக்கு உகந்தவையாக இருக்கவேண்டும் என்ற நோக்குடன் தொடங்க வேண்டியனவாக இருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவையல்ல. ஆனால் தொழில்நுட்பம்சமுதாய வளர்ச்சிக்கு உகந்தவையாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஆரம்பிக்க வேண்டியவையாக உள்ளன எடுத்துக் காட்டுகின்றன.


அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சியி எமது நாடு போன்ற வறிய, சிறிய நாடுகளுக்கு மிகப் பெரிய சுமையாகும். இதனால் பல சிறிய நாடுகள் முன்னேறிய நாடுகளிடம் இருந்து தொழில்நுட்பத்தை வாங்குகின்றன. இது அந்நாட்டின் நீண்டகால வளஉச்சிக்கு உதவாது ஒவ்வோஉ நாடும் தனது வளஉச்சிக்குத் தேவையான தொழில்நுடபத்தை இனங்கண்டு அவற்றுக்குத்தேவையான விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது மிக அவசியம். உதாரணமா ஓஉ வளரும் நாட்டுக்கு அதிக பணச் செலவை உண்டாக்கக்கூடிய அடிப்படைத்துணிக்கைகளின் இயல்பைப் பற்றிய அல்லது அண்ட வெளிக்கதிஉகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் தேவையற்றவை. ஆனால் சடப்பொருட்களின் இயல்பு பற்றிய, உயிரியலைப்பற்றிய,திரும்ப புதுப்பிக்கக் கூடிய சக்தி பற்றிய அல்லது சுற்றாடல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்பொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். இலங்கை போன்ற மிகவும் சிறிய நாடுகள் இப்படியான ஆராய்ச்சிகளைக் கூட மேற்கொள்ளக்கூடிய பொருளாதார வல்லமையற்றவையாக இருக்கும். ஆனால் நாடொன்று தனது வளஉச்சிக்குத் தேவையான தொழில்நுட்பத்திற்கு அடிப்படையான விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளாமல் விடுதல் தனது வயஉச்சியில் விடும் பாரிய தவறாகும். அதாவது விஞ்ஞான கண்டுபிடிப்புகள் இன்றி நாடொன்றில் தொழில்நுட்ப முன்னேற்றமோ சமுதாய வளஉச்சியோ இருக்க முடியாது.

இதன் அடிப்படையில் எமது அரசாங்கம் நாட்டின் வளர்ச்சிக்கு உகந்த அடிபடை ஆராச்சிகளை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய உந்துதல்களையும் உள்ளீடுகளையும் பல்கலைக்கழகங்களுக்கும் ஆராய்ச்சிநிறுவனங்களுக்கும் கொடுப்பதுடன் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையான தொழில்நுட்பத்திறன் உடைய இளம் சமுதாயத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைக்காக க.பொ.த உயர்தரத்தில் தொழில்நாட்பக் கற்கை நெறியை அறிமுகம் செய்துள்ளதுடன் அடுத்த வருடம் 2016 இல் இருந்து தொழினுட்பக்கல்வியைப் பட்டத்துக்குரிய கற்கை நெறியாக பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கவும் உள்ளது.மேலும் க.பொ.த உயர்தர தொழில்னுட்ப கற்கைறில் சித்தி பெற்று பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறமுடியாத மாணவர்கள் தொழில்னுட்பக் கல்வியைத் தொடர ஐந்து பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் உருவாக்கியுள்ளது. தொழில்னுட்பக் கற்கை நெறியைப் பாடசாலைகளில் ஆரம்பித்ததின் ஏனைய நோக்கங்கள் தொழில் வழங்கினர்களை சமுகத்தில் உருவாக்குவதும், க.பொ.த உயர்தரத்தில் நாட்டின் மேம்பாடுக்குத் தேவையான விஞ்ஞான அடிப்படையிலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கை நெறிகளுக்கு மாணவர்களை கவருவதுமாகும். அதாவது க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானக், கணிதவிஞ்ஞானக் கற்கை நெறிகளை தெரிசெய்ய விருப்பமில்லாத, தெரிசெய்ய வாயப்பில்லாத மாணவர்களில் கூடிய அளவிலான மாணவர்களை, தொழில்னுட்ப கற்கைநெறிகளுக்கு ஈரப்பதாகும். தொழில்னுட்பக் கற்கைநெறியின் அறிமுகம் உயிரியல் விஞ்ஞானக், கணிதவிஞ்ஞானக் கற்கை நெறிகளை தெரிசெய்யும் மாணவர்களின் பாதையை மாற்றுவதற்கானதன்று அதாவது அவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதல்ல. எமது நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் உயிரியல் விஞ்ஞானக், கணிதவிஞ்ஞானக் கற்கை நெறிகளை தெரிசெய்யும் மாணவர்களின் தொழில் வாய்ப்புகள் உயர்ந்த நிலையிலேயே உள்ளனவெனலாம். இன்று பாடசாலைகளில் கற்பிக்கப்படும் தொரழினுட்பத்துக்கான பாடவிதானத்தில் மோட்டார் வாகனத் தொழில் நுட்பம், கட்டுமானத் தொழில் நுட்பம் ,வீட்டு மின்னிணைப்புத் தொழில் நுட்பம் , உணவு பாதுகாப்புத் தொழில் நுட்பம் , தாவர இனப்பெருக்கத் தொழினுட்பம், அறுவடைக்குப் பிந்திய தொழினுட்பம். போன்ற கற்கை அலகுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களுக்கு தொழில் ஒன்றினை பெறுக்கூடிய கல்வியைப் பெறுவதற்கான சந்தற்பத்தை வளங்குவதுடன் நாளாந்த வாழ்விற்குப் பயன்படத்தக்க தொழினுட்பத்திறனையும், நாளாந்த வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தொழினுட்ப ரீதியான தீர்வுகளைப் பெறும் ஆற்றலையும் மாணவர்களுக்கு கொடுத்தலாகும். பாடசாலைகளும் மாணவர்களும் இந்த நல்ல சந்தர்ப்பத்தை சரியாகப பயன்படுத்தி சமுகத்துக்கும் விட்டுக்கும் பிரயோசனப்படக் கூடிய அறிவுசார் இள வயதினரை உருவாக்குவது எமது கடமையாகும்.

முற்றும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழரின் வாழ்வியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் - குடிப்புள்ளியியல் பார்வை

**பேராசிரியர் கா.குகபாலன்**
முன்னாள் துறைத்தலைவர்
புவியியல்துறை,யாழ்பல்கலைக்கழகம்

ஒரு நாட்டின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியினை முன்னெடுத்துச் செல்வதற்கு அந்நாட்டில் காணப்படக் கூடிய மனித வளமானது பிரதான பங்களிப்பினை வகித்து வருகின்றது. அபரிமிதமான இயற்கை வளங்கள் காணப்பட்டாலும் அவற்றினைக் கையாளக் கூடிய மனிதவள அபிவிருத்தியின்றேல் அந்நாடு விருத்தி பெறுவதென்பது கடினமானதாகிவிடும். அதுமட்டுமல்லாது அந்நாட்டில் வாழ்ந்து வரக்கூடிய மக்கள் இன, மத, மொழி சாதி அடிப்படையில் குரோதமனப்பான்மையுடன் செயற்படும் பட்சத்தில் அந்நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இடையூறாகவிருப்பது மட்டுமல்லாது மக்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் தடையாக அமையும் நிலையும் ஏற்படலாம். இதற்கு உலகில் பல நாடுகளை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த வகையில் இலங்கையில் மனித வளத்தினைச் சிறப்பான முறையில் பயன்படுத்துவதில் காணப்படும் தவறினாலும் நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலைகளினாலும் இனங்களுக்கிடையே சமத்துவம், சகோதரத்துவத்தினைப்பேணுவதில் பெரும்பான்மையினத்தினரிடையே காணப்படக் கூடிய அசமந்தப் போக்கும் இலங்கையில் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியைக் கட்டியெழுப்புவதற்கு தடையாகவுள்ளன என பொருளியலாளர்கள் அரசியல் விஞ்ஞானிகளால் சுட்டிக் காட்டப்படுவதையும் காண முடிகிறது.

இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் பதவிக்கு வரும் பெரும்பான்மையினத்தவர்களைக் கொண்ட அரசாங்கங்கள் இலங்கைத் தமிழர் உட்பட சிறுபான்மையினங்களுக்கு உரிய கௌரவத்தினை வழங்காது அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக்கருதி செயற்படுவதன் விளைவாக காலத்துக்குக் காலம் பொருளாதார ரீதியிலான சொத்துக்களை இழந்தும், சமூக பண்பாட்டு விழுமியங்களை இழந்தும் உயிர்களைத் துறந்தும் வாடும் நிலை தொடர்ந்த வண்ணமுள்ளன. ஜனநாயக ரீதியில் உரிமைகளைக் கேட்கும் பட்சத்தில் இனக்கலவரங்களாக பரிணமித்து பல்வேறுபட்ட அவலங்களை சந்திக்கும் நிலை ஏற்பட்டு வந்துள்ளது. அது தொடர் கதையாகவுள்ளது. இதன் விளைவாக 1980 களிலிருந்து அகிம்சை வழியிலான போராட்டம் தோற்ற நிலையில் ஆயுதப் போராட்டங்களை தமிழ் இளைஞர்கள் ஆரம்பித்து உரிமை வேண்டிப் போராடிய போதிலும் 2009 ஆம் ஆண்டு அப்போராட்டம் மௌனிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இலங்கையில் இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலில் 1970 களின் பின்னரான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதிகளில் பல்வேறுபட்ட அசாதாரண மாற்றங்கள் ஏற்படலாயிற்று எனலாம். அதாவது இவர்கள் தம் சமூக, பொருளாதார, பண்பாட்டு கோலங்களில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் குடிப்புள்ளியியல் பண்புகளை நிலைகுலையச் செய்துவிட்டது என்பதே உண்மை நிலையாகும்.

## வரலாற்றில் தமிழர்

இலங்கையில் பெரும்பான்மையினத்தவர்களாகிய சிங்களவர்களும் இலங்கைத் தமிழர் (பூர்வீகத்தமிழர்) இந்தியத்தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் போன்ற சிறுபான்மையினரும் ஒருங்கே வாழ்ந்துவரினும் அவர்களிடையே நீண்டகாலமாக ஒற்றுமையிலும் வேற்றுமைப் பண்புகளே மேலோங்கியிருந்துள்ளதை வரலாறு தெரிவிக்கின்றது. இந்நாட்டில் வாழ்ந்து வரும் சிங்களவர், இலங்கைத் தமிழர் மட்டுமல்லாது இந்தியத்தமிழர், முஸ்லீம்களில் ஒருபகுதியினர் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்பது பற்றி வரலாற்றுக்குறிப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இவர்களில் சிங்களவர், இலங்கைத் தமிழரின் உள்வரவானது காலத்தால் முந்தியது என்பதற்கு மாற்றுக் கருத்துக்கள கிடையாது. எனினும் சிங்கள, பாளி இதிகாசங்கள் சிங்களவர்களின் வரவும், வாழ்வும் பற்றி கூறிச் செல்கின்ற போதிலும் தமிழரின் வரவு பற்றியோ வாழ்வு பற்றியோ சாதகமான முறையில் தரப்படவில்லை. அல்லது கூறாது மௌனம் சாதித்துள்ளனர் எனலாம். எனினும் அண்மைக்கால வரலாற்று ஆய்வாளர்கள் தமிழர் உள்வரவு காலத்தால் முந்தியது என்பதை தொல்லியல் வரலாற்று ஆதாரங்களோடு எடுத்துக் கூறியிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலமாகவும் புவியியல் பண்புகளூடாகவும் தமிழர் வரவு காலத்தால் முந்தியது என்பதற்கு சான்றுகளை முன்வைத்துள்ளனர். குறிப்பாக இலங்கையில் தமிழர் வாழும் வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கும் தமிழ் பண்பாட்டுக்குமிடையிலான ஆழம் குறைந்த குறுகிய தூர கடற்பரப்பு இவ்விரு பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களின் ஒத்த சமூக, பொருளாதார பண்புகள், தென் இந்திய மன்னர்களின் இலங்கைக்கான படையெடுப்புக்களும் ஆட்சி செய்தலும் போன்ற பல்வேறு காரணிகள் காலத்தால் முந்திய இலங்கைத் தமிழரின் உள்வரவு பற்றிய விளக்கத்தினை அளிக்கின்றது. எவ்வாறெனினும் இலங்கைக்கு சிங்களவர்களும் இலங்கைத் தமிழரும் 2000 வருடங்களுக்கு முற்பட்டவர்கள் என்பதை வரலாற்று ஆதாரங்களுடாக அறியக் கிடக்கின்றது.

இலங்கையில் வரண்ட பிரதேசத்தில் நிலவிய சிங்கள இராசதானிகளை தென்னிந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் படையெடுப்புக்களின் மூலம் கைப்பற்றி அரசாட்சி செய்துள்ளனர். குறிப்பாக சேனை, குத்திகன், ஆகிய தமிழ் மன்னர்களின் ஆட்சி எல்லாளன் என்ற தமிழ் மன்னனின் 22 வருட ஆட்சி, வலகம்பாகு ஆட்சியில் ஏழு தமிழர்களின் படையெடுப்பு, பாண்டிய மன்னரான ஸ்ரீமாரஸ்ரீவல்லவன், சோழ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னரான இராசராசசோழன் போன்றவர்களின் படையெடுப்புக்களின் விளைவாக அவர்கள் தம் ஆட்சி நிலவிய போது ஏற்கனவே வாழ்ந்திருந்த தமிழரோடு தென்னிந்திய தமிழரும் இணைந்து கொண்டனர் என வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். காலப் போக்கில் ஆட்சி அதிகாரங்கள் மாற்றத்திற்குட்பட்ட போதிலும் தென்னிந்திய செல்வாக்கு பல வழிகளில் சிங்கள இராசதானியோடு இருந்து வந்துள்ளன. அக்காலங்களில் வடக்கு, கிழக்கு உட்பட வடமத்திய, வடமேற்கு கரையோரப் பிரதேசங்களான புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு வரையிலான கரையோரப் பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இப்பிரதேசங்களில் தற்போது கிறீஸ்தவரக்ளாகவும், சிங்களவர்களாவும் மாற்றம் பெற்றவர்களின் மூதாதையர் தமிழர்களாகவிருந்துள்ளனர் என்பதற்கு அன்றும் இன்றும் காணப்படக்கூடிய சமூக, பண்பாட்டு ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. அனுராதபுரம், பொலநறுவை ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சிங்கள அரசு தென்மேற்கு நோக்கிய நகர்வால் மேற்குறித்த பிரதேசங்களில் மலேரியா, கொலரா நோய்களின் உக்கிரத்தாக்கத்தினால் அப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த தமிழர்கள் வடக்கு கிழக்கு கரையோரம் சார்ந்து வாழ முற்பட்டனர். இதனால் இப்பிரதேசங்கள் தமிழரின் பராம்பரியப் பிரதேசமாகியது எனலாம். இஃது இவ்வாறிருக்க 13 ஆம் நூற்றாண்டில் தமிழர்களின் அரசாக நல்லூரைத் தலைமையகமாகக் கொண்ட தமிழரசு உதயமாகி போர்த்துக்கீசர் வருகையினைத் தொடர்ந்து விழ்ச்சியுற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சூழிலில் பெரும்பான்மையினத்தினருக்கும் பூர்வீகத் தமிழருக்குமிடையேயான உறவுகளில் காலத்துக்குக் காலம்ஒற்றுமையிலும் வேற்றுமைப்பண்புகள் கொண்டதாகவிருந்த நிலையானது சுதந்திரத்தின் பின்னரான தற்போதைய காலப்பகுதிகளிலும் அது தொடர்பவதாகவே உள்ளது என்பதை அண்மைய வரலாறுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக 1958, 1971, 1977, 1983 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதிகளில் தமிழரின் சமூக பொருளாதார, பண்பாட்டு நிலையிலான பாதிப்புக்கள் ஒருபறமிருக்க தமிழரின் குடிப்புள்ளியியல் கோலங்களில் பெரியளவிலான மாற்றங்களை ஏற்படுத்தி வருவதைக் காண முடிகின்றது. எனவே குடிப்புள்ளியியல் பார்வையில் இலங்கைத் தமிழரின் நிலை தெடர்பாக சுருக்கமாக விளங்க வைக்க இக்கட்டுரை முயல்கின்றது.

### 1871 - 1971 ஆம் ஆண்டுகளிடையில் இலங்கைத் தமிழர்கள்

இலங்கையில் மக்கள் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வரினும் அவர்கள் தொடர்பான தரவுகளை 1871 ஆம் ஆண்டிலிருந்தே பெற்றுக் கொள்ள முடிகின்றது. இவ்வாண்டிலிருந்து விஞ்ஞான பூர்வமான குடித்தொகை தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளும் நடைமுறை உருவானது. 1881 - 1901 ஆம் ஆண்டுக் குடிக்கணிப்புக்களில் இலங்கை, இந்தியத் தமிழர்கள் ஒன்றாகக் கணிப்பிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் 1911 ஆம் ஆண்டிலிருந்து வெவ்வேறாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே அட்டவணை I இல் இலங்கை இந்தியத் தமிழரின் பரம்பல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை I**

**இலங்கை இந்திய தமிழரின் பரம்பல் 1881 - 1971 (சதவீதம்)**

| ஆண்டு | இலங்கைத்தமிழர் | இந்தியத்தமிழர் |
|---|---|---|
| 1881 | 24.9 | |
| 1891 | 24.1 | |
| 1901 | 26.7 | |
| 1911 | 12.9 | 12.9 |
| 1921 | 11.5 | 13.4 |
| 1946 | 11.0 | 11.7 |
| 1953 | 10.9 | 12.0 |
| 1963 | 11.0 | 10.6 |
| 1971 | 11.2 | 9.3 |

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகளிலிருந்து கணிப்பீடு செய்யப்பட்டது.

அட்டவணை I இன் பிரகாரம் 1901 ஆம் ஆண்டு இல்ஙகைத் தமிழரின் பங்கானது 12.9 சதவீதமாகவிருந்த நிலையில் அதனைத் தொடர்ந்து படிப்படியாக ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்ட போதிலும் 1981 ஆம் ஆண்டு 12.7 சதவீதமாக உயர்வ பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. 1981 ஆம் ஆண்டினைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரின் வீதாசாரத்தில் படிப்படியாகக் குறைவடைந்து செல்வதற்கு பல்வேறு காரணிகள் செயற்பட்டு வருகின்றது. அட்டவணை II இல் 1981 - 2012 ஆம் ஆண்டுக் கணிப்புகளின் பிரகாரம் இன ரீதியிலான பரம்பல் பண்புகள் பின்வருமாறு அமைகின்றன.

**அட்டவணை II**

**இலங்கையின் இனப்பரம்பல் (1981 - 2012**

| இனம் | 1981 எண்ணிக்கை | வீதம் | 2012 எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 10979561 | 74.0 | 15173820 | 74.9 |
| இலங்கைத் தமிழர் | 1886872 | 12.7 | 2270924 | 11.2 |
| இந்தியத்தமிழர் | 818656 | 5.5 | 842323 | 4.2 |
| முஸ்லீம்கள் | 1046926 | 7.0 | 1869820 | 9.2 |
| ஏனையோர் | 114735 | 0.8 | 106836 | 0.5 |
| மொத்தம் | 14846750 | 100.0 | 20263727 | 100.0 |

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகள் (1981 - 2012)

அட்டவணை II இன் பிரகாரம் இலங்கையில் 1981 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டு முஸ்லீம்கள் மற்றும் சிங்களவர்களின்ப ங்கு அதிகரித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுள்ள நிலையில் இலங்கை, இந்திய தமிழர்களிடையே தேசிய ரீதியில் வீழ்ச்சியடைந்திருப்பதைக் காணலாம். அதாவது 1981 இல் 12.7 சதவீதமாகவிருந்த இலங்கைத் தமிழர் 2012 இல் 11.2 சதவீதமாகவும் 5.5 சதவீதமாகவிருந்த இந்தியத் தமிழர் 4.2 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. அட்டவணை III இல் 1981 - 2012 ஆம் ஆண்டுகளிடையே இன ரீதியிலான வளர்ச்சி வீதம் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை III**

**இனரீதியிலான வளர்ச்சி வீதம் (1981 - 2012)**

| இனங்கள் | வளர்ச்சி வீதம் |
|---|---|
| சிங்களவர் | 1.04 |
| இலங்கைத்தமிழர் | 0.6 |
| இந்தியத் தமிழர் | 0.09 |
| முஸ்லீம்கள் | 1.87 |
| ஏனையோர் | 0.2 |
| சராசரி வளர்ச்சி வீதம் | 1.2 |

*ஆதாரம் : 1981 - 2012 ஆம் ஆண்டுக் குடித்தொகையிலிருந்து கணிப்பிடப்பட்டுள்ளது.*

இந்திய இலங்கைத் தமிழரின் குடித்தொகை வளர்ச்சி வீதம் மிகவும் தாழ்ந்து சென்றுள்ள நிலையில் சிங்களவர்களின் வளர்ச்சி வீதமானது நிதானமாகவும் முஸ்லீம்களின் வளர்ச்சி விதமானது அபரிமிதமாகவும் இருப்பதனாலேயே இனப்பரம்பலில் இத்தகைய மாற்றம் நிகழக் காரணமாகவுள்ளது எனலாம். குறிப்பாக இலங்கைத் தமிழரின் சர்வதேச இடப்பெயர்வு யுத்தத்தினால் ஏற்பட்ட அசாதாரண இறப்புக்களின் அதிகரிப்பு, அளவான குடும்பத்தினை விரும்பியேற்றல், கருவளவாக்கச் செயற்பாடுள்ளவர்களின் சர்வதேச புலம்பெயர்வு, விவாகம் செய்யும் வயது பின்தள்ளிச் செல்லும் நிலை போன்ற பலகாரணிகள் பரம்பலில் வீழ்ச்சிக்கு காரணங்களாக அமைந்து விடுகின்றது.

## மாவட்ட ரீதியில் இலங்கைத் தமிழர்

இலங்கைத் தமிழர் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வாழ்ந்துவரினும் வடக்கு. கிழக்கு மாவட்டங்களிலேயே அதிகமாகவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை IV

**மாவட்ட ரீதியில் இலங்கைத் தமிழர் 1981 - 2012 (சதவீதத்தில்)**

| மாவட்டம் | 1981 | 2012 |
|---|---|---|
| கொழும்பு | 9.0 | 10.2 |
| கம்பகா | 2.6 | 3.5 |
| களுத்துறை | 0.5 | 1.0 |
| கண்டி | 2.8 | 3.2 |
| மாத்தளை | 1.1 | 1.1 |
| நுவரெலியா | 4.1 | 1.4 |
| காலி | 0.4 | 0.7 |
| மாத்தறை | 0.2 | 0.4 |
| அம்பாந்தோட்டை | 0.1 | 0.09 |
| யாழ்ப்பாணம் | 41.9 | 25.4 |
| மன்னார் | 2.9 | 3.5 |
| வவுனியா | 2.9 | 6.2 |
| முல்லைத்தீவு | 3.1 | 3.5 |
| கிளிநொச்சி | -- | 4.8 |
| மட்டக்களப்பு | 12.4 | 16.8 |
| அம்பாறை | 4.1 | 5.0 |
| திருகோணமலை | 4.7 | 5.1 |
| குருநாகல் | 0.8 | 0.8 |
| புத்தளம் | 1.7 | 2.1 |
| அனுராதபுரம் | 0.4 | 0.2 |
| பொலநறுவை | 0.3 | 0.3 |
| பதுளை | 2.0 | 0.9 |
| மொனராகலை | 0.3 | 0.4 |
| இரத்தினபுரி | 1.0 | 2.4 |
| கேகாலை | 0.8 | 0.9 |
| மொத்தம் | 100.0 | 100.0 |

ஆதாரம் : 1981 - 2012 ஆம் ஆண்டு குடிக்கணிப்பு அறிக்கையிலிருந்து கணிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த பரம்பல் கோலத்தினை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்குவது சிறப்புடைத்து.

| மாகாணம் / மாவட்டம் | 1981 | 2012 |
|---|---|---|
| வடமாகாணம் | 50.8 | 43.4 |
| கிழக்கு மாகாணம் | 21.2 | 26.9 |
| மேல் மாகாணம் | 12.1 | 14.7 |
| மலையக மாவட்டங்கள் | 11.2 | 9.9 |
| ஏனைய மாவட்டங்கள் | 4.2 | 5.0 |

இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை வடமாகாணத்திலேயே அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். 1981 இல் 50.8 சதவீதமாகவிருந்த நிலை மாறி 2012 இல் 43.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதே போலவே யாழ்ப்பாண மாவட்டமே அதிகூடிய இலங்கைத் தமிழரைக் கொண்டிருக்கின்றது. 1981 இல் 41.9 சதவீதமாகவிருந்து 2012 இல் 25.4 சதவீதமாக குறைவடைந்துள்ளது. எண்ணிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுவதாயின் 1981 இல் 792246 மக்கள் வாழ்ந்திருந்த நிலையில் 2012 இல் 577246 ஆக வீழ்ச்சி நிலை காணப்படுகின்றது. இருப்பினும் வன்னி மாவட்டங்களில் 1981 னை விட 2012 இல் சார்பு ரீதியாக தமிழரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரை 1981 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது 5.0 சதவீதமாக இலங்கைத் தமிழர் அதிகரித்துச் சென்றுள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நிகழ்ந்த தமிழர் குடித்தொகையின் வீழ்ச்சியே ஏனைய மாவட்டங்களின் உயர்வுக்குக் காரணமாகவுள்ளது என்பதைக் குறிப்பிடலாம்.

இலங்கைத் தமிழரின் சர்வதேச இடப்பெயர்வில் யாழ்ப்பாண மாவட்டமே முதன்மை பெறுகின்றது. உள்நாட்டு இடப்பெயர்விலும் இம்மாவட்டமே பெரும்பங்கு கொண்டுள்ளது.

**அட்டவணை V**

**இலங்கையில் மாவட்டங்களுக்குள்ளான இலங்கைத் தமிழரின் பரம்பல் கோலங்கள்**

| மாவட்டம் | இலங்கைத் தமிழர் (சதவீதம்) | |
|---|---|---|
| | 1981 | 2012 |
| கொழும்பு | 10.0 | 10.0 |
| கம்பகா | 3.5 | 3.5 |
| களுத்துறை | 1.2 | 2.0 |
| கண்டி | 5.0 | 5.2 |
| மாத்தளை | 5.8 | 5.1 |
| நுவரெலியா | 12.7 | 4.5 |
| காலி | 0.9 | 1.4 |
| மாத்தறை | 0.7 | 1.1 |
| அம்பாந்தோட்டை | 0.6 | 0.4 |
| யாழ்ப்பாணம் | 96.9 | 98.9 |
| மன்னார் | 51.3 | 81.3 |
| வவுனியா | 56.8 | 82.4 |
| முல்லைத்தீவு | 75.4 | 86.0 |
| கிளிநொச்சி | 81.2 | 97.0 |
| மட்டக்களப்பு | 70.8 | 72.6 |
| அம்பாறை | 20.0 | 17.4 |
| திருகோணமலை | 34.3 | 30.6 |
| குருநாகல் | 1.2 | 1.2 |
| புத்தளம் | 6.6 | 6.3 |
| அனுராதபுரம் | 1.4 | 0.6 |
| பொலநறுவை | 2.0 | 1.8 |
| பதுளை | 5.9 | 2.5 |
| மொனராகலை | 2.0 | 2.2 |
| இரத்தினபுரி | 2.4 | 5.1 |
| கேகாலை | 2.2 | 2.4 |
| இலங்கை | 12.7 | 11.2 |

ஆதாரம் : 1981 - 2012 ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பு அறிக்கைகளிலிருந்து கணிக்கப்பட்டது

அட்டவணை V இன் பிரகாரம் இலங்கையில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து வரும் மாவட்டங்களில் இலங்கைத் தமிழரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பலில் பெருமளவிற்கு மாற்றங்களைக் காண முடியவில்லையாயினும் இலங்கைத் தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் இலங்கைத் தமிழரின் பரம்பலானது அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளினால் ஒட்டுமொத்தமாக முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டமை யுத்தத்தின் விளைவாக சிங்கள மக்களின் வெளியகல்வு ஆகியன இனரீதியிலான பரம்பலில் இலங்கைத் தமிழர் உயர்வாகக் காணப்படுகின்றனர். ஆனால் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் இலங்கைத் தமிழரின் பரம்பல் குறைவடைந்து சென்றமைக்கு சிங்கள மக்களின் குடியேற்றங்கள் இஸ்லாமியரின் வளர்ச்சி வீத அதிகரிப்பு, இலங்கைத் தமிழரின் அசாதாரண இறப்புக்களின் அதிகரிப்பு மற்றும் உள்நாட்டு சர்வதேச இடப்பெயர்வு போன்ற பல காரணிகள் தனித்தும் இணைந்தும் செயற்பட்டுள்ளன எனலாம்.

மலையக மாவட்டங்களில் இரத்தினபுரி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இலங்கைத் தமிழரின் பரம்பலில் சிறிதளவிலான ஏற்ற இறக்கத்தினைக் கொண்டிருக்கின்றது எனினும் இந்தியத் தமிழர் அறுதிப் பெருமபான்மையானவராக வாழ்ந்து வரும் நுவரெலியா மாவட்டத்தில் இலங்கைத் தமிழரின் பங்கானது 1981 இல் 12.7 சதவீதமாகவிருந்து 2012 இல் 4.5 சதவீதமாக வீழ்ச்சியினைக் காட்டிய்ுளளது. 1981 ஆம் ஆண்டு இம்மாவட்டத்தில் வாழ்ந்து வந்த இந்தியத்தமிழர் தம்மை இலங்கைத் தமிழராக பதிவு செய்திருந்த நிலையில் 2012 க் கணிப்பில் இன அடையாளத்தைப் பேணும் வகையில் அரசியல்வாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க தம்மை இந்தியத் தமிழராக பதிவு செய்துள்ளமையினாலேயே இலங்கைத் தமிழரின் பங்கு குறைவடையக் காரணமாக அமைந்துள்ளது. இவை தவிர தொழில் நிமித்தம் மலையக மாவட்டங்களுக்குச் சென்று வாழ்ந்த இலங்கைத் தமிழர் உள்நாட்டு மற்றும் சர்வதேச இடப்பெயர்வுக்குட்பட்டமையாலும் மலையக மாவட்டங்களில் இலங்கைத் தமிழர் வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்துள்ளமையும் மனங் கொள்ளத்தக்கது.

### வடக்கு கிழக்கு மாகாணத்தில் இலங்கைத் தமிழரின் பரம்பல்

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கைத் தமிழரின் பூர்வீக மாவட்டங் களாகும். வரலாற்றுக் காலம் தொட்டு இம்மாகாணங்களில் இலங்கைத் தமிழரே பெரும்பான்மையினராக வாழந்து வந்துள்ளனர். 1921 ஆம் ஆண்டு வரை இந்நிலையே தொடர்ந்திருந்தது. 1981 ஆம் ஆண்டுக்கணிப்பீட்டின் படி இலங்கையில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழரில் 72.0 சதவீதத்தினர் இம்மாகாணங்களிலேயே வாழ்ந்துள்ளனர். நாட்டில் நிலவி வந்த அசாதாரண சூழ்நிலைகளின் விளைவாக 2012 ஆம் ஆண்டு குடிக்கணிப்பில் 70.3 சதவீதமாக குறைவடைந்து சென்றுள்ளது. 2012 ஆம் ஆண்டில் கொழும்பு கம்பகா, களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்மாகாணத்தில் 14.7 சதவீதத்தினராகவிருக்க மலையக மாவட்டங்களில் 9.9 சதவீதத்தினராகவிருந்துள்ளனர். மலையக மாவட்டங்களில் இலங்கைத் தமிழரின் பங்கு குறைவடைந்து செல்வதற்கு தொழில் வாய்ப்பில் வடக்கு கிழக்குத் தமிழர்களை இணைத்துக் கொள்வதில் காட்டப்படுகின்ற மறைமுகமான பாரபட்சமான அணுகுமுறையும் காரணிகளில் ஒன்றாகக் கொள்ளலாம்.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பாரம்பரியப் பிரதேசமாகும். 1920 களிலிருந்து இதனைச் சிதைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து குடியானவர் குடியேற்றத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் இன விகிதாசாரத்திற்கப்பால் பெரும்பான்மையினத்தவர்களை குடியேற்றப்பட்டதன் விளைவாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர் பாரம்பரியம் சிதைவுறலாயின இது தொடர்ந்த வண்ணமுள்ளன. இந்நிலையில் வடமாகாணத்தில் இனப் பரம்பல் கோலங்கள் தொடர்பான விளக்கம் அட்டவணை VI இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை VI**

**வடமாகாண இனப்பரம்பல் - 1946 - 2012 (சதவீதம்)**

| இனங்கள் | 1946 | 1981 | 2012 |
|---|---|---|---|
| சிங்களவர் | 2.0 | 3.2 | 2.2 |
| தமிழர் | 93.8 | 92.0 | 94.5 |
| முஸ்லீம்கள் | 3.8 | 4.6 | 3.3 |
| ஏனையோர் | 0.4 | 0.2 | 0.0 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 |

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகளிலிருந்து கணிப்பிடப்பட்டது.

வடமாகாணத்தில் இனப்பரம்பல் கோலங்களில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்படவில்லையாயினும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினால் சிறியளவில் அதிகரித்த நிலை காணப்படுகின்றது. 1980 களைத் தொடர்ந்து இம் மாகாணத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளினால் இவர்களின் வெளியகல்வு ஏற்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டின் பின்னர் சற்று உயர்வினைக் காட்டி நிற்கின்றது. வடமாகாணத்தின் எல்லைப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக பெரும்பான்மை இனத்தவர்களைத் திட்டமிட்டு குடியேற்றும் செயற்பாடுகள் கடந்த இருதசாப்தகாலமாகத் தொடர்ந்த வண்ணமுள்ளன. குறிப்பாக மணலாறு பிரதேசத்தில் ஒரு பிரதேச செயலர் பிரிவொன்றினை முல்லைத் தீவு அரச நிர்வாகத்திற்கு புறம்பாக அனுராதபுர மாவட்ட நிர்வாகத்துக்குட்படுத்தி திட்டமிட்ட ரீதியில் சிங்கள மக்களைக் குடியமர்த்தியதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக 2012 ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பில் 6937 சிங்கள மக்கள் வாழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள இப்பிரதேச செயலகப் பிரிவில் மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையின் 9.6 சதவீதத்தினராக சிங்களவர்கள் காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் 1981 - 2012 ஆம் ஆண்டுகளிடையில் இனரீதியிலான குடித்தொகைப் பண்புகள் பின்வருமாறு அமைகின்றன.

**அட்டவணை VII**

**கிழக்கு மாகாணத்தில் இனரீதியிலான பரம்பல் 1981 - 2012**

| இனங்கள் | 1981 | வீதம் (%) | 2012 | வீதம் (%) |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 243358 | 24.9 | 359136 | 23.2 |
| இலங்கைத்தமிழர் | *411451 | 42.1 | 617295 | 39.8 |
| முஸ்லீம்கள் | 31520 | 32.3 | 569182 | 36.7 |
| ஏனையோர் | 6445 | 0.7 | 5768 | 0.3 |
| மொத்தம் | 976475 | 100.0 | 1551381 | 100.0 |

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டது. (*இலங்கை, இந்தியதமிழர் உள்ளடக்கப்பட்டுள்ளது)

கிழக்கு மாகாணம் மூவின மக்களும் இணைந்து வாழ்ந்து வரும் மாகாணமாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 1921 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டம் இணைந்திருந்த காலத்தில் தமிழர் 53.3 சதவீதத்தினராகவும் முஸ்லீம்கள் 39.8 சதவீதத்தினராகவும் சிங்களவர்கள் 4.6 சதவீதத்தினராகவும் காணப்பட்டிருந்தனர். 1961 ஆம் ஆண்டு அம்பாறை என்ற தனி மாவட்டம் உருவாக்கப்பட்ட நிலையில் 1963 ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி தமிழர் 23.8 சதவீதமாகவும் முஸ்லீம்கள் 46.4 சதவீதமாகவும் சிங்களவர் 29.3 சதவீதமாகவும் காணப்பட்டிருந்தனர். இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் 72.2 சதவீதமாகவும் முஸ்லீம்கள் 23.4 சதவீதமாகவும் காணப்பட்டிருந்தது. பொதுவாக கிழக்கு மாகாணத்தில் சுதந்திரத்தினை அடுத்து திட்டமிட்ட பெரும்பான்மையினத்தவர்களை குடியமர்த்தியதன் விளைவாக குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் 1963 இனைத் தொடர்ந்து இனரீதியிலான மாற்றங்கள் விரைவாக ஏற்பட்டுள்ளதை அட்டவணை VIII குறிப்பிடுகின்றது.

**அட்டவணை VIII**

**அம்பாறை மாவட்டத்தின் இன ரீதியிலான பரம்பல் 1963 - 2012 (சதவீதம்)**

| கணிப்பு ஆண்டு | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம்கள் |
|---|---|---|---|
| 1963 | 29.3 | 23.8 | 46.4 |
| 1971 | 30.4 | 23.4 | 45.9 |
| 1981 | 37.2 | 20.5 | 41.6 |
| 2012 | 38.7 | 17.4 | 43.6 |

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகளிலிருந்து கணிப்பீடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 ஆம் ஆண்டு குடிக்கணிப்பீட்டின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகை 648057 ஆகும். இம்மாவட்டம் தனிமாவட்டமாக உதயமாகிய போது மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 46.4 சதவீதத்தினராக முஸ்லீம்களும் சிங்களவர், தமிழர் முறையே 29.3, 23.8 சதவீதத்தினராகவிருந்த நிலை மாறி 2012 ஆம் ஆண்டு சிங்களவர்கள் 38.7 சதவீதத்தினராக அதிகரித்திருக்க தமிழர் 17.4 சதவீத்தினராக வீழ்ச்சி காணும் நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லீம்கள் இம்மாவட்டத்தில் தொடர்ந்தும் பெரும்பான்மையினராகவிருக்கின்ற போதிலும் படிப்படியாக வீதாசாரத்தில் வீழ்ச்சி நிலை தொடர்கின்றது. கல்லோயா அபிவிருத்தித் திட்டம் பிரதேச இணைப்பு, காணி சுவீகரிப்பு. புனிதப் பிரதேச பிரகடனம், புதைபொருளாராய்ச்சி, அத்துமீறிய குடியேற்றத்திட்டங்கள், மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற பல பெரும்பான்மை இனத்தவர்களுக்கு சாதகமாக மேற்கொள்ளப்பட்டமையாலேயே முஸ்லீம் மக்களினதும், தமிழரினதும் வீதாசாரம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து செல்வதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதற்கப்பால் தமிழரின் பங்கு குறைவடைந்து செல்வதற்கு நாட்டில் நிலவிய யுத்த நிலை காரணமாக மக்கள் இடப்பெயர்வு, அதிகரித்த இறப்புக்கள், பிறப்பு வீதம் குறைவடைந்து சென்றுள்ளமை போன்றனவும் காரணிகளில் சிலவாகும்.

திருகோணமலை மாவட்டம் சைவமும் தமிழும் ஒருங்கே சிறப்புற்றிருந்த மாவட்டமாகும். தமிழரின் இருப்பு தொடர்பாக பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள மாவட்டமுமாகும். 2012 ஆம் ஆண்டு இனரீதியிலான குடித்தொகையைக் கருத்திற் கொள்ளின் சிங்களவர் 101991 பேராகவும் தமிழர் 122080 பேராகவும் காணப்படுகின்றனர். 1981 ஆம் ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் முறையே 86341, 93510, 74403 பேராகவிருந்துள்ளனர். இந்நிலையில் 1981 - 2012 காலப்பகுதியில் முஸ்லீம்களைப் பொறுத்தவரை அரைப்பங்குக்குமதிகமான பெருக்கத்தினைக் கொண்டிருக்க சிங்களவர், தமிழர்களின் வளர்ச்சி நிலை குறைவாகவிருப்பதைக் காண முடிகின்றது. இருப்பினும் சிங்களவர்களைப் பொறுத்தவரை 1871 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியான வளர்ச்சி நிலையைக் கொண்டிருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. (அட்டவணை IX)

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவரின் பங்கு 1871 - 1921 ஆம் ஆண்டுகளிடையில் ஒத்த பங்கினராகவிருந்த நிலை மாறி 1921 ஆம் ஆண்டின் பின்னர் படிப்படியாக அதிகரித்து தற்போது மாவட்டத்தின் குடித்தொகையில் மூன்றிலொரு பங்கினராக அதிகரித்துள்ளனர். 2012 ஆம் ஆண்டு சிறியளவில் சரிவினைக் கண்டிருந்த பொழுதும் அண்மைக்காலங்களில் இவர்களின் உள்வரவு அதிகரித்துக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது. 1946 - 1981 ஆண்டுகளிடையில் விரைவான அதிகரிப்புக்கு திருகோணமலை துறைமுகவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தித்திட்டங்கள் பாரிய சிறியளவிலான குடியேற்றத்திட்டங்கள், புனிதப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச திட்டம், பன்முகப்படுத்தல் என்ற போர்வையில் தலைமைச் செயலகங்களை நிறுவுதல், இனக்கலவரங்களின் விளைவாக தமிழர் குடியிருப்புக்களைக் கலைத்தல் சுற்றுலா மையங்களை அமைத்தல், தமிழர் மீது இராணுவ அடக்குமுறை போன்ற பல காரணிகள் சிங்களவர்களின் அதிகரித்த குடிப்பரம்பலுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

**அட்டவணை IX**

**திருகோணமலை மாவட்டத்தில் இனப்பரம்பல் 1871 - 2012 (சதவீதம்)**

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம்கள் |
|---|---|---|---|
| 1871 | 4.0 | 64.9 | 25.9 |
| 1891 | 4.3 | 66.5 | 24.9 |
| 1901 | 4.2 | 60.0 | 31.9 |
| 1911 | 3.8 | 57.9 | 32.7 |
| 1921 | 4.5 | 54.5 | 37.7 |
| 1946 | 20.7 | 44.5 | 30.6 |
| 1953 | 18.2 | 44.7 | 34.1 |
| 1963 | 28.9 | 39.1 | 30.8 |
| 1971 | 28.8 | 38.2 | 32.1 |
| 1981 | 33.6 | 36.4 | 29.0 |
| 2012 | 26.9 | 32.3 | 40.4 |

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

இருப்பினும் 1980 களின் பின்னர் யுத்தத்தின் விளைவாக நகரப்புறம் சார்ந்து வாழ்ந்து வந்த சிங்கள மக்களின் வெளியிடப் பெயர்வு காரணமாக 2012 இல் சிங்கள மக்களின் பரம்பலில் சிறிதளவில் வீழ்ச்சி நிலை காணப்பட்ட போதிலும் அண்மைக் காலங்களில் மீண்டும் இவர்களது உள்வரவு அபிவிருத்தியோடு இணைந்து ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தின் காரணமாக மிகவும் பராதூரமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டமாக திருகோணமலை விளங்குகின்றது. கிராமங்களிலிருந்து மக்கள் விரட்டியடிப்பு, வன்முறைகளால் அதிகரித்த உயிரிழப்புக்கள், சர்வதேச, குறிப்பாக இந்தியாவுக்கான இடப்பெயர்வு, உள்நாட்டு இடப்பெயர்வு, போன்ற பல செயற்பாடுகளினால் தமிழரின் இனப்பரம்பல் கோலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகவுள்ளது.

முஸ்லீம்களைப் பொறுத்தவரை 1963 - 2012 ஆம் ஆண்டுகளிடையில் அம்பாறை மாவட்டத்திலேயே பெரும்பான்மையினமாக வாழ்ந்து வந்துள்ளனர். 1981 ஆம் ஆண்டு வரை திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாவது பெரிய இனமாகவிருந்த நிலை மாறி 2012 ஆம் ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம் மாவட்டத்தின் பெரும்பான்மையினமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதிகரித்த வளர்ச்சி வீதம், அதிகரித்த உள்வரவின் காரணமாக இந்நிலையை அவர்களால் எட்ட முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் தமிழரின் இருப்புக்கு சவாலாக அமைந்துவிட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலப்பரப்பின் எல்லைகளில் திட்டமிட்ட அத்துமீறிய குடியேற்றங்கள் அரசின் ஆசியுடன் நடைபெற்று வருகின்ற நிலையில், எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழரின் பங்கு குறைவடைந்து செல்லும் நிலையால் தமிழர் பராம்பரியத்துக்கு சவாலாக அமைந்து விட்டது எனக் கொள்ள முடியும். இதே போலவே வடமாகாணத்திலும் தமிழர் இருப்பினைச் சிதைத்து இனவிகிதாசாரத்தில் மாற்றத்தினைக் கொண்டுவரும் முகமாக அரசு பல்வேறு செயற்றிட்டங்களை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செயற்படுத்தி வருகின்றது.

## சர்வதேச இடப்பெயர்வில் இலங்கைத் தமிழர்

இலங்கைத் தமிழர் நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்கு வர்த்தகம், தொழில், கல்வி போன்றவை தொடர்பாக நீண்ட காலமாக இடப்பெயர்வினை மேற்கொண்டு வந்துள்ள போதிலும் அவ்விடப் பெயர்வாளரின் எண்ணிக்கை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவிருந்துள்ளது குறிப்பாக வரலாற்றுக் காலங்களில் இலங்கையிலிருந்து தென், தென் கிழக்காசிய நாடுகளுக்கு சென்று வந்தது தொடர்பாக வரலாற்று மற்றும் இலக்கிய நூல்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் பர்மா, மலாயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான இடப்பெயர்வு மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக நூல்கள் மற்றும் அவ்வவ் நாடுகளின் குடிக்கணிப்பு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்தினையடுத்து சிங்களம் மட்டும் சட்டத்தின் விளைவாக சிங்கள மொழியில் கடமையாற்ற முடியாத நிர்வாகிகள். ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் முகமாக மூளைசாலிகள் வெளி இடப்பெயர்வு என்பன 1950 களிலும் 1960 களிலும் நிகழ்ந்துள்ளது. இவர்களில் ஒரு தொகுதியினர் மீளவும் நாட்டிற்கு வருகை தந்துள்ள போதிலும், மறு தொகுதியினர் பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு சென்று அங்கு நிரந்தரப் பிரசைகளாகிவிட்டனர்.

1970 களில் முனைவிட்ட ஆயுதப் பேராட்டத்தின் விளைவாகவும் 1983 இல் நிகழ்ந்த இனக்கலவரம், ஆயுதப் பேராட்டம் விரிவுபடுத்தப்பட்டமை, உள்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ள உள்ளக மற்றும் உள்நாட்டு இடப்பெயர்வுகளின் விளைவாக உயிர் உத்தரவாதத்தைக் கருதி சர்வதேச இடப்பெயர்வில் இலங்கைத் தமிழர் அக்கறை கொள்ளலாயினர். குறிப்பாக 18 - 40 வயதிடை வெளியிலுள்ளவர்களின் சர்வதேச இடப்பெயர்வானது அதிகரித்த வண்ணமிருந்துள்ளது எனலாம். 1980 களிலிருந்து இன்றுவரை சர்வதேச இடப்பெயர்வின் பாங்கினை மூன்று வகைகளாகப் பிரித்து நோக்க முடியும்.

அ) சட்ட ரீதியாகவும் சட்டத்துக்குப் புறம்பாகவும் சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள். இவர்கள் பொதுவாக தனிப்பட்டவர்களாகவே சென்றுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) அந்நாடுகளில் அகதி அந்தஸ்து பெற்றவர்கள் விவாக நோக்கம் கருதி வாழ்க்கைத் துணையினை அழைத்து வருகின்றமை. அல்லது தமது சொந்தக் கிராமத்தில் பிள்ளைகளுக்கு மணமக்களைத் தெரிந்து அழைத்துச் செல்வது
இ) தமது இரத்த உறவுகளை அதாவது பெற்றோர் சகோதரர்களை அழைக்கும் நிலை.

இத்தகைய இடப்பெயர்வின் பாங்கானது நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்களில் கணிசமானவர்களை இழக்க வேண்டிய நிலை ஒருபுறமிருக்க, அவர்களது இழப்பானது அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதை தற்போது உணரக் கூடியதாகவுள்ளது.

இலங்கைத் தமிழரின் சர்வதேச இடப்பெயர்வாளர் தொடர்பாக உத்தியோகபூர்வமற்ற புள்ளிவிபரங்களின் பிரகாரம் பின்வருமாறு அமைகின்றது. ஐக்கிய இராச்சியம் (85000) ஜேர்மனி (45000) பிரான்ஸ் (50000) சுவிற்சலாந்து (30000) நோர்வே (15000) பெல்ஜியம், நெதர்லாந்து (7000) இத்தாலி (5000) சுவீடன் (4000) அவுஸ்திரேலியா (25000) நியூசிலாந்து (7500) ஐக்கிய அமெரிக்கா (10000) கனடா (300000) தமிழர்கள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினைத் தொடர்ந்து அந்நாடுகளில் உள்வரவினை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றது. மேற்குறித்த தகவல்களைக் கொண்டு நோக்கும் போது ஏறத்தாழ 600000 பேர் மேற்குலக நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் தவிர 2014 ஆம் ஆண்டு தமிழ் நாட்டு அரசின் தகவலின் பிரகாரம் அகதி முகாமிலும் தனிப்பட்ட ரீதியிலும் 125000 மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏறத்தாழ 700000 மக்கள் யுத்த காலத்தில் சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர் எனக் கொள்ள முடியும். இந்நிலையில் இடப்பெயர்வாளர்களும் அவர்கள் தம் வாரிசுகளுமாக தற்போது ஏறத்தாழ பத்து இலட்சம் (ஒருமில்லியன்) மக்களை நாம் இழந்துள்ளோம். இது நாட்டின் மொத்தக் குடித்தொகையில் இலங்கைத் தமிழரின் பரம்பலை வெகுவாகப் பாதித்துள்ளது என்பது வெள்ளிடைமலை. 2012 ஆம் ஆண்டு குடிக்கணிப்பின் பிரகாரம் இலங்கையில் 2270924 இலங்கைத் தமிழர் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்நாட்டில் வாழ்ந்து வரும் மக்களில் ஏறத்தாழ அரைப்பங்கினர் சர்வதேச நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொள்ளாதிருப்பின் 3.2 மில்லியன் மக்களாகவிருந்திருப்பர். தற்போது இரண்டாவது பெரிய இனமாக இலங்கைத் தமிழர் எதிர்காலத்தில் முஸ்லீம் மக்களுக்கு வழிவிட்டு மூன்றாவது இனமாக மாறும் சூழ்நிலை வெகுதூரத்திலில்லை என்பதை இலங்கைத் தமிழர் உணர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச இடப்பெயர்வினால் நிகழக் கூடிய சமூக பொருளாதார பண்பாட்டு மாற்றங்கள்**

பொதுவாக சர்வதேச இடப்பெயர்வில் பெரும்பங்கினர் 15 - 40 வயதிற்கிடைப்பட்டவர்களாக விருந்துள்ளனர். இதனால் ஆரம்ப பிரதேசத்தில் வாழும் இளம் பெண்களில் கணிசமானோர் தமக்கான குடும்பப் பங்காளியைத் தேடிக் கொள்வதில் பல்வேறு இடர்பாடுகளை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக தற்போதைய நிலையில் பெருமளவிலான ஆரம்ப இடைத்தரக் கல்வியினைப் பயின்ற பெண்கள், வெளிநாட்டு திருமணத்தையே பெரிதும் விரும்பும் நிலை காணப்படுகின்றதை விவாகமுகவர் நிலையங்களில் பதிவேடுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இருப்பினும் தற்போது இத்தகைய விவாகப் பங்காளிகளை இணைத்துக் கொள்வதில் சர்வதேச இடப்பெயர்வாளர்கள் தயக்கம் காட்டி வருவதையும் காண முடிகின்றது.

இலங்கைத் தமிழரின் சர்வதேச இடப்பெயர்வினால் அவர்கள் ஏற்கனவே தாயகத்தில் வாழ்ந்து வந்த குடியிருப்புக்கள், பொருளாதார தேட்டங்கள் அழிவுற்ற நிலையில் அல்லது அரசினால் சுவீகரிக்கும் நிலை அல்லது உயர் பாதுகாப்பு வலயம் எனக் கொள்ளும் நிலையால் மக்கள் குடியிருக்க அனுமதிக்காத நிலை காணப்படுகின்றது. மேலும் இளையோரின் இடப்பெயர்வின் காரணமாக முதியோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்லும் நிலையினால் அவர்களைப் பராமரிப்பதில் உள்ள சிக்கல்களினால் முதியோர் இல்லங்களை நாடும் நிலை அதிகரித்து வருகின்றது.

இலங்கைத் தமிழரின் சர்வதேச இடப்பெயர்வில் 1970 களுக்கு முன்னரான இடப்பெயர்வானது நாட்டில் இனப்பரம்பல் கோலங்களில் பெருமளவில் மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கவில்லை. 1980 களுக்கு பின்னரான சர்வதேச இடப்பெயர்வானது இனப்பரம்பல் கோலங்களில் பாதிக்கக் கூடிய மாற்றத்தினை ஏற்படுத்தி வருவதோடு மிக விரைவில் இரண்டாவது பெரிய இனம் என்ற நிலையிலிருந்து மூன்றாவது இனமாக மாறும் நிலை ஏற்பட வழிவகுத்துள்ளது. மேலும்சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்ட இலங்கைத் தமிழரில் பெரும்பாலானோர் பொருளாதார சமூக ரீதியில் மத்தியதர வர்க்கத்தினாராகவுள்ளதுடன் நிலவுடமையாளர்களாகவும் இருந்துள்ளனர். உற்பத்தி நிலங்கள் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாது தரிசு நிலங்களாகி வருகின்றன. தீவுப் பகுதியினை உதாரணமாகக் கொள்ள முடியும். அத்துடன் அவர்கள் தம் குடியிருப்புக்கள் அழிவுற்றோ அல்லது அழிக்கப்பட்டோ வருவதைக் காணலாம்.

சர்வதேச இடப்பெயர்வின் விளைவுகளில் ஒன்று இலங்கைத் தமிழர் மத்தியில் பால் விகித வேறுபாட்டினை அதிகரிக்கச்செய்துள்ளது. தற்போதைய நிலையில் 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு 88 ஆண்களே காணப்படுகின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது. யுத்தத்தின் விளைவாகவும் சர்வதேச இடப்பெயர்வினாலும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்துள்ளன. மேலும் தமிழரின் சர்வதேச இடப்பெயர்வானது அரசியலில் பேரம் பேசும் சக்தியை இழக்கும் நிலையை உருவாக்கியுள்ளது. உதாரணமாக இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்து வருகின்றனர். 2015 ஆம் ஆண்டில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களையே தெரிவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இவை போன்ற பல அசாதாரண நிலைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இஃது இவ்வாறிருக்க சர்வதேச புலம்பெயர்வாளர்கள் உயிர் அச்சுறுத்தல், பயம், மற்றும் பொருளாதார தேட்டம் கருதிச் சென்றவர்கள் இன்றைய நிலையில் சென்றவரக்ளில் கணிசமான முதல் பரம்பரையினர் முதியோர்களாகியோ அன்றில் இற்பபினைத் தழுவிக் கொண்டவர்களாகவுள்ளனர். முதியோர்களாக இருப்பவர்கள் பிள்ளைகளின் வழிகாட்டல்களுக்குட்பட்டவர்களாகி விட்டனர். தற்போது இரண்டாவது பரம்பரையினர் தமது பூர்வீக மண்ணை ஓரளவிற்கு நேசிப்பவர்களாகவுள்ளனர். ஆனால் எதிர்காலத்தில் மூன்றாவது பரம்பரையினராக வரவுள்ளவர்கள் தாம் சென்றடைந்த பிரதேசத்திற்கேயுரிய பொருளாதார சமூக, பண்பாட்டுக் கோலத்திற்குள்ளாக்கப்படக் கூடியவர்கள். எனவே எதிர்காலத்தில் தமிழ் தெரியாத தமிழர்களாக வாழும் நிலை ஏற்படுவது தவிர்க்க முடியதது மட்டுமல்லாது பூர்வீக மண்ணுக்கு அன்னியர்களாக மாறும் நிலை ஏற்படுவதில் ஆச்சரியமில்லை. இதற்கு உலகில் பல உதாரணங்களை எடுத்துக் கூறலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியின் வரலாற்றுத் தொன்மையை அடையாளப்படுத்தும் "மட்டுவில் ஆயத்தடி"




பேராசிரியர்.ப.புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


வடஇலங்கை வரலாறு பற்றிய நீண்டகால ஆய்வில் அதிகம் கவனத்தில் கொள்ளப்படதாத பிராந்தியங்களில் ஒன்றாக தென்மராட்சி இருந்துவந்துள்ளது. ஆயினும் 1980 களின் பின்னர் இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியில் ஆய்வுகள் இப்பிரதேச வரலாற்றுக்குப் புதுவெளிச்சமூட்டுவதாக உள்ளன. இப்பிரதேசத்தின் இயற்கை அமைப்பு, இலகுவாக நீரைப்பெறக்கூடிய கடற்பரப்புக்கள், அதிக தொழில்நுட்பம் இன்றி குடியிருப்புக்களை அமைப்பதற்குரிய சிறிய பற்றைக் காடுகள், பிறநாடுகளுடனான கடல்வழித் தொடர்பு களுக்கு வாய்ப்பான இயற்கைத் துறைமுகங்கள், இலகுவாக கடல் உணவைப் பெறக்கூடி பரவைக்கடல்கள் என்பன இற்றைகது 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பிராந்தியத்தில் மக்கள் குடியிருப்புக்கள் உருவாகியிருக்கச் சாதகமாக அமைந்துள்ளன. இதை 1980களில் கலாநிதி பொ.இரகுபதியும், 1994 களின் பின்னர் இக்கட்டுரை ஆசிரியரும் வெற்றிலைக்கேணி, இயற்றாலை, வரணியில் உள்ள சோழன்மாசேரி, குடத்தனை, கச்சாய் ,உசன் போன்ற இடங்களில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த கிராமக் குடியிருப்புக்களுக்குரிய தொல்பொருள் சான்றுகள் உறுதிசெய்கின்றன. இக்குடியிருப்புக்கள் சமகாலத்தில் கந்தரோடை, சாட்டி, பூநகரி மற்றும் தமிழகத்தின் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன குடியிருப்புக்களை ஒத்திருப்பதை தொல்பொருட் சான்றுகளுக்கிடையிலான ஒற்றுமைகள் உறுதி செய்கின்றன. அத்துடன் தென்மராசசியில் உள்ள இடப்பெயர்கள் பல பழந்தமிழ் இலக்கியங்களில் வரும் தமிழக இடப் பெயர்களை ஒத்திருப்பது தென்மராட்சியில் பழமையான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்புக்கள் இருந்ததை மேலும் உறுதிசெய்கின்றன. அத்தகைய இடப்பெயர்களில் ஒன்றே "ஆயத்தடி" என்ற இடப்பெயராகும்.

சாவகச்சேரிநகரில் இருந்து மேற்கே ஒரு மைல் தொலைவில் ஏறத்தாழ பதினொராயிரம் மக்களைக் கொண்ட மட்டுவில் கிராம சேவகர் பிரிவுகளுள் வடக்கு மட்டுவிலில் அமைந்துள்ள ஒரு இடமே இன்றும் "ஆயத்தடி" என அழைக்கப்பட்டுவருகிறது. ஆயம் என்ற முன்னொட்டு இடப்பெயருக்கு சங்ககாலம் தொட்டு நீண்டவரலாறு இருப்பினும், சமகாலத்தில் இச்சொல்லின் பயன்பாடு பேச்சுவழக்கில் அருகி வருகின்றது. ஆயினும் மட்டுவில் கிராமத்தில் இன்றும் பேச்சுவழக்கில் ஒரு சிறுகுறிச்சியின் இடப்பெயராகப் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இப்பெயரை மட்டுவில் கிராமத்தின் தொன்மைக்கும், பெருமைக்கும் அடையாளமாக எடுத்துக்காட்டும் மரபு அக்கிராம மக்களிடையே இருந்துவருவதைக் காணமுடிகிறது. வரலாற்றாய்வில் இடப்பெயர்களை ஒரு ஆதாரமாக காட்டும் அறிஞர்கள் அதன் பின்னொட்டுச் சொல் தமிழில அடியென முடிவதை தொன்மையான இடப்பெயருக்குரிய ஆதாரமாகக் கொள்வர். இப்பின்னொட்டுச் சொல் இலங்கையிலும், தமிழகத்திலும் மிகத்தொன்மையான இடப்பெயர்களைக் குறித்ததென்பதற்கு இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 2200 ஆண்டுகளுக்கு முற்பட்டகாலக் கல்வெட்டுக்களிலும், சங்க இலக்கியத்திலும் வரும் அடியென முடியும் இடப்பெயர்கள் சான்றாகும். ஆனால் பண்டையகாலத்தில் அடியெனமுடியும் இடப்பெயர்கள் பெரும்பாலும் பரந்தபிரதேசத்தை குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மட்டுவிலில் உள்ள ஆயத்தடி என்ற பெயர் முன்பொருகாலத்தில் பரந்த பிரதேசத்தைக் குறிக்கப்பயன்படுத்திய பெயராக இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.


ஆயம் என்ற சொல்லுக்கு தமிழ்ப்பேரகராதியில் தோளியர் கூட்டம், இரகசியம், பறை, சூதாட்டம், மேகம், கருவி, பசுக்கள் ஒன்றுகூடும் இடம், ஆழமான குழி, குளம், வரி, வருவாய் அறவிடும் இடம் எனப் பலபொருள் கொள்ளப்படுகிறது. 10 ஆம் 11ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்களில் இச்சொல் பெரும்பாலும் வரி அறவிடுவதைக் குறிக்கிறது. இப்பின்னணியில் மட்டுவில் கிராமத்தில் உள்ள ஆயத்தடி என்ற இடத்தை நோக்கும் போது இதன் சுற்றாடலில் சிறுசிறு குளங்கள் காணப்படுவதால் அதன் காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதலாம். மேலும் இவ்விடம் பாரம்பரியமாக விவசாயத்தை முக்கிய பொருளாதாரமாகக் கொண்டிருப்பதால் விவசாயத்திற்குப் பயன்படுத்தி வந்த பசுக்கள் தங்கியிருந்த இடம் ஆயத்தடி என்ற பெயரைப் பெற்றிருக்கலாம் எனவும் கருத இடமுண்டு. ஆயினும் இங்கு வாழ்ந்துவரும் மக்களிடையே போத்துக்கேயர் காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்ட உள்நாட்டு, வெளிநாட்டு வணிகர்களிடம் இவ்விடத்தில் இருந்து வரி அறிவிடப்பட்டதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகவே இவ்விடம் ஆயத்தடி என்ற பெயரைப் பெறக் காரணம் என்ற நம்பிக்கையே மேலோங்கிக் காணப்படுகிறது

இன்று ஆயத்தடிக்கு சற்று வடக்கே உள்ள ஒரு இடம் வங்கவாடி என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் கடல்போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் கட்டுமரங்கள் இருந்த இடம் அல்லது ஒன்றுசேர்ந்த இடம் என்பதைக் குறிக்கிறது. இதற்கு அருகில் உள்ள இன்னொரு இடம் கல்வத்தை என அழைக்கப்படுகிறது. வத்தை என்பதும் கடல் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இன்னொரு கடற்கலனாகும். இவ்விரு இடங்களுக்கு அருகில் ஒரு இடம் கப்பல் தோட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வாதாரங்களை நோக்கும் போது வரி அறவிடப்பட்ட இடமே ஆயத்தடி என்ற இடப்பெயர் ஏற்படக் காரணம் என்ற அக்கிராமத்து மக்களின் கருத்தையும் நிராகரிக்கமுடியாதிருக்கிறது.


இயற்றாலையில் கிடைத்த உரோம நாணயங்கள்

பண்டுதொட்டு கடல்சார் வாணிபத்தில் ஈடுபட்ட உள்நாட்டு வெளிநாட்டு வணிகர்களிடம் இருந்து வரி அறவிடும் மையங்கள் பெரும்பாலும் கடற்கலன்கள் வந்தடையும் துறைமுகங்களை அண்டியே இருந்துள்ளன. இவ்விடங்கள் தமிழில் கடவை, ஆயம் என அழைக்கப்பட்டன. யாழ்ப்பாண அரசுகாலத்தில் தரைவழியாகவும், கடல்வழியாகவும் கொண்டுவரப்பட்ட பொருட்களுக்கான வரி அறவிடும் கடவைகள் பச்சிளைப்பள்ளி, வடமராட்சி, இலுப்பைக் கடவை, பூநகரி முதலான இடங்களில் இருந்ததாக யாழ்ப்பாண அரசுகால இலக்கியங்கள் கூறுகின்றன. இங்கே மட்டுவில் ஆயத்தடி அமைந்துள்ள இடம் தொண்டமனாறு கடநேரியுடன் இணைந்த ஒன்றாகக் காணப்படுகிறது. 19ஆம் நூற்றாண்டில் ஆனையிற வூடான தரைவழிப் பாதை தோன்ற முன்னர் பெருநிலப்பரப்பிற்கும், யாழ்ப்பாணத்திற்கும், வலிகாமத்திற்கும் தென்மராச்சிக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் அம்பனை, குடத்தனை, கட்டைக்காடு ஊடாகவும், கச்சாய் பூநகரி ஊடாகவும், கொழும்புத்துறை கல்முனை ஊடாகவும், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிக்கு இடையிலான தொடர்புகள் தொண்டமானாறு கடநீரேரிஊடாகவும் நடைபெற்றன.

இவ்வாறு நடைபெற்ற கடல்வழித் தொடர்பில் மட்டுவில் குறிப்பாக அங்கிருக்கும் ஆயத்தடி வரி அறவிடும் மையமாக மட்டு மன்றி முக்கிய துறைமுகமாகவும் செயற்பட்டிருக்கலாம். இதை உறுதிப்படுத்தும் மேலும் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரஙகளை இவ்விடத்தில் குறிப்பிடலாம். மட்டுவில் கிராமத்திற்கு சற்று வடகிழக்கே இயற்றாலை என்ற கிராமம் காணப்படுகிறது. இங்கு பரந்த அளவில் காணப்படும் கட்டிட அழிபாடுகளை ஆதாரம் காட்டி அதை சங்கிலி மன்னன் கட்டிய கோட்டையென அழைக்கும் மரபு காணப்படுகிறது. இவ்விடத்தில் 1994-95 காலப்பகுதியில் நாம் ஆய்வு செய்த போது அவ்வூர் விவசாயி திரு.சிற்றம்பலம் அவகள் மட்குடம் ஒன்றில் இருந்து கண்டுபிடித்த கி.பி 4ஆம் நூற்றாண்டுக்குரிய 700 உரோம நாணயங்களை எம்மிடம் தந்துள்ளார். நாம் தொடர்ந்து ஆய்வு செய்த போது இயற்றாலையில் கிறிஸ்தசகாப்த காலத்திலிருந்து பயன்பாட்டிலிருந்த கல்வெட்டுக்கள், புராதன மட்பாண்டங்கள், சோழர், பாண்டியர் கால நாணயங்கள் முதலியனவற்றை அங்கு சேகரிக்க முடிந்தது. இவ்வாதாரங்கள் இவ்விடம் ஒரு துறைமுகமாக அல்லது வணிக மையமாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. இவ்விடத்துடன் உரோமர் மற்றும் தமிழக வணிகர் தொடர்பை ஏற்படுத்த முள்ளியான் ஊடான பெருங்கடலும், தொண்டமானாறு கடநீரேரியும் வாய்ப்பாக இருந்திருக்கும் எனக் கருத இடமுண்டு.

கி.பி 12ஆம் நூறறாண்டில் பொலநறுவையில் ஆட்சிபுரிந்த முதலாம் பராக்கிரம்பாகு சோழருக்கு எதிராகப் படையெடுக்க தனது தமிழ், சிங்களப் படைவீரவகளை வடஇலங்கையின் முக்கிய துறைமுகங்களில் நிறுத்தி வைத்திருந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. தமிழகத்தில் உள்ள சமகால பல்லவராயன்பேட்டை, திருவாலங்காடு சாசனங்கள் இப்படைவீரர்களுக்கு எதிராக இரண்டாம் இராசாதிராஜ சோழனது படைவீரர்கள் வடஇலங்கையில் உள்ள மாதோட்டம், மன்னார், வலிகாமம், புலச்சேரி, மட்டிவாழ், ஊர்காவற்துறை ஆகிய துறைமுகங்கள் மீது படையெடுத்து அங்கிருந்த படைவீரர்களையும், யானைகளையும் சிறைபிடித்து தமிழகம் கொண்டு சென்றதாகக் கூறுகின்றன. பேராசிரியர் பரணவிதான, பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி ஆகிய அறிஞர்கள் சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மட்டிவாழ் என்ற துறைமுகம் தற்போதைய மட்டுவில் கிராமத்தில் அமைந்திருந்ததாக அடையாளப்படுத்தியுள்ளனர்.




யாழ்ப்பாண இராசதானி காலத்தில் கோப்பாய் அவர்களின் உபதலைநகராக இருந்ததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. அதனால்தான் இவ்விடம் கோப்பாய் (கோ-அரசன், பாய்-இடம்) என்ற பெயரைப் பெற்றது. போத்துக்கேயர் சங்கிலி மன்னனுக்கு எதிராகப் படை யெடுத்த போது அவர்களிடம் இருந்து தப்புவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி மன்னன் கோப்பாயி லிருந்த கோட்டையில் தங்கியிருந்து பின்னர் தொண்டமானாறு கடநீரேரி யூடாக மட்டுவிலுக்கு தப்பிச் சென்றதாக வரலாற்றிலக்கியங்கள் கூறுகின்றன. இதையுறுதிப்படுத்தும் வகையில் போத்துக்கேயர் கால ஆவணங்களில் போத்துக்கேயருக்கு எதிராக யாழ்ப்பாண மன்னர்கள் போரிட்ட போது அவர்களிடைய ஆயுதக் களஞ்சியங்கள் இருந்த இடங்களில் ஒன்றாக மட்டுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் கூட வலிகாமத்திற்கும் தென்மராச்சிக்கும் இடையிலான கடல்வழித் தொடர்பில் தொண்டமானாறுகடநீரேரீ மட்டுவிலுடன் கொண்டிருந்த முக்கியத்துவம் தெரிய வருகிறது.





இவற்றைக் கருத்தில் கொண்ட பிரித்தானியர் வலிகாமத்தையும், தென்மராச்சியையும் தரைவழியாக இணைக்கும் வண்ணாத்திப் பாலத்தை அமைத்தனர். அவர்கள் ஆட்சியிவ் இப்பாலம் பூதன்குழிப் பாலம் எனஅழைக்கப்பட்டது. இதுவே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட முதலாவது பாலமாகும்.

ஆகவே மேற்கூறிய வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு மட்டுவில் ஆயத்தடியின் அமைவிடம், கடற்கலன்களோடு தொடர்புடைய இடப்பெயர்கள், சாசன இலக்கிய ஆதாரங்கள், போத்துக்கேயர் கால ஆவணங்கள் என்பவற்றை ஒன்றுசேர நோக்கும் போது “மட்டுவில் ஆயத்தடி” முன்பொருகாலத்தில் ஒரு கடல்வழித் தொடபுக்கான துறைமுகமாகவும், வரி அறவிடப்பட்ட மையமாகவும் இருந்துள்ளமை தெரிகிறது. இதன் காரணமாகவே அவ்விடம் “ஆயத்தடி” என அழைக்கப்பட்டுவரக் காரணமாக இருந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளின் வெற்றிகளில் ஆசிரியர்களின் வகிபாகம் : சில பரிசீலனைகள்



பேராசிரியர் மா.சின்னத்தம்பி
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

**அறிமுகம் :**

பாடசாலைகளின் செயலாற்றல்கள் உற்பத்தித் திறன் மிக்கதாக அமையும் போது அவை தமது இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுகின்றன. இலக்குகளின் தரத்தை உயர்வாகத் தீர்மானிக்கின்றன. இலக்குகளை பன்முகப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டுகின்றன.

உற்பத்தித்திறன் என்பது வினைத்திறனையும், விளைதிறனையும் உள்ளடக்கும் எண்ணக்கருவாகும். வினைத்திறன் பாடசாலை தனது பல்வேறு வகையான உள்ளீடுகளையும் தனது செயன்முறைகளில் உத்தமமாகப் பயன்படுத்தும் ஆற்றலைக் குறிப்பிடுகின்றது. இது செயல் ஒழுங்குகளை மையப்படுத்தியதாகும். இதில் ஆசிரியரக்ளின் பங்கு எத்தகையதாதல் வேண்டும் என்பதில் இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது.

செயன்முறைகளின் ஒழுங்கு, இயலுமை, தொடர்ச்சி என்பன விளைதிறனைத் தீர்மானிக்கின்றன. இங்கு வினைத்திறன் என்பது பெறுபேறுகளை மையப்படுத்திய தாகும். அதாவது குறிக்கோளை அடையும் பாங்கில் குறுங்கால வெளியீடுகளையும் நீண்டகால விளைவுகளையும் அதிகூடிய திருப்தி மட்டத்தில் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் முகாமைத்துவ ஆற்றலைக் குறிப்பிடுகின்றது. இதிலும் ஆசிரியர்களின் வகிபாகம் அதன் தாக்க விளைவு என்பன பற்றியும் இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

பாடசாலைகளின் செயலாற்ற அளவு அதன் வளர்ச்சி வேகம், புத்தாக்கப் பாங்கம், பேண்தகு திறன் என்பவற்றில் ஆசிரியர்களின் வகிபாகம் செலுத்தக்கூடிய வினையாற்றல் நிலை பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வினைத்திறன், விளைதிறன் என்பவற்றுடன் பாடசாலையின் சமூக நீதி பற்றிய அணுகுமுறையையும் ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. அதாவது சரிநிகர் மற்றும் சமத்துவம் சார்ந்த இலக்குகளையும் எய்த வேண்டியுள்ளது. இவற்றை உறுதிப்படுத்துவதிலான முகாமைத்துவ அணியினரின் கவன ஈர்ப்பில் ஆசிரியர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர்கள் பாடசாலைகளைத் தீர்மானிக்கின்றனர்**

உண்மை ஈடுபாடும் தொழில் அக்கறையும் கொண்ட ஆசிரியர்கள் குவிந்திருக்கும் பாடசாலைகள் புகழ் பெறுகின்றன. வளர்கின்றன, சமூக ஆதரவைப் பெறுகின்றன, தம் இலக்குகளை எட்டுகின்றன.

ஆசிரியர்களின் ஆற்றல்மிக்க கற்பித்தல் மாணவர்பற்றிய புரிதல், கற்றல் உதவிகள், பொருத்தமான ஊக்கல்கள் என்பன மாணவர் தம் கற்றல் இலக்குகளை அடைதற்கு பெரிதும் உதவுகின்றன.

வாழ்வில் வெற்றிபெற்றவர்கள் தமது திறமைகளுக்குரிய வெற்றிகள் நல்ல ஆசிரியர்களின் வழிகாட்டல்களால் ஏற்பட்டதாகவே கூறுகின்றனர்.

ஆசிரியர்கள் சிறந்தவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு பின்வரும் அடிப்படையான பண்புத்தரங்களை அவர்கள் கொண்டிருப்பது அவசியம்.

1. சாதிக்க வேண்டும் என்ற இடையறாத உணர்வு - தொழில்சார் அறைகூவல்களை எதிர்கொள்ள இந்த உணர்வு உதவுகிறது.
2. கற்பித்தலுக்குரிய அறிவு மேலாண்மை - தர்க்க ரீதியாக சிந்திக்கும் வலுவை அதிகரிக்க உதவுகிறது.
3. அறிதல் தொடர்பான கோட்பாடுகளை தெரிந்து கொள்ளல் - தனது மாணவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ள உதவுகிறது.
4. தொடர்பாடல் அறிவும் திறன்களும் - பாட அறிவையும் மனவெழுச்சியையும் மனப்பாங்கையும் மாணவருக்குக் கைமாற்ற உதவுகிறது.
5. கற்பித்தலில் அதிகூடிய விருப்பமும், நகைச்சுவையுணர்வும் - மாணவர்களிடம் வாழ்நாள் முழுவதும் கற்பதிலான ஆசையை வளர்க்க உதவுகிறது.
6. நல்ல பண்புகளும் தொழில் விசுவாசமும் - மாணவர்களிடம் நல்ல பண்புகளை வளர்க்க உதவுகிறது.

ஒரு குறித்த பாடசாலையில் 80 சதவீதமான ஆசிரியர்கள் இத்தகைய அடிப்படைப் பண்புத்தரங்களை வளர்த்துக் கொண்டிருந்தாலும், பாடசாலை முகாமைத்துவம் அதற்கு வேண்டிய பாடசாலைச் சூழலையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கி வந்தாலும் அப்பாடசாலையின் செயன்முறைகளில் உத்தம தரத்தைக் காண முடியும்.

ஆசிரியர்கள் தமது கடதாசித் தகைமைகளை வைத்துக் கொண்டு வேதனத்துக்குரிய வேலையாக மாத்திரம் தம் பணியை மேற்கொள்ளும் நிலைமை காணப்படின் அப்பாடசாலை தம் இலக்குகளை அடைதல் சாத்தியமாகாது. அதன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் தரமும் உயர மாட்டாது. ஆசிரியர்கள் தமது அறிவு தொடர்பான தெளிவையும், தொடர்கற்றல் நாட்டத்தையும் கொண்டிருந்தால் பாடசாலைச் செயன்முறைகளின் வினைத்திறன் உயர முடியும். தமது எண்ணம், செயல், நடத்தை தொடர்பாக மாணவர் நலனுக்கு முன்னுரிமை வழங்குமிடத்து அத்தகைய ஆசிரியர்கள் மாணவரது வாழ்க்கையை மாற்றியமைக்கும் வகையில் அவர்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல்மிக்கவர்களாகி விடுகின்றனர். தொடர்ச்சியாகப் புதியவற்றை உண்மைவிருப்பத்துடன் மாணவர்களுக்காக கற்கும் தொழில் வாழ்க்கையை கொண்டுள்ள ஆசிரியர்களால் பாடசாலைகள் புகழ் பெறுகின்றன. வெற்றியடைகின்றன.

மாணவர்கள் ஆசிரியர் கூறுவதை கற்பிப்பதைக் கருத்தூன்றிக் கேட்கும் வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளும் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும். சிறந்த தொடர்பாடல் திறன்களை உத்தமமான இடைவினையுறவுகளுடன் பயன்படுத்தும் போது மாணவர்கள் தாம் பெற்ற அறிவை செயல்களாக மாற்றிக் கொள்வர். அதன்படியான வாழ்க்கை நெறிகளையும் பின்பற்றுவர். இதுவே நல்ல ஆசிரியரின் வெற்றியாகும். மாணவர்களது கருத்துக்கள், உணர்வுகள், உடல் மொழி என்பவற்றையும் அக்கறையுடன் புரிந்து கொள்ளும் ஆசிரியர்கள் மாணவர்களைச் சாதனைப்பாதைக்கு வழிநடாத்துகின்றனர். ஆசிரியர்கள் உண்மை, நேர்மை, தொழிற்பற்று, செயலில் உறுதி கொண்டு செயற்படுகின்ற பாடசாலைகள் தொடர்ந்து வெற்றி பெறுகின்றன.

மாறாக சில பாடசாலைகளின் தோல்விக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ வித்திடுகின்ற ஆசிரியர் அணிகள் காணப்படுகின்றன. இவர்கள் பின்வரும் பண்புகளையும், நடத்தைகளையும் கொண்டிருப்பர்.

•ஆசிரியர் தொழிலில் உண்மை நாட்டம் கொண்டிருப்பதில்லை.

•தமது தொழில் மதிப்புமிக்க தென்பதை அவர்களே ஏற்றுக் கொள்வதில்லை

•மாணவர் வளர்ச்சியில் தாம் எதுவும் செய்வதற்கில்லை என்று கருதுதல்

•மாணவர்களுக்கு நல்ல தெரிவுகளைக் காட்ட வேண்டிய பொறுப்பு தமது என்பதை ஏற்பதில்லை

•எப்போதும் எதிர்மனப்பான்மையுடனேயே எல்லாவற்றையும் அணுகுபவர்களாக இருத்தல் .

•மாணவர் உயர்ச்சி, தமது முன்னேற்றம், சமூக மேம்பாடு தொடர்பாக எப்போதும் அவநம்பிக்கை கொண்டிருப்பர்

•மாணவர்கள் பார்த்து பின்பற்றக் கூடிய உயர்ந்த தரம் வாய்ந்த நடத்தைகளையும் உளச்சார்புகளையும் வளர்த்துக் கொள்ள விரும்ப மாட்டார்கள்.

•தமது தொழில்வாழ்க்கையும் குடும்பவாழ்க்கையும் தனித்தனியானது என்று எப்போதும் நம்புபவர்களாக இருப்பர்.

இதன்படி ஆசிரியர்களின் தர வளர்ச்சியே பாடசாலைகளின் வளர்ச்சியை நிர்ணயிப்பதை உணர முடிகின்றது. சில ஆசிரியர்கள் பல தலைமுறையினரால் நினைவு கூரப்படுவதையும் பாடசாலை வரலாறுகள் காட்டுகின்றன.

**விளைதிறன் நோக்கிய ஆசிரிய செயற்பாடுகள்**

பாடசாலைகள் குறுங்காலத்தில் தமது வளங்களுக்கும், மாணவர்களின் கற்றல் திறன்களுக்கும் ஏற்றதாக கல்வி வெளியீடுகளையும், ஆற்றுகைச் சாதனைகளையும் நிலைநிறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய செயன்முறையில் ஆசிரியர்கள் செய்ய வேண்டிய பணிகள் (Tasks) அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இவை

1. தாம் கற்பிக்கும் பாடங்களை விரிவாகத் திட்டமிடுதல்.
2. மாணவர்கள் கற்பதற்கு மிகவும் பொருத்தமான சூழலைப் பாடசாலையிலும் வகுப்பறையிலும் உருவாக்குதல்
3. பிள்ளைகளின் கற்றல் மற்றும் பாடசாலை வாழ்வுக்குதவும் வசதிகள் பற்றிய மிகவும் ஆழமான கணிப்பீடுகளைச் செய்தல்

ஆசிரியரது தொழில்வாண்மை மாதிரியில் சுய வளர்ச்சியில் இடையறாது கவனம் செலுத்துதல்.

இவ்விளக்கத்தின்படி ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டிய செயற்பாடுகள் பின்வரும் வகையினதாக நோக்கப்படக் கூடியனவாகும்.

1. திட்டமிடல்
2. கற்றல் சூழலை உறுதிப்படுத்தல்
3. மிகவும் விரிவான கணிப்பீடுகளைச் செய்தல்
4. சுயமான தொழில் முன்னேற்றத்தை முன்னெடுத்தல்

**திட்டமிடல்**

ஆசிரியர்கள் தமது ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்தி மாணவருக்குச் சிறந்த முறையில் கற்பிப்பதற்கு திட்டமிடுதல் அவசியமாகின்றது. மாணவரது தேவைகளுக்கும் ஆற்றல் மட்டத்துக்கும் ஏற்றவகையில் கற்பித்தல் குறிக்கோள்களைத் தீர்மானிப்பதற்கு ஆசிரியர் தனது வகுப்பறை வேலையைத் திட்டமிட வேண்டியுள்ளது. மீத்திறன் மாணவர்களும் மெல்லக் கற்கும் மாணவர்களும் ஒரே வகுப்பில் இருப்பதால் அவர்களுக்குரியதாகக் கற்பிக்க திட்டமிட வேண்டும். கற்பதற்குரிய இடர்ப்பாடுகள் கொண்ட மாணவர்களையும் கவனத்திற் கொண்டு திட்டமிட வேண்டும். கற்பித்தலில் தொடர்ச்சி, போதுமான இடைவெளி என்பவற்றையும் மனதிற் கொள்ள வேண்டியுள்ளது.

போதனா குறிக்கோள்கள் பாட நுளைவுக்குரிய செயல்முறை, போதனா படிமுறை, மாணவர் அடைவு நிலையைக் கணிப்பிடுதல் போன்ற கற்பித்தல் செயல் ஒழுங்குகளையும் திட்டமிட வேண்டியுள்ளது.

பாடங்களைத் திட்டமிடும் போது கற்பிக்கும் எண்ணக்கருக்கள் பற்றிய புரிதலும், கற்பித்தல் செயல் ஒழுங்கு பற்றிய சிந்தனையும் இருத்தல் அவசியம். ஆசிரியர்கள் பாடங்களைத் திட்டமிடும் போது பின்வரும் படிமுறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

1. பாடத்தலைப்பைத் தெரிதல்
2. மாணவரது கற்றல் குறிக்கோள்களை இனங்காணல்
3. மாணவரது முன்னைய அறிவையும் அனுபவங்களையும் கருத்திற் கொள்ளல்
4. கற்பித்தல் ஒழுங்கு மற்றும் வகுப்பறைச் செயற்பாடுகளைத் திட்டமிடல்
5. தேவையான கற்றல் - கற்பித்தல் துணைகளையும் வகுப்பறை இடவசதியையும் கருத்திற் கொள்ளல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கற்பித்தலை மீளாய்வு செய்யும் முறையை நிர்ணயித்தல்
7. மீளாய்வு (மாணவர் மதிப்பீடு) பெறுபேற்றுக்கு அமைவாக கற்பித்தல் செயற்பாடுகளை மாற்றியமைத்தல்

திட்டமிடுதல் தொடர்பாக ஆசிரியர்களிடம் பின்வரும் இயலுமை காணப்படுதல் அவசியமாகிறது.

- பாடம் பற்றிய தெளிவு
- பாடசாலையினது கற்றல் சார்ந்த தத்துவம்
- பாடத்திட்டத்தின் கட்டமைப்பு

ஆசிரியர்கள் தமது கற்பித்தலினால் ஏற்பட வேண்டிய கற்றல் விளைவுகள் (Learning out comes) பற்றிய தெளிவான சிந்தனையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவை,

**தனிநபர் விளைவு**

மாணவர் ஒவ்வொருவரிடமும் புதிய அறிவை உருவாக்குவதும், தருக்க சிந்தனையை விருத்தி செய்வதும் அவசியமாகின்றது.

**சமூக விளைவு**

மாணவர்களை சிறந்த குடிமக்கள் பண்புடையவர்களாக மாற்றுவதும் சமூகத் தேவைகள் மற்றும் குறிக்கோள்களை புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாக மாற்றுவதும் அவசியமாகின்றது.

**ஆன்மீக விளைவு**

மாணவர்கள் இயற்கையை புரிந்து கொள்ளவும், அதன் ஆற்றல்களை விளங்கவும், அகநிலை குதூகலங்களை அனுபவிக்கவும் கூடியவர்களாக முன்னேற்றுவதும் அவசியமாகின்றது.

வகுப்பறையில் நுளைவதற்கு முன்பே இத்தகைய பலவற்றையும் அதிகூடிய அக்கறையுடன் பரிசீலிப்பவர்களும், திட்டமிடுபவர்களும் ஒரு பாடசாலையினது ஆசிரிய அணியில் அதிகமாக இருந்தால் அப்பாடசாலை வெற்றியடைவது சுலபமாகும்.

**சூழலை விளங்கிக் கொள்ளுதல்**

ஆசிரியர்கள் தாம் பணியாற்றும் சமூகச் சூழல் பற்றிய தெளிவான அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும். சமூகத்தின் கற்றல் சார்பான, பிள்ளைகள் சார்பான, கல்விசார்பான அணுகுமுறைகளையும் எதிர்பார்க்கைகளையும், முன்னுரிமைகளையும் சரியாக விளங்கிக் கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் அதிகமிருந்தால் அப்பாடசாலை சமூகத்தின் முழு ஆதரவையும் பெற்று வெற்றி பெறுதல் சுலபமாகி விடுகிறது.

பாடசாலைக்குள்ளும், வகுப்பறைகளிலும் நிலவுகின்ற பௌதிக சூழலையும், சமூக சூழலையும் புரிந்து கொள்ள வேண்டும். சமூக உளவியல் எவ்வகையில் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களின் நோக்கையும் போக்கையும் தீர்மானிக்கின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை விளங்கிக் கொண்டு அவற்றுக்குப் பொருத்தமான உத்திகளையும் அணுகுமுறைகளையும் நுட்பங்களையும் ஆசிரியர்கள் கையாளும் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கற்பனையான இலட்சியங்களைவிட யதார்த்த பூர்வமான இலட்சியங்கள் வெற்றிபெறும் என்பதையும் ஆசிரியர்கள் நம்புதல் வேண்டும். பிள்ளைகள், சகபாடிகள், சிற்றூழியர், பெற்றோர் சார்ந்த உறவு முறைகளில் சரிநிகர் (Equty) மற்றும் சமத்துவம் (Equality) பேணப்படுவதை விரும்பாத ஆசிரியர்கள் இருந்தால் பாடசாலை சமூக முரண்பாடுகள் வலுப்பெற்று பாடசாலை வளர்ச்சி புதிய நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை அதகிரித்து விடும்.

பாடசாலையின் உற்பத்தித்திறனும் சமூக நீதியும் முரண்பட்ட திசைகளில் நகராது பார்த்துக் கொள்ளும் ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அப்பாடசாலைகள் வெற்றிப்பாதையில் பயணிக்கின்றன. பாடசாலைகளில் விருத்தி செய்யப்படுகின்ற மொழி, தொடர்பாடல், நம்பிக்கை, பழக்கம், ஒழுங்கு, ஒழுக்கம்,நடத்தை என்பன அதன் பண்பாட்டை (School Culture) நிர்ணயிக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டு ஆசிரியர்கள் செயற்படுகின்ற பாடசாலைகள் அதிகம் வெற்றி பெறுகின்றன.

**கணிப்பீடுகளில் தேர்ச்சி பெறல்**

தனது மாணவர்களை வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ந்து கணிப்பீடு செய்கின்ற ஆசிரியர்கள் வெற்றியாளர்களாகின்றனர். மாணவர்களது கற்றல் சார்ந்த ஆற்றல்களைத் தொடர்ந்து மதிப்பிடுதற்கான கணிப்பீடுகளை தொடர்ந்து பதிந்து வைக்கும் ஆசிரியர்கள் அதிக வெற்றிகளைப் பிரசவிக்கிறார்கள்.

வகுப்பறைகளில் ஒப்படைகள், சோதனைகள், வீட்டு வேலைகள், தனிப்பட்ட பாடங்கள் தொடர்பான நாட்டம், தனித்துவமான திறமைகள் பற்றிய பதிவுகளைப் பேண விரும்பும் ஆசிரியர்கள் பிள்ளைகளைப் பற்றிய தரமான மதிப்பீடுகளைச் செய்யக் கூடியவர்களாகின்றனர்.

பிள்ளைகள் சார்ந்த பின்வரும் இயல்திறன்கள் பற்றியும் ஆசிரியர்கள் கணிப்பிடல் வேண்டும்

1. பகுப்பாய்வுத்திறமை
2. புத்தாக்கத்திறன்கள்
3. முயற்சி அல்லது செயல்முனைப்பு நிலை
4. உணர்வுகளையும் அறிவையும் சகபாடிகளுடன் பகிர்ந்து கொள்வதிலான உண்மை ஆர்வம்

கணிப்பீடுகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துதல் என்பது விபரங்களைப் பதிந்து வைப்பதன்று. அது பின்வரும் அம்சங்கள் சார்ந்த ஆசிரியர் பணிகளையும் உள்ளடக்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•மாணவர் பற்றிய சரியான தகவல்களை அறிதல்
•அவற்றை ஒழுங்கு முறையில் பதிதல்
•பதியப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்
•மாணவரது பலவீனம் மற்றும் பிரச்சினைகளை இனங்காணுதல்
•மாணவரது பலம் மற்றும் தனியாற்றல்களை துல்லியமாகக் கண்டறிதல்
•பலவீனங்களை அகற்றவும், தனியாற்றலை மேம்படுத்தவும் செய்ய வேண்டிய பணிகளை ஆசிரியர் திட்டமிடுதல்
•தனது கற்பித்தலிலும், மாணவர் தொடர்பு முறைகளிலும் வகுப்பறை முகாமைத்துவத்திலும் தனது புலக்காட்சியிலும் பொருத்தமான மாற்றங்களைச் செய்து கொள்ளுதல்.
•தேவையான வழிகாட்டல், ஊக்குவிப்பு, உதவி, உளவளத்துணை வசதிகள் என்பவற்றையும் தேவைப்படுவோருக்கு வழங்குதல்
•மாணவர் தொடர்பான தமது மதிப்பீடுகளை ஏற்ற வகையில் பெற்றோருக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் தெரியப்படுத்தல்
•மாணவருக்கு பல பாடங்களையும் கற்பிக்கும் சக ஆசிரியருடன் இத்தகைய மதிப்பீட்டு முடிவுகள் பற்றி நேர்மனப்பாங்குடனும், வெளிப்படையாகவும் கலந்துரையாடுதல்.
•பிள்ளைகளின் உளச்சார்பு (Attributes) கள் பற்றிய கணப்பீட்டையும் செய்தல் அவசியம். மாணவரது மாறுபடுகின்ற சூழல், மாறுபடும் பண்பு நலன்கள், மாறுபடும் நடத்தை, மாற்றமடையும் சகபாடிகள் (நண்பர்கள்) பற்றிய கணிப்பீடுகளையும் ஆசிரியர்கள் செய்தல் அவசியமாகின்றது.
•மாணவரது பண்புநலன் மற்றும் ஆளுமை தொடர்பாக நிகழும் மாற்றங்களுக்கு ஏற்றதாக ஆசிரியர் அவர்களுடனான தொடர்பாடலையும், இடைவினையுறவு களையும் மாற்றியமைத்தல் வேண்டும்.
•கற்றலில் நாட்டம் குறைவதை இனங்காணும் போது எவ்வாறு கற்றல் விருப்பத்தைத் தூண்டுவது என்பதிலும் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தேவையான போது பின்னூட்டல்களையும் பெற்று அதன்படி ஆசிரியர் செயற்பட வேண்டும். இத்தகைய ஒழுங்குமுறையில் மாணவர்சார் கணிப்பீடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எப்பாடசாலைகளில் அதிகரிக்கின்றனவோ அப்பாடசாலைகள் நிச்சயமாக வெற்றி பெறும். பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு மேலதிகமாக இத்தகைய செயலாற்ற ஈடுபாடுகளையும் ஆசிரியர்களிடம் வளர்த்தல் அவசியம் என்பதை உணர்தல் வேண்டும்.

கணிப்பீடு தொடர்பாக ஆசிரியர்கள் அதிபர் பெற்றோர் ஆகியோரிடையே ஒன்றிணைந்த செயற்பாடுகள் காணப்படுமாயின் மாணவர் தொடர்பான தீமைகளையும், அபாயங்களையும், தோல்விகளையும் பாடசாலைகள் வெகுவாகக் குறைத்துக் கொள்ள முடியும்.

**சுய முன்னேற்றத்தில் முனைப்புப் பெறுதல்**

அதிக தகுதியும் நல்ல குடும்பப் பின்னணியும் கொண்ட பல ஆசிரியர்கள் தொழில் வாழ்வில் போதிய முன்னேற்றம் அடைவதில்லை. மாறாக, ஓரளவு கல்வித் தகுதியும் பலவீனமான குடும்ப மற்றும் சமூகப் பின்னணி கொண்ட பல ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகளில் சிகரம் தொடுகின்றனர். இதற்குக் காரணம் தம்மைப் பற்றி சுய அவதானம், சுய அக்கறை, சுய விளக்கம், சுய திட்டமிடல், சுயமதிப்பீடு பெரும்பாலான ஆசிரியர்களிடம் இல்லாமையேயாகும்.

தமது பின்னடைவுகளுக்கு அதிபர்களையும் பாடசாலை நிர்வாகத்தையும் குறை கூறுவதில் தமது ஆற்றலை செலவிடுவதாலும் அதில் திருப்தி காண்பதாலும் தமது வளர்ச்சிப் பாதையை விட்டு பலர் தோல்விப் பாதைகளில் துயரத்துடன் நடந்து செல்கின்றனர்.

தொழில், தனிமனித வாழ்வையும், தனிமனித (ஆசிரிய) வாழவு தொழில் வளர்ச்சியையும் செழுமைப்படுத்த வேண்டும். வேலை - குடும்ப முன்னேற்றம் - உயர் கல்வி தொடர்பாக நல்ல சமநிலையை பேணுதற்குரிய வழிமுறைகளை ஆசிரியர்கள் திட்டமிட வேண்டும்.

மனிதவள நிபுணர்கள் கூறுவதன்படி பின்வரும் படிமுறைகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

•தம்மைப்பற்றிய வெளிப்படையான உண்மையான சுயமதிப்பீடு செய்தல்
•தமது எதிர்கால தொழில் வாழ்வு பற்றிய நுட்பமான திட்டத்தை தயாரித்தல்.
•தமது விரயங்களை இனங்கண்டு அகற்றுதல்
•தமது அபிவிருத்திக்குரிய உபாயங்களை வகுத்தல்
•தொழில் உயர்ச்சி உபாயங்களை செயற்படுத்துதற்கேற்றதாக தங்களை மாற்றுவதிலும், தமது சூழலை மாற்றுவதிலும் உண்மையான கவனம் செலுத்தி அதன்படி செயற்படுதல்.

பெரும்பாலான பாடசாலை ஆசிரியர்களிடம் இத்தகைய சுய முன்னேற்றம் பற்றிய சிந்தனையோ, தெளிவோ காணப்படுவதில்லை. ஆசிரியர்கள் தனியாகவோ, குழுவாகவோ ஒன்றிணைந்தோ சுய முகாமைத்துவம் (Salf Management) பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பாடசாலையொன்றின் பெரும்பாலான ஆசிரியர்கள் செயற்படும் போது அப்பாடசாலையில் ஆசிரியர் ஒற்றுமையும் ஆசிரியர் பணிநிலை வினைத்திறனும், நிர்வாகத்துக்கான ஒத்துழைப்பும் அதிகரித்து விடும். அப்போது அப்பாடசாலைகள் தமது இலக்குகளில் வெற்றியடையும்.

பௌதிக சூழலைவிட மானிட சூழல் ஆற்றல் மிக்கதுதான். இதனை உணர்ந்து ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்.

**முடிவுரை**

பாடசாலைகளின் வெற்றி என்பது பல மாதிரிகளில் இனங்காணப்படுகிறது. ஒரு பாடசாலை கிடையாகவும், நிலைக்குத்தாகவும் வளர்ச்சியடைதல் வேண்டும். ஆசிரியர் தொகையும் மாணவர் தொகையும் விரிவடைதல் வேண்டும். சமூகத்தின் எல்லாத் தொகுதியினரும் மாணவராகவும் ஆசிரியராகவும் ஒன்றிணைதல் வேண்டும்.
•பாடசாலை தனது உள்ளீடுகளை உத்தமமாக பயன்படுத்தும் செயற்பாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுதல் வேண்டும். தகவல், நேரம், நிதி, பௌதிக சொத்துக்கள் என்ற எல்லா வளங்களின் பயன்பாட்டில் வினைத்திறனை ஏற்படுத்துபவர்களாக எல்லா ஆசிரியர்களும் செயற்படும் போது பாடசாலை வளர்ச்சியடைகின்றது.

•பாடசாலையின் பாடக்கலைத்திட்டம் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் பெரும்பாலான ஆசிரியர்கள் வினையாற்றலுடனும் உண்மை ஈடுபாட்டுடனும் இலக்கு நோக்கியும், குழு உணர்வுடனும் நேர் மனப்பாங்குடனும் செயற்படும் போது வெளியீடுகளினதும் விளைவுகளினதும் தரமும், பரப்பும் அதிகரிக்கின்றது. இது அளவிடக் கூடிய பாடசாலையின் வெற்றியாகும்.

•பாடசாலை ஆசிரியர்கள் தமது எண்ணம், உணர்வு, சிந்தனை, நடத்தை, ஒழுங்கு, ஒழுக்கம், மொழி, தொடர்பாக மேன்மைப்பண்புகளை வளர்த்துக் கொள்ளும் போது பாடசாலையின் புகழும், வெற்றியும் வளர்ச்சியும் வளர்கின்றன.

•ஆசிரியர்கள் தனியாகவும் அணியாகவம் வளர்ச்சியடைதற்கான சூழலை உருவாக்குவதிலும் தமது சுய வளர்ச்சி பற்றிய முனைப்பை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டும் போது பாடசாலையும் வெற்றி பெறுகிறது. ஆசிரியர்கள் தாமும் முன்னேறுவதாக நம்பத் தொடங்குவர். பாடசாலையின் வெற்றிகளும் ஆசிரியர்களின் முன்னேற்றங்களும் பின்னிப் பிணைந்து வளர்கின்ற போது பாடசாலை அகல்விரிவான வளர்ச்சியைப் பெற்று விடுகின்றது.

•பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையிலான விரும்பத்தக்க தொடர்புகளை வளர்ப்பதில் பெரும்பாலான ஆசிரியர்கள் ஈடுபடும் போது அப்பாடசாலை பேண்தகு வளர்ச்சியை (Sustainable Development) உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

• •பாடசாலையில் மாற்றங்கள் ஏற்படும் போதும் சவால்களை எதிர்கொள்ளும் போதும் ஆசிரியர்கள் தாம் பாடசாலைச் சமூகத்தின் பிரிக்க முடியாத அங்கத்தவர் என்ற உணர்வுடன் செயற்படும் போது பாடசாலைகள் நிமிர்ந்தபடி பிரச்சினைகளிலிருந்து வெளியே வந்து மீண்டும் பிரகாசிக்கின்றன.

•பாடசாலைகளின் பெருமைமிகு விழாக்களில் தாம் உன்னதமான பங்கு வகிக்கும் பெருமையுடையவர்கள் என்று ஆசிரியர்கள் அனைவரும் மனதார நம்பும் போது விழாக்களினால் பாடசாலை புகழ்வரலாறு படைக்க முடிகின்றது.

•பாடசாலைகளின் நிர்வாகத்துடன் சில ஆசிரியர்களுக்கு அதிருப்தி ஏற்படும் போது வெளிப்படையாக அதிபருடன் கலந்துரையாடுவதில் நம்பிக்கை கொள்ளும் நடத்தைப் பண்பு ஆசிரியர்களிடம் வளர்ச்சி பெறும் போது பாடசாலையில் முறைசாராக் குழுக்களும் எதிர்மனப்பாங்கும் தேய்ந்து போகின்றன. பாடசாலை வெற்றி பெறுகின்றது.

•ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தமது தொழில் வாழ்க்கையின் பின்னணியில் பல எளிய ஆசிரியர்கள் இருப்பதை அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டும்.

•தமது பிள்ளைகளின் கல்வி பல ஆசிரியர்களின் கைகளில் விடப்பட்டுள்ளது என்பதையும் உணர வேண்டும்.

•தினமும் தமது அறிவுத் தேவைக்காகப் பல ஏழைச் சிறுவர்கள் வறுமையுடன் தமக்கு முன்னால் எதிர்பார்ப்புடன் நாளொன்றுக்கு சராசரியாக ஆறு மணித்தியாலங்கள் தமது தலையை உயர்த்தியபடி காத்திருக்கின்றனர் என்பதையும் அவர்களை ஏமாற்றுவது சமூகத் துரோகம் என்பதை ஆழ்மனதில் உணரத் தலைப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நன்றியணர்வு மற்றும் சமூக நீதி மிக்க உணர்வுகள் ஆசிரியர்களிடம் வளரும் போது அவர்களிடம் உத்தம பெறுமானங்கள் வளரத் தொடங்குகின்றன. இத்தகைய பல நிலைப்பட்ட மாறுதல்கள் ஆசிரியர்களிடம் வளரும் போது இயல்பாகவே அத்தகைய ஆசிரியர்கள் அதிகம் உள்ள பாடசாலைகள் வெற்றிப் பாதையில் பயணிப்பது சர்வ நிச்சயமாகிவிடும்.

சமூகமும், பாடசாலை நிர்வாகமும் கோட்ட, வலய, மாகாண கல்வி அலுவலகங்களும் ஆசிரிய சங்கங்களும் ஆசிரியர்களை மதிக்கும் போதும் அவர்களது முன்னேற்றங்களுக்குரிய புதிய வழிகளை பாராபட்சமின்றித் திறந்து விடும் போதும் ஆசிரியர்கள் நிச்சயமாக பாடசாலைகளின் வெற்றியை தமது தோள்களிலும், மனங்களிலும் வரலாறு முழுவதும் எடுத்துச் செல்வார்கள் என நம்ப முடியும்.

Reference :
1. Smith Lester.W.O (1957) Education, An Introductory survey, A pelican Book, Victoria. pp 150 - 185
2. Aggarwal J.C (2002) Principles, Methods & Techniques of Tenching vikas publishing house PVT Ltd. pp 77 - 94.
Aggarwal. J.C (1996) Teaching of commerce A practical Approach. Instructional Objectives of Teaching Commerce. ViKAS Publishing House PVT Ltd. New Delhi. pp 30 - 35.
Arun Kapur (2007) Transforming schools Empowering children, SAGE Publications LONDON. pp 103 - 129.
Everard.K.B and Geoffrey Morris (1996) Effective School Management, Managing quality, Health and safety, PCP Ltd, LONDON, pp 181 - 205.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்கலைக்கழக மாணவனாக...
1975 ஆம் ஆண்டில்



கலைமாணிச் சிறப்புப் பட்டம்



களனிப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிச் சிறப்புப் பட்டம் 1979 ஆம் ஆண்டில் பெற்றபோது..



யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்
கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றபோது...(1991)




யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப்
பட்டம் பெற்றபோது. (2002)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியராக...








பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்றபோது...




முதுகல்விமாணிப் பட்டம் பெற்றபோது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபராக...




கிளிநொச்சி இந்துக் கல்லூரியில்..







பளை மத்திய கல்லூரியில்... சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வாழ்வில்...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு விழா தலைவர் அ.கயிலாயபிள்ளையுடன் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் திரு.சந்திரசேகரா ஓய்வு நிலை அதிபர் திரு.கணேசலிங்கம் அவர்களுடன்...



இந்து சமய கலாசாரத் திணைக்களமும் திவ்விய ஜீவன சங்கமும் அதிபரைக் கௌரவித்தல்



சங்கத்தானை முருகன் ஆலயத்தில் அதிபருக்கு பென்னாடை போர்திக் கௌரவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகளில்...



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இல்ல விளையாட்டுப் போட்டியில் கோட்டக்கல்வி அலுவலர் திரு த.குருகுலராஜா
தற்போதைய கல்வி அமைச்சர் உரையாற்றுகிறார் (1994)



வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.வ. செல்வராஜாவின் பிரியாவிடையின் போது அதிபர் சங்கத் தலைவராக எமது அதிபர்....



மேலதிக அரசாங்க அதிபர் திரு.ச.சிவசாமி ,துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், வலயக்கல்விப் பணிப்பாளர்
திருமதி.றெ.இருதயநாதன் ஆகியோருடன் எமது அதிபர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைக்கான பேருந்து கையளிக்கும் நிகழ்வின்போது...



கல்லூரியின் ஸ்தாபகர் சிலையை
ஆக்கிய சித்திர பாட ஆசிரியருடன்...



கல்லூரியின் ஆங்கில தின நிகழ்வின்போது -2012



கல்லூரி மாணவர் ஒன்று கூடல் நிகழ்வின்போது.... (2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிபர் தலைமையில் கல்லூரியின் நிறுவுநர் நாள் 2014



இல்ல விளையாட்டு நிகழ்வின்போது (2014)...



அதிபர் பிரதீபா பிரபா பட்டம் பெற்றபோது...(2014)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்டனாக கல்லூரியில் வரவேற்ற போது...
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரிய மாணவ நலநோம்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்வின் போது...



நவீன கலையரங்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவின்போது....



கல்லூரிக்கான பான்ட் வாத்தியங்கள் கையளிக்கும் நிகழ்வின் போது...

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிகழ்வுகளில்...



கல்லூரிக்கான நவீன கலையரங்க அடிக்கல் நாட்டு விழாவில் விருந்தினர்களை அழைத்து வரும் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளக ஒளி அமைப்பு ஆரம்பித்தல், சிறுவர் பாதுகாப்பு நிதியப் பொறுப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வேதநாயகம், அதிபருடன்...



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி கண்காட்சிக்கு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் மங்கல விளக்கேற்றல்



ஜேர்மன் தூதுவர் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளித்தல் நிகழ்வின்போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரியில் பிரிவுபசார நிகழ்வின் போது...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்




யாழ்/சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர்

உயர்திரு. அருணாசலம் கயிலாயபிள்ளை

B.A.HONS, PGDE.M.Ed, SLES - I, SLEAS-III, JP

அவர்களின்

# மணிவிழா



காலம்: 22-02-2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப. 9.00 மணி
இடம்: பாடசாலை அருணாசலம் மண்டபம்

தலைமை

திரு. ந. பாலச்சந்திரன் அவர்கள்

(பிரதி அதிபர், யாழ்/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

## நிகழ்ச்சிநிரல்

சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி ஆலயத்திலிருந்து விழாநாயகரை மங்கல வாத்திய சகிதம் அழைத்து வரல்

மங்கல விளக்கேற்றல்
இறைவணக்கம் :- சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகள்

மங்கல இசை :- ஈழநல்லூர் பாலமுருகன் குழுவினர்
K. M. பஞ்சாபிகேசனின் பேரர்கள்

வரவேற்பு நடனம்:- சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகள்

வரவேற்புரை :- திரு . ஆ. தங்கவேலு அவர்கள்
(செயலாளர் . பாடசாலை அபிவிருத்திக்குழு)

ஆசியுரை :- சிவஸ்ரீ. சி சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள்

தலைமையுரை :- திரு.ந. பாலச்சந்திரன் அவர்கள்
வாழ்த்துரைகள் :-

மலர் வெளியீடு :- திரு. ச. லலீசன் அவர்கள்
(உப அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

**விழாநாயகரைக் கௌரவித்தல்**

ஏற்புரை :- விழாநாயகன்
நன்றியுரை :- திரு. யோ. ஜெயக்குமார்
(செயலாளர், மணிவிழாக்குழு)

## வாழ்த்துரை வழங்குவோர்

திரு. க. ஜெயவீரசிங்கம் அவர்கள்
(தலைவர், சாவ. இந்துக்கல்லூரி ஆசிரியர் சகோதரத்துவம்)
திரு. இ. கயிலைநாதன் அவர்கள்
(முன்னாள் அதிபர் சாவ. இந்துக்கல்லூரி)
திரு. க. அருந்தவபாலன் அவர்கள்
அதிபர் சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி
(தென்மராட்சி அதிபர்கள் சார்பாக)
திரு. வ. ஸ்ரீபிரகாஸ் அவர்கள்
(தலைவர், கைத்தொழில் வணிக மன்றம், சாவகச்சேரி)
திரு. சி. சிவனேஸ்வரன் அவர்கள்
(தலைவர், அதிபர் சங்கம், வடமாகாணம்)
திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்கள்
(வலயக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)
திரு. வ. செல்வராசா அவர்கள்
(முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்)
திரு. ஆ. இராஜேந்திரன் அவர்கள்
(வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் )
திரு. ச.சத்தியசீலன் அவர்கள்
(செயலாளர், வடமாகாண கல்விபண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு)
பேராசிரியர் ப. புஸ்பரத்தினம் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் கா.குகபாலன் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் க. கந்தசாமி அவர்கள்
(யாழ் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
கௌரவ கே. சயந்தன் அவர்கள்
(வடமாகாணசபை உறுப்பினர் )
கௌரவ ப. அரியரத்தினம் அவர்கள்
(வடமாகாணசபை உறுப்பினர் )
கௌரவ த. குருகுலராசா அவர்கள்
(வடமாகாணக் கல்வி அமைச்சர் )
கௌரவ சி. சிறீதரன் அவர்கள்
( யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சமைப்பு:-சத்தியா பிறிண்டேர்ஸ்,யாழ். தொ.இல:0771386661

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org